உ

கடவுள் துணை.

தஞ்சாவூர்

பெரிய மார்க்கண்டேயர்

திவ்விய சரித்திரமாகிய

நாடக அலங்காரம்.

நான்காவது ஆறுபிரிவுகளடங்கிய

நூதனபதிப்பு.

தஞ்சைமாநகரைச்சார்ந்த கும்பகோணத்திலிருக்கும், சங்கீத சாஹித்ய பரத நாட்டியத்திற் சிறந்தவராகிய ம-ரா-ரா-ஸ்ரீ, நரசிம்ம ஐயரவர்களால் இயற்றியதுடன் நாகரீகத்திற்சிறந்த இச்சென்னையின்கண்முன் நாடகம் நடாத்திய உபாத்தியாயர் நாராயணசாமி நாயுடு மேற்படியூர் வீராசாமி நாயுடு, சிர்காழி அருணாசல தேசிகர், அம்மன்பேட்டை வெங்கு இவர்களால் ஆடி வருகின்ற செட்டிலும், இப்போது நூதனமாய் பாடி வருகிற தருக்களுடன் சேர்த்து திருச்சிராபுரம் - ம-ரா-ரா-ஸ்ரீ, வீ. துரைசிங்க தாசரவர்களால் இயற்றிய ஜாவளி, வர்ணமெட்டுடன் அநேக பூசை தருக்களுட னடங்கியிருக்கின்றது.

இஃது

ஜீ. ஆர். பாலைய நாயுடு அவர்களது

சென்னை-சூளை,

பாலவிர்த்தி போதினி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1911.

புத்தக விளம்பரம்.

இதிற் கண்டுள்ள புத்தகங்கள் தேவையானவர்கள் அடியிற் கையொப்ப மிட்டிருக்கும் எங்கள் கம்பெனியில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர்களுக்கு வி. பி. தபால் மூலமாகவும் அனுப்பப்படும்.

	ரூ.	அ.	ப.
ஸ்ரீமகா பாரத வசனம் 4-வால்யம்	4	0	0
ஆதிபர்வம் தனி	0	14	0
விராடபர்வம் தனி	0	8	0
கம்பராயண வசனம்	1	8	0
சோதிடப்பிரகாசம் மூலமும் உரையும்	1	0	0
பெரிய பரசாஸ்திரம்	1	0	0
வேமன்ன பத்தியம் 1000-ம் பாடல் உரையுடன்	1	0	0
வியாசவைத்தியம்	1	0	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
ஆஞ்சநேயர் பாகிரமம்	0	8	0
பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு (1500)	0	12	0
பபூன்ஸ்ஆக்ட் என்னும் அகட விகட மகாநாடகம்	0	6	0
தாவ்பீச்சு என்னும் சாலத் அஸ்ஞ சரித்திரம்	1	0	0
கற்புநிலை தவராத கரமசௌந்தரி	0	8	0
மன்மோகனக் கண்ணாடி	0	8	0
தூக்குமுக்கு தூபரதண்டி	0	10	0
குபேரபுரி	0	8	0
அகட விகட ஷோக்சுந்தரி	0	8	0
விசித்திர விஞவிடை	0	4	0
சந்திரவதனி	0	8	0
தண்டெஞரி	0	8	0
கண்டிராஜன் கதை	0	8	0
ஜாலரம்பை நீலலோசனி	0	8	0
ஜெகன்மோஹன பாலாமணி	0	8	0
அகட விகட விபசாரி	0	4	0
இலாகிரிப் பிரியரென்னும் குடியர் துயரம்	0	4	0

எங்கள் கம்பெனி மேல்விலாசம்,

ஜீ. ஆர். பாலைய நாயுடு அண்டு கம்பெனி,
நெ. 28. தோட்டிக்கலை குமரப்பமுதலி தெருவு,
சூளை, மதிராஸ்.

சிவமயம்.

மார்க்கண்டேயமுனிவரது

திவ்விய சரித்திரமாகிய

நாடக அலங்காரம்.

காப்பு.

விநாயகர் - துதி.

விருத்தம்-இ-ம்-ஈாட்டை.

சீரானதிருக்கடையூரமர்தலிங்க ஈசரதுசெய்லிவாழ்த்தி
பேரானசெந்தமிழால்மார்க்கண்ட மகாமுனிவர்பெருமைகூற
தீராதவிக்ஷ யெவையுந்தீர்க்குமபி ரமிமுதற்செல்வனை
காரணமாமுகத்தோன்கருணைமிகு கமலபதங்காப்புதானே.

அமுதலிங்கர்-துதி.

புவனமதில்மிருகண்டமாமுனிவர் தவத்துதித்துப்புனிதனுகி
தவமிகுத்தமறலியுடன்வாதுசெய்த மார்க்கண்டன்தகைமைகூற
குவலயத்திலுள்ளவர்க்குங்குழந்தை கொடுத்தருளிமனக்குறையக
கவனமிகுமமுர்தலிங்கர்கருணைபெற சரணமலர்காப்புதானே.

சுப்பிரமணியர்-துதி.

திங்கள்மதியவருலகுந்திருக்கடையூரமுர்தலிங்கர்திருத்தாள்போற்றி
பங்கயத்தைதிகர்வதனமார்க்கண்டன்பூசைசெய்தபழமைபாட [றன்
மங்களஞ்சேர்தினைபுனத்தில்மகிழ்ந்திருந்த குறவள்ளிமணவாளன்
துங்கமிகுபதத்தினையானவனிதன்னென்னுளந்துதிசெய்வேனே.

கலிமசள்-துதி.

அருகுபுனற்கொன்றைவில்வமாலையணிகடையூராடிகள்போற்றி
பெருமையுடன்பூசைசெயமார்க்கண்டன்றனைவெகுண்டுபிடிக்கவந்த
கருமையினன்றனையிடதுகாலா லன்றுதைத்தபெருங்காட்சிகூற
மருமலர்வெண்டாமறையிலுதித்தவள்ளிமேனிகலிவாணிகாப்பாம்.

அறிஞர் வணக்கம்.

ஒப்பிலாமணிமார்க்கண்டன் உணர்வுடன்பூசைசெய்து
தப்பிலாதமனிவென்ற தகமையாஞ்சரிதைதன்னை
செப்பமாய்பெரியோர்கேட்குஞ் சிறந்தநாடகமாய்ச்சொன்னேன்
இப்புவிதன்னிலுள்ளோரிதன்பிழைபொருத்திடரே.

விநாயகர் வருகிற-விருத்தம்.

சுந்தாமுனிமார்க்கண்டன் சோதியினடிவணங்கி
வந்தனஞ்செய்யயீசன் மறலியையுதைத்தகாதை
முந்தவேபாடியாட முஷிகந்தன்னிலேறும்
அந்தரிதவத்துதித்த ஐங்கரன்வருகின்றாரே.

தீட்சதர்-விநாயகரை-தோத்தரிக்கும்

சுலோகம்.

சுக்லாம்பரதரம்விஷ்ணும் சசிவர்ணம்சதுர்புஜம்
பிரசன்னவதனம்த்யாயேத் சர்வவிக்னோபசாந்தயே
அகஜானனமத்மார்க்கம் கஜானனம்ஹிர்நிசம்
அநேகதந்தபக்தானு மேகதந்தமுபாஸ்மஹே.

தரு-இ-ம்-மத்யமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிதேவருந்தோணினர்-ஆகுவிலேறி
ஆதிதேவருந்தோணினர். ஆதி

அநுபல்லவி.

பாதிமதியுங்கொன்றை நீதியுடனேயணியும்
பசுபதி உமையீன்ற கஜமுகவடிவுள
பகவனேயனுதினம் பரவியேதுதிசெய-ஆதி

மார்க்கண்டேயர் நாடகம்.

சரணங்கள்.

மார்பில்பூண
வைரப்பதக்கங்
ஆமோதனமாலை
அந்தமாகவே
தத்திமிதிமிதிமி

தூலிலங்க தங்கமிழைத்த
துலங்க மார்பிற்றரிக்கும்
அஸ்தகடகம்பூண்டு
விந்தைநடனம்புரி
தரிகிடதோமென-ஆதி

ஆதியில்வேதன்
அண்டபிண்டமும்படைத்து
பேதமுறுமலே
பத்தர்தவத்தி
சித்தமிரங்கியே

பூசித்து ஆயிரத்தெட்டு
நினைத்ததெல்லாம்
பெரும்வரந்தருமீசன்
லிங்கத்தரும்தந்திட
சத்திமிதிமியென-ஆதி

தந்தவதனமு
தனிக்குமங்குச
தொங்கிவயிர்சூலுங்க
தொந்திமிதர்கிட
தொந்தர்கிடதக

ணமங்குகரந்தனிலே
பணிந்துவிந்தையதான
தோரைவல்லபையுடன்வந்து
கொங்கிடகிடதக
தோந்திமிதிமியென-ஆதி

கட்டியக்காரன்-வருகிற-விருத்தம்.

தட்டிசல்லடமும்தொப்பை தட்டியும்பிரம்பங்கோலுஞ்
சட்டமாயிருக்கிக்கட்டி சற்சனரெவருமெச்ச
கிட்டராமிருகண்டேயர் சிருஷ்டிவரசல்காரர்க்கும்
கட்டியக்காரன்வந்து களிபடன்தோன்றினனே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரன்வந்தான் ஓய்யாரமாக
கட்டியக்காரன்வந்தான் ஸைஞ் ஸைஞ் ஸைஞ்.

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் கைதனிற்பிரம்புங்கொண்டு
மட்டில்லாப்புகழ்படைத்து வாழுமிருகண்டர்வாசல்-கட்டி.

சரணங்கள்.

கண்டவர்திடுக்கிடவே கைதனில்வெள்ளோதடியு
மட்டில்லாப்புகழ்படைத்து வாழுமிருகண்டர்வாசல்-கட்டி.

கட்டளைப்படிக்குவாசல் கார்ப்பேனென்று தீர்க்கமாக
சட்டமுடனேயிருந்து சாமிபராக்கென்று-கட்டி.

சிறந்தவெண்ணீறணிந்து சிவநாமத்தைப்புகழ்ந்து
மறையோதுமிருகண்டேய மகாமுனிவாசல்காக்கும்-கட்டி.

பரதசாரியனுக்கும்-கட்டியக்காரனுக்கும்-அகஸ்யவசனம்.

கட்டி-வ-ம். காலுவேதமும் ஆறுசாஸ்திரமும் பதினெண்புராண மும் இருபத்தெட்டாகமமும் மூப்பத்திரண்டு தருமமும் அறுபத் திநாலு கலைக்கியானமும் தொண்ணூற்றாறு தத்துவமும் மனுஷிக்கி யான முதலான சாஸ்திரமும் வழங்கிவருகிற தபோதனராகிய மிரு கண்டேய மகாமுனிவருடைய ஆச்சிரமமென்றறியாமல் தர்புர்யெ ன்ன தாகுர்யென்ன கணகணயென்ன சணசணயென்ன டாங்குடி ங்குயென்ன டப்புடுப்புயென்ன லொதாபிடாயென்ன சடபிடயென் ன டமடமயென்னகாணும் தடல்பிடல் பண்ணுறீங்கோ நீங்கலெல் லோரும் எங்கேயிருந்து வந்திங்கோ நீங்களார் சொம்பவும் கண்கா ட்சியாய் வழங்குறீங்கோ.

கட்டி. அது என்ன ஓய் கையில் சிமிள்போல வைத்துக்கொண்டு கிணுகிணு கிணுகிணு கிணுகிணு என்றது என்னடாமாமா.

பரத. தாளத்தினுடைய தொனியடா தொனி.

கட்டி. எவ்வளவு நிகளம் எவ்வளவு அகலம் எவ்வளவு வொயரம் முழம் இருக்குமா ஜாண் இருக்குமா.

பரத. அது என்னடா குட்டிச்சுவரே தாறுமாறாய் உளருகிறாய்.

கட்டி. தாளச்சுனி தாளச்சுனி தாளச்சுனி.

பரத. அல்லடா பாழுங்குட்டிச்சுவரே தாளத்தினுடைய தொனி யடா குட்டிச்சுவரே தாளத்தினுடைய சத்தம்.

கட்டி. அப்போதே சொல்லக்கூடாதா பாழுங்குட்டிச்சுவரே.

கட்டி. மாமடாமா அது யிருக்கட்டும் அதுக்குப்பின்னலே யிருக் குஞ் செவுறுக்கு முட்டுக்கொடுத்ததுபோலே மடமடா கிடகிடா என்றது என்னடாமாமா.

பரத. அது மத்தளத்தினுடைய வோசையடா அமட்டபுடிக்கு நரைச்ச குட்டிக்சுவரே.

கட்டி. சீரகம் போட்டிருக்குமா கரிவேப்பிலேபோட்டிருக்குமா மு ளகு போட்டிருக்குமா வெந்தயம் போட்டிருக்குமா பெரு ங்காயம் போட்டிருக்குமா உப்பு போட்டிருக்குமா உள்ள ங்கை அவ்வளவு இருக்குமா சல்லடை அகலமிருக்குமா த ம்பிடிக்கு எத்தனே தூட்டுக்கு எத்தனே பைசாவுக்கு எத்த னே அணவுக்கு எத்தனே பணத்துக்கு எத்தனே தம்பிடிக்கி சில்லரை குடுக்கிறயா வோய்.

பரத. என்னடா தாறுமாறாய் உளறுகிறாய் பாழுங்குட்டிச்சுவரே.

கட்டி. மத்தளத்தோசை மத்தளத்தோசை மத்தளத்தோசை.

பரத. அல்லா குட்டிச்சுவரே மத்தளத்தினுடைய தொனியடா தொனி-சத்தம்.

கட்டி. முன்னமே சொல்லக்கூடாதா நாயின்புடுக்கை சரிச்ச பாழு ங்குட்டிச்சுவரே அதுயிருக்கட்டும் நீங்களெல்லாம் ஆறுஓய்.

பரத. நாங்களெல்லாம் பாகவதாள்.

கட்டி. வீசை எப்படிகாணும் அரைவீசை என்னவிலே பத்துபலம் என்னவிலே அஞ்சுபலம் என்னவிலே நலமாயிருக்குமாஓய்.

பரத. என்னடா தாறுமாறாய் உளறுகிறாய்.

கட்டி. பாவக்காய் காணும் பாவக்காய்.

பரத. நாங்களெல்லோரும் விச்வாம்சர்கள்வோய்.

கட்டி. சிறகில்லாமல் எத்தனேயோசனை தூரம் பரப்பிங்கோ.

பரத. என்னவோய் மனுஷர்களுள் யாருக்காவது சிறகிருக்குமா.

கட்டி. பின்னே யென்னவோய் அம்சங்கள் வந்திருக்கிறேமென்று சொன்னீர்களே வோய்.

பரத. என்னடாஇங்கிதமறியாதவறப்பவாளித்தாயோழி என்னென் னமோஎண்ணிப்பேசுகிறாய் நாங்கள் சிவபக்தியான கதைக சள் கீர்த்தனங்கள் பாடப்பட்ட பாகவத சிரோன்மணிக ளடா அப்பா.

கட்டி. சிவசிவாசிவசிவ்வா அபசாரம் அபசாரம் சமஸ்த அபசாரம் க்ஷமிக்கவும் சிவனடியார்களே ஆநடைய கோபம் பொருத் தாலும் சிவனடியார்கோபம் பொறுகைபடாது இவ்வளவு ஆடர்ந்த வனத்திலே புகைநுழையாத குகையைத்தேடி எங்கே வந்தீர்கள்.

பரதர்-இந்த ஆச்சிரமத்திலே சிவபக்தருக்கு மிகுந்த உபசாரம் நடக்கிறதென்று கேழ்விப்பட்டுவந்தோம் மகாபிரபு.

கட்டி - இவ்வளவுதூரம் பிரயாசைப்பட்டு வந்தீர்கள் பரதசாஸ்திரத்திலே நந்திபரதம் அனுமத்பரதம் நாதபரதம் இராட்சசபரதம் அகத்திய பரப்பிரமப்பரதம் இந்த வகையிலே எதுகளிலே உங்களுக்குப் பாண்டித்தியமுண்டு

பரதர் - விக்னேசோண்மணியே எத்தனைகையினும் கொஞ்சங்கொஞ்சம் கூடியமாத்திர மறிந்திருப்போம்.

கட்டி - நீங்களறிந்த சாகங்களிலே யென்னென்னசாகம் உண்டு.

பரதர் - நாட்டை கௌசோசுனபரவி ஆனந்தபரவி இதுகள்தான் தெரியும்.

கட்டி - தாளங்களிலே எத்தனைவிதங்கள் தெரியும்

பரதர் - ஆதிதாளம், அடதாளம், ஜம்பைதாளம், திரிபுடைதாளம், ரூபகதாளம், திசரதாளம்மீசுரதாளம்இதுகள்தான்தெரியும்

கட்டி - இவ்வளவுதானு நான்கேட்கிறராகங்களில் ஒன்றுகிலுமில்லை

பரதர் - கீர்த்தனைச் சொல்லும் பார்ப்போம்

கட்டி - தர்புர்சாகத் தெரியுமா

பரதர் - கொள்ளைத்தின்று குசுவிட்டால் தர்புருயென்றுதான் வெடிக்கும் ஏதப்பா மகா வித்துவானுக விருக்கிறாய் தர்புர்சாகமா யிப்படிகேட்டது

கட்டி - ஆமா ஆமா அதுதான் புடிச்சுக்கோ புடிச்சுக்கோ

பரதர் - இன்னமென்னடா அப்பா

கட்டி - கோவில்களிலே சுவாமிகள் புறப்பாடாகும்போதுமுன்னே முன்னே கொண்டுவாராக்களே அந்தராகந்தெரியுமா

பரதர் - என்னடா அப்பா சொம்ப அபூருபமாயிருக்குது நாங்கள் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை இராகத்துக்கு வருவுண்டா ஆக்ரதியுண்டா சுவாமிபுறப்படும்போது முன்னேமுன்னே படக்வாவதுயென்னடா அப்பா அதிசயமாயிருக்குது

கட்டி - சாமிகள் புறப்படும் முன்னே முன்னே என்னவருகிறதுவை முக்கஞ் சொல்லுங்கோ பார்க்கலாம்

பரதர் - சுவாமி புறப்படும்போது நிசாண்கள் ஜல்லவட்டை மகரதோரணங்கள் சின்னமேளம பெரியமேளம் சாமரம் சுருட்டி இதுகள்தான் வரும

கட்டி - அதான் எதான் கடைசியிலே சொன்னீரே அந்தராகந்தான் புடிக்கிறோ புடிச்சுக்கோ

பரதர் - இத்தராகத்தைஎத்தனேரமில்சிட்டைபண்ணிக்கொண்டீர்

கட்டி - ஏண்டா அப்பா ஒருமாமாங்கம் பன்னிரண்டு வருஷகாலம் இராத்திரிபகள் அகோராத்தியு மாச்சுது

பரதர் - நல்லது இதுதானு இன்னமுண்டா

கட்டி - சத்திரத்து சாலேகளுக்கு விசாரணைக்கர்த்தாவாய்வைக்கிறீர் களே அந்தராகம் தெரியுமா

பரதர் - என்னடாப்பா வாசாமகோசரமா யிருக்குது இதுக்கெத்த னேகாலம் கர்த்தா யாரிடத்திலே சிட்சையப்பா.

கட்டி - என்னவோய் நம்மை கற்றறிமோழை யாக்குறீக்கோ வித் வாம்சாலெல்லாம் தாங்கள்தான் லோகத்திலே பெரியவுக் கோ நமக்கு எதிரில்லையென்று எண்ணிஒருவரையொருவர் பழிக்கிற வழுக்கந்தான் ஆயினும் நம்மிடத்தில் உங்கள் கை னயக் காட்டாதிருக்கோ ஐயா

பரதர் - ஆனு இத்தக் கேள்விகேட்ட இராகம் எந்த பாரதத்திலே யிருக்கிறது எங்களுக்குத்தெரியச்சொல்லுங் கட்டியக்காரா

கட்டி - ஒய்கல்லாயுகையாய்க்கேளுங்கள் இது ஆகாதபாரதத்திலே ஆதியந்த மற்ற காண்டத்திலே துராசார! பிரகரணத்திலே நிஷ்கண்டாகர பிரமாணத்திலே கீழ்வாய்லெக்க அத்தியா யத்திலேதான் யிருக்கும்வோய்

பரதர் - ஆஹா நன்முயிருக்குது இப்போர்ப்பட்ட கிரந்தங்கள் எங் களுக்கு தபசு பண்ணினதலு மகப்படாது இப்போர்ப்பட்ட கிரந்தகுகள் அபுரூபந்தான் நீர்கேட்டது மகாகருக்கமாய் தோண்ணப்படுது

கட்டி - நல்லது நீங்கள் இங்கேதானே யிருங்கள் நான்மிருகண்டே ய மஹாமுனிவருடைய சமயமபார்த்துவந்து உங்களை அழைத்துக்கொண்டுபோய் தரிசனம்பண்ணிவைக்கிறேன்

பரதர் - அப்படியே ஆகட்டும் போய்வாரும் பிள்ளாய்

கட்டியக்காரன் - பொதுவிருத்தம்

சுத்தமெய்ஞ்ஞானரூப சோதியினுணர்ச்சியாலே
நித்தமுந்தெளிவுண்டாகி சின்மயானந்தபூரை
நித்தமுமியற்றுமெத்த சேமமாய்வணங்கிப்போற்று
உத்தமமிருகண்டேயர் உதிதமாய்வசைபெயில்வாசார்

வசனம்.

மெய்ஞ்ஞான விளக்கத்தின் உணர்ச்சியாலே சித்தத்தில் தெளி ந்து பரமசிவனை நித்தமும்பணிந்து சேமஷ்மத்தைதப்பாமல்போற்றப் பட்ட உத்தமமகா முனிவரான மிருகண்டேயர்வருகிறதைக்காண்க

தரு-இ-ம்-சவுராட்டம் அடதாளம்

கண்ணிகள்

கட்டியமரவுரியுங்கையிற்றண்டுகமண்டலமு
மட்டில்லாதவங்கள்செய்யு மாமுனிவருந் தோணினர்
செஞ்சடைபஞ்சாட்சரமுந் தியானமுடனேதரித்து
மிஞ்சவேதங்களைசெய்ப மிருகண்டேயருந் தோணினர்
எண்ணில்லாசிஷ்யர்சூழ வேகமதாய்நடந்து
கண்ணில்கண்டோர்துதிக்க மிருகண்டேயருந் தோணினர்
கையினில்ஜெபமாலையுங் கனத்தவேதபுத்தகமும்
மெய்யினில்விபூதியு மிருகண்டேயருந் தோணினர்
பாதந்தனில்பாலகுறும்பு பாங்குடனேதான்றரித்து
தேசாஸ்திரமுழங்கிக்கொண்டு வேதியருந் தோணினர்

மிருகண்டேயர் கட்டியக்காரனுக்குச்சொல்

விருத்தம்

சொன்னமொழிதவரிடாத சுகுணகட்டியக்காராகேளாய்
நன்மனைதுடனேசென்று நன்மருத்வதியாளெண்ணுஞ்
சின்மயானந்தமெச்சுஞ் சேயிழையாளையிப்போ
தென்மையாஞ்சபைக்கழைத்து துரிதினில்வருகுவாயே

வசனம்

ஆகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா தேவதேவர்களு மெய்க்கத்தக்க கற்பினில்மிகுந்த என்பாரியாளான மருத்வதியை சபைக்கழைத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்

கட்டியக்காரன்சொல் வசனம்

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி

கட்டியக்காரன்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்

மெய்ப்பொருளிழியாளான மருத்வதிதாயேகேளாய்
செப்பெருந்தவத்தோர்மெய்க்குஞ் சீருள்ளமிருகண்டேயர்
ஒப்பெனுஞ்சபையைநோக்கி யுளமதில்மகிழ்ச்சியுற்று
இப்போதேவரச்சொல்லென்று மியல்புடனுரைத்திட்டாரே

வசனம்

ஆகோ வாருமம்மாதாயே உமது பிராணநாயகரான மிருகண்டேய முனிவரானவர் அதிக உச்சாகத்தோடு அருந்தவத்தோர்கள் நிறைந்திருக்கிற சபைக்கு அழைத்துக்கொண்டு அதிசிக்கிரமாய்வரச்சொன்னார் எனது பட்சமுள்ளதாயே

மருத்வதிசொல்-வசனம்.

ஆனால் அப்படியே வருகிறேன் கட்டியனே.

கட்டியக்காரன் சொல்-பொதுவிருத்தம்.

செஞ்சிலோரன்கெஞ்சி சேவடிதன்னேப்போற்ற
கொஞ்சிபமையினங்கள் கோகைமுன்னடமாட
நஞ்சியுண்டகண்டனை தேவனேயுள்ளாடி
மஞ்சினேபழித்தகூந்தல் மருத்வதிவருகின்றாளே.

வசனம்.

ஆகாகேளும் புண்ணியவான்களே மன்மதன் கொஞ்ச மயினினங்கள்கொஞ்ச நஞ்சுண்ட ஈஸ்வரனே தியானித்துக்கொண்டி நன்மனத்தோடி மகாபதிவிரதா சிரோன்மணியானமருத்வதி வருகிறவிதங்காண்க

தரு-இம்-மாட்டை-திரிபுடைதாளம்.

பல்லவி.

மாதுவந்தாள் மருத்வதிமாது வந்தாள்.

மாதுவந்தாளே மாமுனிவருங் சோதிமுதல்தொழும் தோகையாள்தவஞ் சரணங்கள்.

மல்கைக்கரசென்ன கூடவே ஆரணங்காடியே செய்யவே-மாது

முத்துச்சுட்டியும் கொத்துமோகன சித்திடைதனில் சிறந்தநல்லொளி

ரத்னத்தொங்கலும் மாலையசையவே பொற்சரிகைசேலை விசையவே அம்மன்-மாது

தண்டைச்சிலம்புடன் தானிலேதிகழ்ந் கொண்டைச்சுருளினில் கொத்துமுத்துச்சார

கொலுசுவெண்டயமும் திசைகள்பாடவே ரத்னகும்பியுந் மிசையவே அம்மாள்-மாது

அஞ்சொழுத்தினி கடிமையாமருந் நெஞ்சமெனுங்கருங் நிறைந்தமாதவம்

லாபம்பொருள்தனக் தவத்தோர்களிக்கவே கல்லியுருக்கியே பெருகியே அம்மன்-மாது

மருத்வதிவருகிற-விருத்தம்,

மேனகைரம்பையென்ன மெல்லியிந்திராணியென்ன
கானகமயிலுமென்ன கருங்குயிலன்னமென்ன
மீனினேப்பழிக்குங்கண்ணுள் மிருகண்டர்பாரிதாஜும்
வானுலகோர்கள்போற்ற வாகுடன்வருகின்றாளே.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

அம்மைவந்தாளே மருத்வதிவனத்தி
லன்னமென்ன அம்மைவந்தாளே

அநுபல்லவி.

செந்தாமரைபொற்பாதச்சிலம்புகலகலென்ன
சிலம்புகலகலென்ன அம்மைவந்தாளே,

சரணங்கள்

மதனும்ரதியுமென்ன வாசவன்சசியென்ன
இதமாய்மிருகண்டேயர் இனிதாய்க்கூடியே அம்

மேகலாபரணஞ்சூட்டி மேல்வளையொட்டியாணம்பூட்டி
பாகுசேர்மொழியாலீசர் பதம்நாடியே அம்

கொஞ்சுங்கிளியன்னமென்ன கோதையக்கரசேயென்ன
பஞ்சிலுமெல்லடியாள்கணவர் பாதம்நாடியே அம்

மருத்வதிமிருகண்டேயருக்குச்சொல்விருத்தம்.

சதுர்மறைபுராணனன்னூற் சாத்தியவிதங்களெல்லாம்
விதிவழியறிந்தேயோதும் வேதியாசரணமையா
பதினெனிலிருந்தனன்னீப் பாங்குடனழைக்கத்தூது
அதிதருசாய்விடித்த அகத்தியமுனைத்திடீசே.

வசனம்.

அகோவாரும் பிராணநாயகரே நாலுவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும் பதினெண்புராணங்களுஞ் சொல்லப்பட்ட முறைவழி வழுவாமல் ஆராய்ந்தறிந்து தெளிந்த உமதுபாதத்துக்குச் சரணஞ் சரணமையா இப்போது ஆச்சிரமத்திலே யிருக்கையென்னை அதிகதுரிதமாய்த் தூதுவிடுத்தழைத்தனுப்பிய காரணமேதோ அதனைத் திருவுள மகிழ்ந்துரைக்க வேண்டுமையா சுவாமி.

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல் விருத்தம்.

அன்னமேசெல்லக்கேளாய் அன்புடன்தேவலோகம்
மன்னவர்மதிக்கயானும் வாகுடனேகிவாரேன்
தன்னவர்தவத்தோர்தேவர் தரணியோரெவர்வந்தாலும்
உன்னதப்பதங்கள்போற்றி உபசரித்தனுப்புவாயே.

வ-ம். அகோவாரும் பெண்ணே என்பிராணநாயகியானமருத்வதிமாதேதான் தேவேந்திரமகாராஜன் சபைக்குப் போய்வருகிறேன்யூகாரவது அரிதேசிபரிதேசி தபசிகள் தேவர்கள் யாவர்வந்தாலுமவர்களை யழைத்துவந்து அர்க்கியபாத்தியாதி சோடசோபசாரங்கள் பண்ணியனுப்பும் பெண்ணே.

மருத்வதிசொல்-தரு-இ-ம்-உசேனி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னமென்றுனைப்பிரிந்திருப்பேன் முனிநாதா-சுவாமி
எப்படிநானிருப்பேன் இவ்வனந்தனிலேமுனிநாதா முனிநாதா

மிருகண்டேயர்-தரு.

கன்னல்மொழியேமின்னசேயெந்தன் பெண்ணே-மனங்
கலங்கிடவேண்டாங் குலங்களுக்கினங்கன்னே பெண்ணே

மருத்வதி-தரு.

வானவர்சபைநாடியெந்தன் முனிநாதா-போய்
வாறேனென்னுடன்நீருரைசெய்தீர்நாதா முனிநாதா

மிருகண்டேயர்-தரு.

கானகத்தில் தனித்திருக்கையெந்தன்பெண்ணே அடிகண்ணே
கலங்கிடவேண்டாஞ்சலுதியில்லாரேன்பெண்ணேஅடிகண்ணே

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்

அரிவையேசொல்லக்கேளாய் அயன்சபைதன்னிலிப்போ
தெரிவைநீவரவொண்ணாது தெய்வலோகம்போய்வாரேன்
பரிவுடன்சென்றுநானும் பாங்குடன் வருகுமட்டும்
கருணையாய்வந்தபோக்குக் கனியமுதளித்திடாயே

வ-ம் ஆகோவாரும் பெண்ணே மருத்வதி நீபெண்பிறவியான திலே தேவர்சபைக்கு வருவதுசிரமமல்ல ஆகையினாலே இவ்விட த்தில் யாராவது அருந்தவசிகள் வந்தால் அவர்களுக்கு கனிகாய் கி ழங்குகள் அன்னபானங்கள் கொடுத்து ஆதரித்துக்கொண்டு தைரி யமாயிருகானதிசிக்கிரத்தில்வந்து விடுகிறேன் பெண்ணேமருத்வதி

மருத்வதி-மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்

ஐயனேமுனியேயெந்தனன்புள்ளபிராணநாதா
வெய்யினில்நடந்தீராஞல் மேனியுபுருகிடாதோ
பையவேப்பசரித்துப் பணிவிடையாவுஞ்செய்ய
தையலாள்கூடவந்தால் தரணியிற்புகழுண்டாமே,

வ-ம் ஆகோவாருமென் பிராணநாயகரே நீர்நடக்கிற வழிகளி லேவேர்த்து விடாய்த்து கூளைத்தவேளையில் உபசரித்துக்கொண்டு நானுங்கூடவருகிறேன் உம்மைவிட்டுப்பிரிந்து ஒருநிமிஷப்போ தாவது இருக்கமாட்டேன் என்பிராணநாயகரே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அடாயப்பா காக்கையைக்கண்டால் பயந்திருப்பாள் கழுவுக் கென்றால் துணிந்திருப்பாளாம் பார்த்தீர்களா ஐயா பாசாங்குபண் ணுறதைப்பாருங்கள்

மிருகண்டேயர்சொல்-தரு-இ-ம்-கமாசு-ஆதிதாளம்

கண்ணிகள்

தெய்வலோகம்போய்வாரேன்சிந்தைகலங்காதே பெண்ணே
தையலர்க்கசகிமின்னேதந்திடுவேனென்கண்ணே தெய்வ

மருத்வதி - கரு

எப்படியும்மைநான்பிரிந்திருப்பேனேயென்பிராண நாதா
செப்பியமொழியைக்கேட்டு சிக்கெனவாடுதேஎன்நாதா எப்
போகமனம்வருமோஎன்பிராணநாதனேயென்சுவாமி நல்ல
ஆகமபுராணவேத மரிந்திடுவீரே எந்தன்நாதா எப்

மிருகண்டேயர் - கரு

பஞ்சுபோலமெல்லடிநோக பாவைகூடப்பாயோபெண்ணே
சஞ்சலம்படாதேபோக தயவுசெய்வாய்துரிதமாக பஞ்

மருத்வதி - தரு

கூடிப்பிரிவாருமுண்டோ கோதையர்மனங் கலங்க
ஆடியதேகம்நடுங்கு கையனேநானென்னசெய்வேன்-கூடி

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்விருத்தம்

சரணமென்றடிவணங்கும் தையலேசொல்லக்கேளாய்
வர்ணமாமணாடபங்கள் மாடமாளிகையரண்மனைகள்
தாணியிற்பெரியோர்செய்யும் தருமசாஸ்திரங்களுண்டு
அரனடிதொழுவோர்க்கெல்லா மதியுபசாரங்கண்டாய்

வ-ம் ஆகாவாரும் பெண்ணே மருத்வதி நான்போகிற மார்க்கத்திலேயே ஆனைகுதிரைமாளிகை கூடகோபுரம் அரண்மனைகள் அன்ன சத்திரங்கள் மிகுதியாயிருப்பதால் உபசாரத்துக்குயாதொருகுறைவுமில்லை நீயிவ்விடத்திலிருந்தானேயிருந்து அதிதி அப்யாகதர்களாராவது வந்தால் வந்தவர்களை யாதரித்துக்கொண்டு சுகமாய் வாழ்ந்திரும் பெண்ணே

மருத்வதி-மிருகண்டேயருக்குச் சொல்-விருத்தம்

சதுர்முகன்சபைக்குநீபோய் சகிதியில்வருவீரென்றன்
வதுவைகொண்டந்தநாளாய் மங்கைநான்பிரிந்ததில்லை
பதுமைசொல்கதையைப்போலேபாவைநான்தனியாளானேன்
புதுமலர்குழையிற்சூடும் புனிதனேசரணஞ்சுவாமி

வ-ம் ஆகாவாருமென் னன்புள்ள பிராணநாயகரே பிரமசபைக்குப்போய் அதிசீக்கிரத்தில் திரும்பி வரவேணும்உமக்குமாலையிட்ட நாள்முதல்இதுவரையு மிணைபிரிந்ததே கிடையாது பதுமை கதையிலே சொல்லுகிற கலையைப்பிரிந்த மானின்கதைபோலேயும் ஓடமேறிய பெரியகுருடன் கதைபோலே செய்விக்காமல் அதிசீக்கிரத்தில்வாருங் கொண்மைமாலையைச்சூடினன் என் குலதிரேஷ்டரே

மிருகண்டேயர் வ-ம்- ஆ-ஆ அப்படியே-அப்படியே

கட்டியக்காரன் சொல்-விருத்தம்

மங்கையின்மனதைத்தேற்றி மார்பில்முத்தாட்சம்பூண்டு
செங்கையில்வேதந்தாங்கும் சிரக்கவோர்தெண்டிகொண்டு
பொங்கமாமிருகண்டேயர் புனிதனுர்சபையைநோக்கி
சங்கரசிவனேயென்று தவமுனிவருகின்றாரே.

வ-ம். அகோகேளும் புண்ணியவான்களே இத்தப்பிரகாரமாய் விசனப்படுகிற தன்னுடைய பாரியாளைத்தேற்றி வேதபுஸ்தகமும் தண்டுகமண்டலமும் கையில்கொண்டு தேவசபையை நோக்கி மிரு கண்டேய மகாமுனிவர் நடக்கிறவிதங்காண்க.

தரு-இ-ம்-சங்காபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

வேதமுனி நடந்தாரே விண்ணோர்சபைக்கு வேதமுனி

அநுபல்லவி.

மாதர்சுட்கரசியம் மருத்தவமாதினை வைத்து
ஓதும்வேதமுறை உயர்ந்தபதம் அதித்து-வேத

சரணங்கள.

சிரசில்மகுட மிலங்க சிங்காரமாக
செபமாலை கையில்துலங்க
விரைவில்நடந்துதேச வேதமுனிவர்பேச
பரவியதென்றலும்வீச பரமானந்தஉல்லாச-வேத

நெத்தியில் நீரணிந்து வொளிபிரகாசித்து
வெளியெங்கணும் திகழ்ந்து
கையில்கமண்டலமும் கனிந்தமயில்தெர்ப்பையும்
வையகம்புகழவும் மனதுமகிழவும்-வேத

செங்காவனங் கடந்து சிவந்தமலை
சொல்லும்நீரோடையும் திடர்ந்து
பொங்கமுடனேயோடிப் புண்ணியசபையைநாடி
சங்கராபரணம்பாடி சதுர்முகன்பதிதேடி-வேத

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

வாசவன்பதியைநாடி மாமுனிசென்றபின்பு
நேசமாய்வனத்தில்வாழு நேரிழையிருவர்தாமும்
ஆசையாய்மருத்துவத்திப்பெண் அடைந்தஉல்லாசமத்தில்
மாசிலாதவத்தோர்போல மகிழ்ச்சியாய்வருகின்றாரே.

வ-ம். கேளும் பக்தி சிரோன்மணிகளே இத்தப் பிரகாரமாய் தேவலோக யாத்திரைநாடி மிருகண்டேய மகாமுனிவர் போன பின்பு வனவாசிகளான தேவகன்னியர் மிருந்த மனோ உல்லாசத் தோடு யாதொரு கல்மிஷமில்லாத மருத்துவியம்மானிருக்கிற ஆச்ர மத்தை நாடிவருகிற விதங்காண்க.

தரு-இடம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாரேரிஷிகன்னியர் உல்லாசமாகவந்தாரேரிஷிகன்னியர்

அநுபல்லவி.

செந்திருவைநிகரென்ன செம்பொற்பணிகள்மின்ன
விந்தைதாதியிவளென்ன மெல்லியர்களென்ன-வந்

சரணங்கள்.

காகபத்தினச்சுட்டியாடகாதிலணிந்த கவரத்னத்தோடமாட
வாகுவச்சிரக்கொப்புமிட்டு மாமதிகதிரும்தொட்டு
தோகைமுத்துவிக்கைபோட்டு சுத்துச்சடைபின்னல்விட்டு
சிற்றிடைதன்னிலணிந்த நல்லசரிகைசோலே பீலைடிடில்திகழ்ந்து
முத்துமாலையணிந்து குத்துமுலைக்கச்சணிந்து
வெற்றிமயில்போலணிந்து பத்தினிமீதில்மகிழ்ந்து
செம்பொன்வளைகரம்வீசிசிங்காரமாக சித்திரமொழிகள்பேசி
சம்பிரமவைபோகத் தையலாயிலாக
இன்பரசஉருவாக வந்திழுயினெதிராக-வந்தார்

மருத்வதி–தேவகன்னியர்க்குச்சொல்-விருத்தம்.

செந்திருவடிவேபோற்றி தேன்மொழிமாதேபோற்றி
கந்தனையீன்றுய்போற்றி கருணையங்கடலேபோற்றி
எந்தனோடாடிநீங்க ளிவ்வனத்தன்னிலேதான்
வந்தகாரியங்கள்தன்னை வாகுடனுரைசெய்வீரே.

வ-ம். அகோவாரும் சரணமம்மா தபோலட்சுமியோ பார்வதி யோ கருணவதியோ நீங்களார் எங்கேவந்தீர் வந்தகாரியத்தை இன் னதென்று சொல்லவேணுமம்மா.

மருத்வதி-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

எங்கிருந்துவந்தீர்	ரம்ம	நீங்கள்
எனக்கரியச்சொல்லவேணும்	தாய்	மாரே

தேவகன்னிகள்-தரு.

நன்மைமருத்வதியாரே	சொல்லக்கேளாய்	பெண்ணே
வனத்தைகாடிவந்தோம்	நாங்கள்	பெண்ணரசே

மருத்வதி-தரு.

வனத்தைகாடிவந்தீங்க	ளாரம்மா	தாயே
வானவர்பதியோநீங்கள்	சொல்வீர்	தாயே

தேவகன்னியர்கள்-தரு.

வானவர்மறைமுனிவர்	வந்துவணங்கும்	உமையாள்
மலரடிப்பூசைசெய்யும்	பெண்கள்	நாங்களே

மருத்வதி-தரு.

மலரடிப்பூசைசெய்யும்	பெண்களானால்	இந்த
வையகத்தில்வந்தசேதி	சொல்லுவீர்	தாயே

தேவகன்னியர்கள்சொல்-விருத்தம்.

வந்தகாரியங்கள்கேட்ட மருத்வதிமாதேகேளாய்
உந்தன்செய்தவத்தினாலே உளமகிழ்ந்திவிடம்வந்தோம்
சிந்தையில்மிகமகிழ்ந்து சிருடன்புசிப்பளித்து
விந்தைசேவுலகுக்கெம்மை விரைவினிலனுப்புவாயே.

வ-ம். அகோகேளும்பெண்ணே மருத்வதி தாயே உன்னுடைய பூர்வபுண்ணியவசத்தினாலே சந்தோஷித்து நாங்கள் இவ்விடத்திற்கு வந்தோம் இப்போது மெத்தபசியால் இளைப்பா யிருக்கிறது எங்க ளுடைய பசிதாகத்தைத்தீர்த்து எங்களை தேவலோகத்துக்கு அனுப் புமம்மா.

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

வாருமமுதுண்ண வளவிலே நிஷிமாதர்களே

அநுபல்லவி.

கோரமேனென்மேலுக்கு பாரமியாதையுடன்
ஆறுவகைசங்கள்பரிமாரியிருக்க தயவுசெய்து வாரு

சரணங்கள்.

மாலிலத்திலேசிறந்த கானகத்திலென்வளவில்
சீனிபச்சைதுவரையோடு ஆகெய்பரிமாரியிருக்கு வாரு
பூமிதனிலென்வளவில் சேமமுடன்வந்தீரோ
ஆமவடைபோளியின்ன மதுரசவகையிருக்கு வாரு

நீரணியுமாமரமே நித்தந்துதிவுத்தமரே
சீருடனென்வளவில் புளியாரைபரிமாரிருக்கும் வாரு
ஆயதினிலுள்ளவகை நேயமுடனுண்சமைத்த
பாயசமதீர பாயாசம்பரிமாரியிருக்கும் வாரு

மருத்வதிசொல்-விருத்தம்.

கன்னியரிருவர்நீங்கள் களிப்புடனெழுந்துவாரீர்
புண்ணியபஞ்சபட்ச பாயாசங்களுண்டு
உன்னிதமாய்த்தாம்பூல மூளமகிழ்ந்துருந்துவீர்கள்
தன்னியபசியையாற்றி தயையுடனடந்திடுரே.

வ-ம். அகோவாருந் தேவகன்னிமார்களே மகா சந்தோஷமாக எழுந்துவாருங்கள் பஞ்சபட்ச பரமான்னமும் பாகமாயிருக்கிறது உண்டு தாம்பூல தாரணங்கள் பண்ணிக்கொண்டு உங்கள் பசியை ஆற்றிக்கொண்டு தேவலோகத்துக்குப் போய்வாரும் கன்னியர்களே.

தேவகன்னியர்கள்சொல்-விருத்தம்.

வணங்கியமாதேமெந்த மாதவஞ்செய்யும்பெண்ணே
குணங்களாலுயர்ந்தமினே கொழுநருரெங்கேசென்றார்
மணந்திகழ்ந்துனக்குண்டான மக்களுமெங்கேபோனார்
இணங்கியிவ்வண்ணமெல்லா மெங்களுக்குறைத்திடுரே.

வ-ம். அகோவாரும் பெண்ணே மருத்வதி உன்னைப்போலே அருந்தவஞ் சிறந்தோர் மகா அருமையாக்கும் மேகா குணசாலியானவள் உன்குழந்தைக ளெங்கே யிருக்கிறார்கள் இந்த வரங்களும் உன்பிராணநாதர் எங்கேபோனார் சொல்லிவாரும் பெண்ணே மருத்வதி.

மருத்வதி-கன்னியர்க்குச்சொல்-விருத்தம்.

மெள்ளவேயிங்குவந்து விளுவியபெண்காள்நீவிர்
வள்ளலாம்பிரமதேவர் மகாசபைக்கேகினார்காண்
கள்ளமில்புதல்வரில்லை கடவுளருளிதாகும்
உள்ளதுசொன்னேனிப்போ உண்டருள்கூறுவீரே.

வ-ம். அகோவாரும் பெண்களா நீங்களென்னுடைய யோகட்சேமத்தை விசாரித்தீர்கள் சொல்லுதற்கு மிகுந்தஆச்சமாயிருக்குது ஆகிலும் கேளுங்கள் எனது பத்தாவானவர் பிரமசபைக்குப் போயிருக்கிறார் எனக்கு குழந்தைகள் இதுவரையிலும் கடவுளினுடைய திருவயில்லாமலிருக்குது யதார்த்தம் சொன்னேன் நீங்களிருவரும் தயவுசெய்து உங்களுடைய பசிதீரசாப்பிட்டு தாம்பூலம் தரித்துக் கொள்ளுங்கள் பெண்களே.

கன்னியர்கள்சொல்-தரு-பிலகரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பிள்ளையில்லாவீட்டில் புசிப்பதுபாவம்
பெண்கள்நாங்களிருவர் புசிக்கதவமழியும்-பிள்ளை

மருத்வதி-தரு.

பெண்கள்புசியாவிட்டால் பேதையேமனந்தேங்கி
அங்கமெல்லாமுருகி அனல்மெழுகாகுதிப்போ

தேவகன்னிகள் தரு.

அனலாயுருகுதென்று ஆருடன்சொல்லுகிறாய்
தினமும்பங்கப்படுவோம் தெரியவேஅமுதுண்டால்

மருத்வதி-தரு.

பங்கப்படுவதேது பாலோடன்னம்புசித்தால்
திங்கள்கங்கைசூடுவோர் திருவுளத்துக்கொப்பாரும்

தேவகன்னிகள்-தரு.

அன்னம்புசிப்பாயென்று அடிக்கடிசொல்லுகிறாய்
வான்கிளிமொழியேவேண்டாம் நாங்கள்போய்வாறோம்

மருத்வதி-தரு.

வேண்டாமையாயென்றுசொல்லி மாதர்கள்போராதே
அங்கமெல்லாமுருகி அனல்மெழுகாகுதிப்போ

தேவகன்னியர்போனபின்பு-மருத்வதிபுலம்பல்.

விருத்தம்.

ஆந்தமுள்ளயிளம்பருவ நிலைமைதாண்டி
அப்பாலேமுழுவய தானகாலம்
கந்தமலர்கொய்யவந்த மாதரென்னை
கந்தாயமென்றன்னங் கேட்டகாலம்
மைந்தரில்லாவீட்டி லன்னமுண்ணேமென்று
மாந்தர்களேகிட மிங்கமர்ந்தகாலம்

இந்திரசலபமுனிகாத னேகுங்காலம்
இவ்வனத்தில்தானிருந்து யேங்குங்காலம்
வந்தரிஷிகன்னிபசி யென்றகாலம்
மனையிலன்னமுண்ண மனதருந்தாக்காலம்
நித்தனேபாலெனக்குசுத னில்லையென்று
நிஷ்டூரம்பேசியவர் நீங்குங்காலம்
அந்தரத்திற்தானொருபெண் வாடுங்காலம்
அயனரியுமாலையிவ் வரியாக்காலம்
தொந்தமுள்ளவிக்காலப் பிழைகளாலே
துன்பமுற்றுவாடினே தோகைதானே.

இதுவுமது.

ஐங்கரன்குகனேபின்று அவிநயாரம்பூண்டி
கங்கையைச்சென்னிவைத்து கபாலமுஞ்சூலமேந்தி
மங்கையைபிடத்தில்வைத்து மிழ்விடைதன்னிலேறும்
சங்கரதமியேனிப்போ தயங்குதல்தகைமைதானே

வசனம்.

ஞானசுந்தாள் புருடன்மிருகண்டமாமுனி தெய்வலோகம் போனபிற்பாடு ரிஷி பத்தினிமார் வந்து பிள்ளையில்லாத வீட்டில் போசனமருந்தக் கூடாதென்று சொன்னபடியால் மருத்வதி தெய்வலோகம்போனே தன்னுடைய கணவனை நினைத்துப் புலம்புகிறவிதங் காண்க.

இம்சாபு-ஆதிதாளம்-கண்ணிகள்.

பிர்மதேவரா — னென்னசெய்வேன்
பிள்ளையில்லா — மலடாகினேன்-பிர்ம
தெய்வலோகம் — போனதாதனே-ஓரு
சேதிசொல்ல — வரவுங்காணேனே-பிர்ம
கன்னிமார்க — ளேசலாச்சுதே
கண்டதில — குனியலாச்சுதே-பிர்ம
காதுவேதமுஞ் — சொல்லக்கேட்டேன்
காதனைப்போ — லுருவாறிகிலேன்-பிர்ம

இதுவமருத்வதி-புலம்பல்.

ஐயையோ — கானென்னசெய்வேன் — அழுதுண்ணல்
பாவமென்று — தையலர்க — ளேகிப்போனாரே

குறத்தி உள்ளிருந்து குறல்கொடுக்கிற கெத்து.

கூடைமொறங்கட்டகோ-ஆபி-பச்சைக்குத்தலியோ-ஆபி

போனாதன் — வரக்காணேன் — புத்திகெ
மாறுதிப்போ — வானவர்க — ளேதுசெய்தாரோ
ஏதுசெய்தாரோ — வறியேன் — என்னைப்போல
பாவியித்த — மேதினியில் — காண்பதருமை

அருமையான தவங்கள்செய்து அந்திவண்ணனைப்
பணிந்து தருமமெறி யுணர்ந்தபாலனே
பாலனைப்பெற் றிடவென்றுல் பத்தாவுக்
கறுபதாச்சு ஞாலத்திலே எனக்குநற்பேத
நாற்பது வயதாச்சுதே நாங்களிதற்
கெண்ணசெய்வோம் தீர்ப்பதெங்கையோ இப்பாவத்தை
பாவத்தா லிருடேரிபோ பாழ்நரகிற்
காளாணுமே தேனிமார்க ளேசலாச்சுத்த
வாய்க்களிருவர் தலையின்மலையன் வரிந்திட்டானு
காய்க்குங்கேடா யாவேனும் தெய்வமே

இதுவுந்துறத்திமுன்புறம்பலில சொல்லிக்கொண்டு வருகிறகொத்து

பச்சைசிலமைருக்தோர் ஆபி கூடையில்லைமகட்ட-ஆயி

மருத்வதி-புலம்பல்-தரு-இ-ம்-மூகாரி ஏகதாளம்.

சங்காசங்கா-சிவ-சிவ சம்போசதாசிவனே-வந்த
மங்கையர்சொற்கேட்டுளத்தன் அங்கமுருகனதையோ
வேதமொழிதவரிபஞ்ச பாதகருடனகூடி பொல்லா
தீதக்குளாக்கியணிவர்தொரு மாதர்க்களேசவும்
என்னசெய்வேனே யோசிவனே எதுசெய்வேனையா-தேவ
கண்ணிமார்கள்வந்துதித்து கடுகினிலகிறோ
பிள்ளையில்லாருடனேமுகம்பார்த்து பேசதல்பாவமென்று-வந்த
வள்ளலார்சொற்கேட்டுளந்தல்ல உள்ளமுருகுதையோ
தண்டகாவனத்தோடிமிரு கண்டருடன்கூடி-நான்
தெண்டனிட்டுக்கொண்டோவிடையேறும் தேவனே அருள்புரிவாய்

இதுவும்-மருத்வதிசொல்விருத்தம்.

மெய்யவர்வாழ்வேபோற்றி வேலவர்க்குருவேபோற்றி
பையரவணிதாய்போற்றி பார்வதிபாகாபோற்றி
வையகத்தோர்க்கெல்லாம் வாமிகவளிர்ப்பாய்போற்றி
செய்யதிண்மலர்த்தாளேத்தும் செல்வனேயருவாயே.

தரு-இ-ம்-லோரம்புரி ஆதிதாளம்:

சிவசிவாயன் பூர்வத்தில் செய்தமாதவமேதோ
செல்வநிலைப்பாகி ஆனேனே
தவனெறியமறந்து தர்மநீதியிழந்து
சால்திமுறையைப் பழித்தேனே
எத்தனையோமாதவம் பெற்றிருந்தாலுமென்ன
எதிரேவருமோ கைலாசம்

புத்திரமித்திரரும் நித்தியகர்மங்கள்செய்வோர்க்கு
புகழுமோட்சமென்றுரே மாதர்
மைந்தரில்லாதவர்க்கு வருமோ சொர்க்கமென்று
மகிழ்துகண்ணியர் சொன்னீதி
நிந்தனைசெய்தவரை பிச்சையிடேன்போவென்று
நீதியில்லாதுரைசெய் தேனை
பிள்ளையில்லாமனையில் புகிப்பதுபாவமென்று
பெண்களுறைத்துபோது ரையோ
வள்ளலுக்கென்னற்குற்றம் மனதாரச்செய்தநில்லை
மாதர்க்கினைக்குடன் பட்டேன்
அன்னைபிதாக்களோகான் அனியாயமென்சொன்னேனை
அரிவையரென்னைப் பழித்தாரே
பண்ணியபாவமேதோ பாலனற்றவளானேன்
பரமர்கிருபையை பறியேனே
தீர்த்தயாத்திரைசெய்தால் சென்மசாபல்யமென்று
தெரிவையருரைத்துப் போனரே
ஆர்த்திஅரனுய்வந்த அந்திவண்ணன்சொற்பாதம்
அன்றேவணங்காமற் போனேமோ
இன்னமும்வரக்காணேன் இதயமகிழ்கணவன்
இத்தன்மையைச்சொல்லுவ தெப்போ
வண்ணிகரத்திலேற்று மாதவர்தம்மைநோக்கி
வனத்தில்தவம்புரிவ தெப்போ

கட்டியன்சொல்—வசனம்.

இந்த விதமாய் தனக்குப்புத்திரனில்லாத கவலையினாலே பரிதாபப்படுகிற மருத்வதிமாதின்முன் மதுரைகாட்டின் குறத்தி வருகிற விதங்காண்க.

விருத்தம்-இ-ம்-மோகனம் ஆதிதாளம்.

பொன்னுலகுமதுரைமீனாட்சி சுந்தரேசருடையகாட்டில்
தன்னுலகுமதனவெழிற்றிலதமுடன்வந்தனங்கள்விம்மிமேவக்காதில்
வன்னிலகுகொந்தளகலோலபளீ ரென்றிலகற்றோடின்ன
மின்னமழில்குறஞ்சிமாத்திரைக்கோல் கூடையுடன்வருகின்றாளே.

தெய்வலோகக் குறத்திவருகிற-தரு.
இ-ம்மோகனம் ஆதிதாளம்.

சுந்தரமானசுகிர்த குறவஞ்சிவந்தாள் சுந்தர
சென்தாமரைமுகமுந்-திலதமுந்தளதளென்ன
கந்தகளபம் பூசிகண்ணிலையிலாய்கைவீசி

செவியில்வோலைசிமிக்கி
அவனியுள்ளோரைமயக்கி
சரிகைச்சேலையிடையில்
மருவுமலருடையாள்
தெய்வலோகத்தில்சென்று
வைபகமதனில்நின்று

சிங்காரமாய்குலுக்கி
அன்பாய்குறிப்பலுக்கி-சுந்தர
சார்ந்தவண்ணநடையாள்
வந்தாள்பின்னற்சடையாள்-சுந்தர
செயக்குழல்கோல்கொண்டு
வாராள்குறப்பெண்ணின்று-சுந்தர

குறத்தி.

குறத்திசொல்-தரு-இம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.
வஞ்சிவந்தனளே-குறவஞ்சி வந்தனளே.

ரஞ்சிதமாகநல்ல
நெஞ்சில்நினைத்தகுறி
கஞ்சிக்கிவீடுதோறும்
கூடைகட்டலீயோ
தேடியெங்கிலுமிந்த
பச்சைசுத்தலீயோ
பிச்சைக்காரியென்று
கொச்சிமலீயாளம்
மெச்சிகீர்த்திபெற்ற
நல்லானமருதுவீரன்
எல்லாமெந்தனக்கண்டால்

மிஞ்சிநடைநடந்து
கொஞ்சியுரைத்துப்பழம்
கெஞ்சிகெஞ்சித்திரியும்-வஞ்சி
அம்மே கூடைகட்டலீயோ
நாட்டிலுங்கிடையார்கள்-கூடை
அம்மே பச்சைக்குத்தலீயோ
அச்சப்படாதீர்கள்-பச்சை
மச்சிலிபந்தர்
உச்சிதமுள்ளசித்ர-பச்சை
வல்லக்காட்டேரிசூரன்
பல்லபல்லக்கெஞ்சிடும்-பச்சை

செத்து.

வந்தாள்சிங்காரக்குறவஞ்சி மிகவாயிலர்ய்வந்தாள்
தத்திகடையிற்மிஞ்ச தாளிற்சிலம்புகொஞ்ச
விந்தைதரமஞ்ச விளங்குமன்மதன்கொஞ்ச
கந்தமிகுந்தநற் சுகந்தமலர்மிக
வணிந்தகுழையினி லிருந்துவண்டுகளுஞ்ச
அந்தமிகுந்தசு பந்தனில்வந்தவர்
சிந்தைதனிற்தறிந்து பகர்ந்திடும்
கதிரொளிமதிமுக நிதம்பெறுமதிசுக
வதிதுரிதநடையாய் மதுரமெனமொழியாள

தத்திமிதரிகிடதரிகிட செம்தரிதாகிடகரிகிடதகதரிகிடதொங்கிட
தரிகுகுதரிகுகு செம்தரிதக தரிகிட தகததிங்கணத்தோமென

தரு-இ-ம் சௌராஷ்டகம்-அடதாளம்.

எங்கள் சாரிகுறசாரிஜயே சாரிக் கெல்லா முயர்ந்தசாரிஜயே-எங்

அநுபல்லவி

கங்கைபாலர்வேளூர் செங்கைவேலவர்நாட்டில்
காலயிங்கிர்தலீலமங்கள் சீலர்எங்கள்சூழ்வளநாட்டில்-எங்க

குறத்திசொல்-வசனம்-

இச்சே குறத்தியடா ஐயே சொல்லுறேன் கேளடா ஐயே எங்கள் சாரியிலே அணித்திங்கிறச் சாரியல்லோ ஆணைத்திங்கிறச்சாரியல்லோ ஆமைதிங்கிறச்சாரிடா ஐயோநாக்கோச்சோசொல்கிறேன் கேளடா ஐயே எங்கள் சாரியிலே ஒலக்கையால் காதுகுத்தி உரலினுல் தக்கைபோடுகிறசாரி நாங்க அருந்தகாது தக்கையும் அராத காதுக்கு குணுக்கு போடுகிறசாரி நாங்கள் ஒன்னைவிட்டு சித்தப்பனே காட்டிக் கொள்ளுகிறசாரி நாங்கள் சுப்பிர மண்யருக்குப் பெண் கொடுத்தசாரி நாங்கச்சாரிக் கெல்லாம் மேலான உயர்ந்த சாரிடா ஐயே நாங்கள்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அடாமாமா குறத்தி சொல்லுகிறாள் இவாள்சாரி அணிதிங்கிறச்சாரியல்லவாம் அவங்கள் ஆணைதிங்கிறச் சாரியல்லவாம் இவங்கள் ஆமைதிங்கிறச் சாரியல்லவாம் அவங்கள் பூணைதிங்கிறச்சாரியல்லவாம் இவங்கள் ஒடுகிறசாரைப்பாம்படிச்சி திங்கிறச்சாரியாம் இவங்கள் சுப்பிரமண்யருக்குப் பெண்கொடுத்தச்சாரியாம் இவங்கள் சாரிக்கெல்லாம் மேலான உயர்ந்த பச்சை போடுகிறச்சாரி இவர்கள் அடமாமா.

குறத்திசொல்-வளப்பஞ்சொல்-விருத்தம்.

கங்கைமாநதியணிந்த கருணைசேர்சுந்தரேசர்
பொங்கமாய்வாழும்நாட்டில் பூவையர்மனதரித்து
தங்கியகுறிகள்சொல்ல தக்கநற்குறத்திமாது
வங்கணமிகுத்துவந்து வாசலின்வளஞ்சொல்வாளே.

வாசல்வளஞ்சொல்-தரு இ-ம் சாரங்கராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

வாசலிதுவாசலிது அம்மே வளமருளும் வாசலிது
வாசவருந்தேசிகரும் அம்மே மகிழ்ந்திருக்கும் வாசலிது
நேசசுந்தரேசர்நிதம் அம்மே நிறைந்திருக்கும் வாசலிது
ஆசையுடன்விண்ணவர்கள் அம்மே அருள்மிகுந்த வாசலிது
திங்கள்மதிசூரியனார் அம்மே சேர்ந்திருக்கும் வாசலிது
ஐங்கரனும்வல்லபையும் அம்மே அருள்கொடுக்கும் வாசலிது
அங்கையர்கண்வல்லபையும் அம்மே அமர்ந்திருக்கும் வாசலிது
இந்திரரும்வானவரும் அம்மே இசைந்திருக்கும் வாசலிது
தினைபுனத்தில்வள்ளிகந்தன் அம்மே சேர்ந்திருக்கும் வாசலிது
கனத்தஅபிராமியுடன் அம்மே கலந்திருக்கும் வாசலிது

சொர்ணவமணிகளது அம்மே சொரிந்திருக்கும்வாசலிது
நன்னாமாயஷ்டலட்சுமி அம்மே நடமாடும் வாசலிது
சித்தர்முத்தர்சிவஞானி அம்மே சிறந்திருக்கும் வாசலிது

இ-ம் காம்போதி விருத்தம்.

மங்கையர்க்கரசியான மருத்வதிமாதேகேளாய்
சங்கரன்உமையாளீன்ற சரவணபவனர்தங்கள்
நங்கையைக்கொடுத்ததெல்லாம் நாட்டினியாங்கள்செய்யும்
சங்கையைவிபரமாக சாற்றுவேன்கேளாயம்மே.

தரு-இ-ம் கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி,

சாரிவளஞ்சொல்வேன்கேளும் கேள்ரியம்மே
வெகுசாமர்த்தியமுற்றபேரை ஏமாற்றும்யெமதுகுற-சாரி

அநுபல்லவி.

பாதிம[illegible]ந்த பரமனெங்களண்ணனர்
பார்க்க[illegible]யிலும்விஷ்ணு பார்க்கில்முறைமைத்துனர் சாரி

சரணங்கள்.

பன்றிமறைப்பூனை[illegible]ள கொன்றனுதினம்வெதுப்பிப்
பட்சணஞ்செய்[illegible]ட லனுதினம்வளர்ப்போம்
தொண்டுமெதயாணகளை மூயல்விட்டுப்பிடித்து
துகளவிருந்துகட்கு கரிசமைப்போம்
அன்றியும்வள்ளிநாயகி ஓன்றியதிருமகளாம்
ஆறுமுகவேலவனுங் கூறிடுமருமகனும்-சாரி
வண்டுநக்கினமலரை கொண்டுவந்துகூந்தலில்
மணக்கஅலங்கிர்தமாய் முடிந்தரியோம்
வல்லமையில்லாதநாட்டுக் குறவெனக்கழுதை
வாய்பொருத்திப்பிடித்ததை யுண்டுமறியோம்
கண்டுகொள்ளுமபடிக்கெங்கள் குலவித்தையொருவர்க்கும்
காட்டாமலனுதினமும் பூட்டகமொடுசிறந்த-சாரி
மாமனைழில்லைகபிடித்து கொழுந்தனுடன்பகிர்ந்து
மருகிக்கருத்து மனமகிழ்ந்திருப்போம்
நேமமுடனேவெகு மானமுள்ளசாதிக்கெல்லாம்
நிலைமைதப்பினுலெங்க ளுயிர்மடிப்போம்
தீமையில்லாமாமிதன்னைவிக்கையில் தினமெண்ணித்தேர்வோம்
அதன்றிராத்தினிபேரு முறையானகீர்த்தி-சாவரி

பில்லிசூனியர்களெல்லாஞ்சொல்லி எடுப்போம்கைவிட்டு
பிரிந்தபொருளெல்லாம் வரவழைப்போம்
கொல்லிமலைவேலவனே மணந்துதினைப்புனத்தில்
கூசாமல்பாணைறி காத்திருப்போம்
மெல்லியரைக்கைக்குழுகக்குறி யுணர்த்தித்தினம்
வேளைவெகுமதிபெற்று மானமுடன்வாழுமெங்கள்-சாரி
[illegible]பஸ்தனமீதொருவர் கையிலுல்தடவிமெள்ள
தொட்டிழுத்தபோதுஞ்சற்றுங் குற்றமில்லையே
பையவேசங்குமணியே மாமன்மச்சான்தொட்டாலுகில்
பார்த்தவுடனேவருஞ் மிகுந்ததொல்லை
ஐ[illegible]மில்லாதபுலி பல்லைக்கையில்தாலியென்று
அந்[illegible]மாகவணிந்து சிந்தையில்நினைந்துகொள்ளும்-சாரி
கஞ்சிகூழொடுலெக்ரி வஞ்சகமில்லாமல்வாரி
கைநிறையவாங்கி மெய்நிறையவுண்போம்
புஞ்சமதியோதிடங் கொண்டுகிழங்குகளை
பிரியமுடனேயனுதினங் கெல்லுவோம்
எங்கள்மொழியை எல்லோரும்புகழுவோம்
யிங்கிதமிகுந்தய சங்கிதத்துடனேபாடும்-சாரி
தெய்வலோகத்துக் குறத்தி-ஞானசதிராளுக்குச்சொல்-மலைவளம்.

இ-ம் சாவேரி அடதாளம்.

பல்லவி.

மலைவளமுனக்குரைப்பேன் மாமுனிவர்சொற்படிக்கு
மாதரசேகேளடி அடியம்மே மாதரசேகேளடியோ-மலை

அநுபல்லவி.

சிலையெனும்சுந்தரிக்குச் செம்பொன்னிறமானமலை
தேசிமலைஎங்கள்மலைமேல்அடியம்மே தேசிமலைஎங்கள்மலையே-மலை

சரணங்கள்.

சந்தகம்நிறைந்தசொரு சாமிமலைஎங்கள்மலை
தாய்மாமலையுமலையே அடியம்மே தாய்மாமலையுமலைய-மலை
பச்சமலைபவளமலை பாசிபடர்ந்தமலை
பழனிமலையெங்கள்மலை அடியம்மே பழனிமலையெங்கள்-மலை
கொச்சிமலைகுடகுமலை கோசிகரும்வாழுமலை
கொல்லிமலையெங்கள்மலையடியம்மே கொல்லிமலையெங்கள்-மலை

கன்னிமலைகலைமலை காசினியோர்வாழும்மலை
கழுகைதமலையெங்கள்மலைஅடியம்மே கழுகைதமலையெங்கள்-மலை

இ-ம் சாவேரி அடதாளம்.

பல்லவி.

மலைவளஞ்சொல்லுகிறேன் கேளம்மா
அம்மே-அம்மே-அம்மே-நீயெங்கள்

அநுபல்லவி.

கலையும்புலிகளுமோர் துறையில்நின்று
கலந்துபுனலதை யருந்தித்திரிகின்ற மலைவ

சரணங்கள்.

யானைகள்தன்கோடுகள்கொண்டு மலையில்-மலையில்-மலையிற்குத்த
அங்குள்ளவிறல்களோடுவிண்டு தினம்-தினம்-தினமாய்
சோனைமழைபோலப் பெய்தல்கண்டு ஐவனம்-ஐவனம்-ஐவனம்
தூவிதோமில்பரணைநீயேநின்று குறத்தி-குறத்தி-குறத்தியர்கள்
கான்கத்துபட்சிகளைக்கடிகிக் கவண்கல்லார்முடிகியடித்திடும்-மலை
சிங்கத்துக்குக்கரிகள் நீர்மொண்டு-மொண்டுமொண்டுதிக்கையில்
சிந்தைமகிழ்ந்திவைகண்டு விநோதம்-விநோதம்-விநோதமென்று
அங்கத்மேலரிசுடர்நின்று வீசாமல்-வீசாமல்-வீசாமல்
வெம்புனலடர்சிதகானிழல்கொடுத்தின்று எங்கள்-எங்கள்-எங்கள்
வேலவர்துங்கவருளாலேபல்லுயிர்களும்சுகங்கொடுத்தொளிர்கண
வேதவேதங்களாராய்ந்து பெரியோர்-பெரியோர்-பெரியோர்
வந்துமேவிதவம்செய்துவந்தயிடத்தில் ஈசன்-ஈசன்-ஈசன்
மாதவர்க்குவாங்கள்கந்து போந்து-போந்து-போந்து
தன்பின்குவார்கையிற்கொந்தமனவியொடுபோமென்ப-மென்ப
தேன்றுமில்லாதென்தமிழ் கற்ற-கற்ற-கற்ற
ஈண்முகம்சொல்லு பெற்ற-பெற்ற-பெற்ற-மலை

மருத்வதி குறத்திக்குச்சொல்-விருத்தம்.

மாசிலாமணிபுரக்கும் மானிலமீதில்வைத்த
யோசனையாகவெங்கள் உசிதவாசலின்வளப்பம்
நேசித்துநீருரைத்தாய் நேரிழையாளேயெங்கள்
தேசிகர்புகழுஞசாதித் திறமையையுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாரும் என்வாசல் வளப்பஞ் சொல்லிவந்த பெண்ணே
மெத்த யோசனையோடு எங்களுசிதமான வாசலின் வளப்பஞ்

சொல்லி வந்தண்டு மகாசந்தோஷமாச்சு தாகிலுமுன்னுடைய குலாச்சாரத் தர்மங்களைச் சொல்லிவாருமம்மா சிரோன்மணியே.

தரு-இ-ம் சௌராட்டகம்-அடதாளம்.

பல்லவி.

எங்கள்சாதிகுறச் சாதியம்மேசாதிக்
கெல்லாமூயர்குல மென்குலமம்மே

அநுபல்லவி.

மங்கையில்வேளூர் செங்கைவேலர்வாழும்
மங்களஞ்சிலருள தங்கும்பாண்டிநன்னாட்டில்-எங்க

வசனம்.

அரஅம்மே நாங்கள் ஆனைக்காரிபூனைக்காரி ஆக்கிதின்கிற சாரியல்லோநாங்க சாரைப்பாம்பு பிடிச்சிதிங்கிற சாரியம்மே நாங்க அரையே எங்கசாரி மெத்தசுத்தமுள்ள சாரியம்மே.

சரணங்கள்.

நாட்டுக் குறவரைப்போல் காட்டு கிழங்கு திங்கமாட்டோம்-ஆ-ஐயே வண்டுநக்கிப்பார்த்த பூவையெச்சலென்று கூந்தலிற் சூட்டோம்-ஆ-ஆ பூட்டகமாயிங்கள் குலவித்தை யொருவர்க்குங் காட்டோம்-ஆ-ஆ-ஆ வெள்ளிபொன்னே யொரு பொருட்டாயெண்ணிக்கொண்டுடம்பினில் பூட்டோம்.

கையைக்காட்டிச்சொல்லிரேகை பார்த்துதேவருக்கு
கருத்தினில்நினைத்தபடி புரைத்துசிங்கியடித்துகத்துவோம்
மையைக்குத்துவோம் ஊரெங்கும்சுத்துவோம்
தொம்பைதெத்துவோம் பழங்கஞ்சிக்குகத்துவோம்-எங்

வசனம்.

இச்சேசொல்லுகிறேன் கேளடா ஐயே எங்கள்சாரியிலே நாட்டுக்குறவரைப்போல காட்டுக்கிழங்கு திங்கமாட்டோம்வண்டுநக்கிப்பார்த்தபூவை எச்சி லென்று கொண்டையில் முடியோம் எங்கள் மர்மத்தை எவர்களுக்குஞ் சொல்லோம் வெள்ளி பொன்னுரத்தினங்கள் மெத்தலுசந்தசாயெண்ணி உடமை பண்ணி பூட்டமாட்டோம்கையைக் காட்டிச் சொல்லி ரேகைபார்த்து தேவர்கள் கினைத்தபடிசொல்லுவோம் தெருவூர் சுத்துவோம் தொம்பை தெத்துவோம்பழங்கஞ்சிக்குகத்துவோம் நாங்கள் ஐயே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அடாமாமா குறத்தி|சொல்லுகிறாள் இவாள் சாரியிலே நாட்டுக் குரவரைப்போல் காட்டுக் கிழங்கு திங்கவே மாட்டாங்களாம் வண்டுநக்கிப்பூவை எச்சிலென்று இதோ முடித்திருக்கிறாளே அந்தக் கொண்டையில் முடிக்கவே மாட்டாங்களாம் பூட்டகமாய் இவாள்குலவித்தை ஒருவருக்கும் காட்டவே மாட்டார்களாம் அடாமாமா இவள்குலவித்தை எனக்குத்தெரியுமடா ஸ்ரீரெங்கத்திலே சித்திரைதிருவிழாவிலே முடிச்சி அவித்துவிட்டு ஜவான்கண்டு மயிரைப்பிடித்துக்கொண்டு வதக்குவதக்கு வதக்கெனுங் குப்புறத்தள்ளிவிட்டு உதைக்கும்போது அப்பவும் சொல்லமாட்டாங்களாம்இவள் குலவித்தை வெள்ளிப்பொன்னே உடம்பினில் பூட்டவேமாட்டாங்களாம் கையைக்|காட்டச் சொல்லி சேதைப்பார்த்து தேவருக்கு நிசைக்க குறிசொல்லுவாங்களாம் சுத்துவாங்களாம் தொப்பை தெத்துவாங்களாம் ஊர்கத்துவாங்களாம் பழங்கஞ்சிக்கிசத்துவாங்களாம் அந்தச் சய்யிறேமைக்கும் மாவிலேமாடக்குளியிலேஒத்த கொம்பு டேரூவிலே குறத்தியும்நானும் குடிசை போடயிலேயிவாள் சாரிக்கெல்லாம் மேலானசாரியடா மாமா.

கரு.

மாருமூலையைபெட்டிப்பிடித்தபோதிலுஞ்சற்றுமேயில்லை-ஆ-ஆ-ஐ
சங்குமணியைமாமன்மச்சான் தீண்டும்போதுவருங்கல்லை-ஆ-ஆ-ஐ
பாருலாவிநீதிநெறியாய்க்கார்ப்போம் திணைக்கொல்லை-ஆ-ஆ-ஐயே

மூன்கையில்தாலியென்று கட்டிக்கொள்வோம்புலிப்பல்லை
ஓவ்வொருகுறவனே ஏழெட்டுகுறத்தியாய்
உனக்கெனக்கென் ரோடியணைந்து
ஓடுவோம் கிட்டேநாடுவோம் மடிலில்மூடுவோம்
விடுவோம் லீலை கூடுவோம் எங்கள்

குறத்திசொல்-வசனம்.

இச்சே|சொல்லுகிறேன்கேள் ஐயே எங்கள் சாரியிலே மாருமயிரை எப்படிப்பிடித்தபோதிலுங் குற்றமேயில்லை சங்குமணியை மாமன் மச்சான் தொட்டால் உடனே வருங்கல்லை காருலாவும்பரணேரி காப்போம் திணைக்கொல்லியின் கையில் தாலி யென்று புலிபல்லை கட்டிக் கொள்வோம் ஓவ்வொரு குறவனே ஏழெட்டு குறத்தியாய் தூரத்திக்கொண்டு ஓடுவோம் கிட்டநாடுவோம் படலமூடுவோம்காரமப்பூசைகள் போடுவோமடா அய்யே நாங்கள்.

கட்டியன்-பொரு என்னசொன்னே.

கட்டியக்காரன் சொல்-வ-ம்.

அடாமாமா குறத்திசொல்லுகிறாள் இவள்சாரியிலே மாரு மலரை யெட்டிப் பிடித்தபோதிலும்குற்றமேயில்லையாம்சங்குமணி யைத்தொட்டால் உடனேவருந்தொல்லையாம் மார்க்கட்டில்கசாயி கடைநாயிக்கும் ஞெக்குமாட்டிகிட்டார் போலே உடனேவருமாம் சண்டைகாருலாவும்பரணேறிகாற்பாரா ராம் நீணக்கொல்லிமின் சையில்தாலியென்று புலிப்பல்லே கட் கொள்வாங்களாம் ஓவ் வொரு குறவணே ஏழெட்டு குறத்தியாட கூடி கும்பகோணத்தில் போனதுரை பங்களாவில் குடிஞைப்போடுவாங்களா பங்கள் ஓடுவாங்களாங்கிட்டே நாடுவாங்களாம்படல்மூடுவாக்கம் காமு பூசைபோடுவாங்களாம்மாமாயிவங்கள்.

குற-தி-அரையே காட்டரையேகாரு
ட-யெ-என்னகாடு-சுடுகாடா

குறத்தி-அரையே ஒப்பிரித்த அரையே எங்கள்சாரியையே-ஆ அறென்னறையே யெனையாண்டி பன்னீறே.

கட்டிய-நீணக்கொல்லிகாக்கிற குடியானசாதியா.

குறத்தி-ஆம்மையே ஆம்மையே அராபுரிச்சுக்கோ புரிச்சுக் கோ அரையே எங்கசாரி ஒழுக்கத்திலேரையே புலிப்பல்லி தாலி கட்டிக்கிருவமுறையே.

கட்டி-ஆ-ஆ-புலிப்பல்லிலே தாலிபண்ணிக்கட்டிக்கொள்வீர்களா.

குறத்தி-ஆம்மையே அப்புரித்தே அரையே ஆமக்கட்டிமேலே ஆ சைகொண்டு ஒருகொறவணே நூறுகொறத்தியாய் ஒக்குரல்கென்று ஓடி ஆடி அணேவோரையே ஊரெல்லாந்திரிவோரம் தாயேஊட்டுப் பறலேமூடி கொய்தாணேக் காட்டியுதவி உருமத்திலேயே குடிவரு முறையே.

கட்டி-என்னடா பகல்வேளையில் அப்படிசெய்யலாமோ

குறத்தி-ஆ-அரென்னரையே அரையே ஏங்கசாரி னெம்மஅர ங்கிவாளப்பட்டசாரியே

த ரு.

குறத்திகுளிகுளிக்க குறவன்காயந்தின்ப தூண்டு-ஆ-ஆ-ஆ-ஐயே மச்சான்கொழுந்தனுடன்படுப்போம்புருஷனேநீணத்துக்கொண்டு ஆமத்தொருஜாதிக்குபெண்கொடோமென்பமிதக்கண்டுஆஆஐயே எங்கள்வளப்புபெண்ணேசுப்பிரமணியர் திருடிக்கொண்டார்-ஆ-ஐ

ஆனைகரிக்கிருந்தாக்கால் பூனைக்கரிக்கிச்சிப்போம்-ஆ-ஆ-ஐயே
அடித்தகானகந்தன்னிலருங் கனிகாய்கிழங்குகெல்லுவோம். ஓ-ஐ
சுட்டு வெல்லுவோம் எங்கும் சொல்லுவோம்
பச்சை பாட்டுகள் சொல்லுவோம்

குறத்தி-சொல்-வசனம்.

இச்சே சொல்லேன் கேள்ரா ஐயே எங்கள் சாரியிலே சக்கரத்திப்பகையால் காயத்திலே நஞ்சைக்கலந்து தன்னைக் கொண்ணு போடுவாளென்று முன்னமே குறவனைத் தின்றுபார்க்கச்சொல்லி மறுபடி தின்போம் கொளந்தனுடனே புருஷன்போனால் நினைத்துப் படுப்போம் மற்றொருசாரிக்கி பெண்கொடோ மென்பதைக்கண்டு எங்கள் வளப்புப்பெண் வள்ளிநாயகியை சுப்பிரமண்யர் திருடிக் கொண்டார் பண்டு ஆனைக்கறியிருந்தால் பூனைக்கரிக்கிச்சிப்போம் நாங்கள் அடித்தகானகந் தன்னில் கிளங்குகளைக் கெல்லுவோஞ் சுட்டுமெல்லுவோமெங்குஞ்செல்லுவோம் பஞ்சைபாட்டுகள் சொல்லுவோம் அய்யோநாங்கள்.

கட்டிக்காரன்சொல்-வசனம்.

அடாமாமா குறத்திசொல்லுகிறாள் இவாள்சாரியிலே சக்காளத்திப்பகையால் காயத்தில் நஞ்சைக்கலந்து தன்னைக்கொன்று போடுவாளென்று முன்னமே குறவனைத் தின்றுபார்க்கச்சொல்லி மறுபடி தின்பாங்களாம் இவங்கள்கொளந்தனுடனேபடுத்து புருஷன்போல நினைப்பாங்களாம் இவங்கள்மற்றொருச்சாரிக்குப்பெண் கொடுக்கவேமாட்டாங்களாம் இவங்கள் இவாள் வளப்பு பெண்ணை வள்ளிநாயகியைசுப்பிரமண்யர் திருடிக்கொண்டாராம் பண்டுஆனைக்கரியிருந்தாலும்பூனைக்கரிக்கிச்சிப்பாங்களாம் இவங்கள் அடித்தகானகந்தனில் அருமையான கிளங்குகளைக் கெல்லுவாங்களாம் இவங்கள்சுட்டுமெல்லுவாங்களாம் எங்குஞ்செல்லுவாங்களாம்பஞ்சைப்பாட்டை சொல்லுவாங்களாம் அந்தசையிலே பைக்கும்மூலே மர்டக்குளியிலே கரியைனக்கடி விரிச்சிநக்கடி தத்தத்தளங்குத் தூளியிலே குறத்தியும் நாலுங்கை போடியிலேமொளங்கால் சிப்புகளண்டிப் போகுமடா மாமா.

இராகம்-முகாரி.

குறத்தி கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

அத்திமுகமேனியின்ன மரனிடபாதந்தன்னை
பத்தியாய்தொழுதபேர்க்கு பகருவேன்குறிகளெல்லாம்
சித்தமாயரங்கள்செய்யுஞ் செப்படிகுரஞ்மையும்
விந்தைகளெல்லாமிப்போ விளம்புவேன்கேளாயப்பே.

குறத்தி-மருத்வதிக்குச்சொல்வசியஜாலம்

பல்லவி.

வசியஜாலம்எங்கட்குள் அகப்பட்டிருக்குது அகப்பட்டிருக்குது
மனம்வைத்துக்கேளுங்கேளுமையே

அநுபல்லவி.

பசுவும்புலியுமொருதுறையிலிறங்கிநீறை
பருகவுண்டிடச்செய்துபார்த்திருப்போங்
கொசுவைக்கருடனுடன்பறக்கவிட்டுப்பந்தயம்
கூறிடுவோமகிழ்ச்சிமீறிடுவோமையே வசி

சரணங்கள்.

கூனக்கிழவிநல்லகுமரியாய்சூல்கொண்டு
குழந்தைபெற்றுகொஞ்சச்செய்திடுவோம்
ஆனையைச்சிறகுடுக்கையிலடைப்போம்
ஆனைமுதுகிலேறிவழிநடப்போம் வசி

உடல்வற்றிச்சாம்பிணம்கிழவன்மேலிச்சைப்பட்டு
ஓடிப்பெண்கள்தழுவச்செய்திடுவோங்
கடலின்மேல்நடப்போங்கடப்போம்இரும்பை
காச்சியுருக்கிச்செம்பொன்னாக்கிடுவோமையா வசி

ஊசிமுனைதனிலேயுன்பதுகோட்டைக்கட்டி
ஒருமையரசாட்சிசெய்திடுவோம்
பேசாதஊமைகள்பேசும்படிச்செய்வோம்
பெரியமலையையெங்கள்மயிரில்கட்டியிழுப்போம் வசி

கடுகைத்துளைத்துயெழுகடலைப்புகட்டுவோங்
காக்கையைவெள்ளைநிறமாக்கிடுவோம்
விஷத்தையமுதமென்றுவிருந்துகள்செய்வோம்
விழியில்லாமனிதரைவழிநடந்திடச்செய்வோம் வசி

மலையையுருக்கிமொளுகாக்கிடுவோம்
மணலைசர்க்கரையாக்கிக்கொடுத்திடுவோம்
மூலையில்லாப்பெண்களுக்குமூலைவரப்பண்ணுவோம்
முறங்கட்டிவானகத்தில்பறந்திடுவோமையா வசி

தங்குமுலகைஒருநொடியில்சுற்றிவருவோங்
தன்மதியைப்பிடிங்கிகம்மலாய்த்தான்தரிப்போம்
எங்களரசனைவெகுநாஷணமாகப்பேசும்
இடக்கரைகாலீகைகள் மூடக்கிடுவோம் வசி

குறத்தி-மருத்வதித்குச்சொல்-சித்து.

பல்லவி.

சித்துக்கள்கேளுமையே விசித்திரமான
சித்துக்கள்கேளுமையே

அநுபல்லவி.

சித்துக்கள்கேளுமையே யுத்திகளிற்சிறந்த

சரணங்கள்.

உள்ளங்கைதன்னிலே வைகுந்தத்தைக்காட்டுவோம்
ஓரியைப்பல்லி மிரட்டச்செய்குவோம்-சித்து
தொகைக்குரும்றுகால் கொம்பென்றுகாட்டுவோம்
கோள்[illegible]பிராந்துதனை [illegible]ங்கச்செய்குவோம்-சித்து
[illegible]றுகா[illegible]மீனை குளத்துக்குள்காட்டுவோம்
ஆனையைப்பூனை மிரட்டச்செய்குவோம்நல்ல-சித்து
கூனக்கிளவிக்கு நாலுமூலைகாட்டுவோம்
குமரிக்குஏழு மூலைகள்காட்டுவோம்-சித்து
எட்டுவரையொரு விரலில்தூக்குவோம்
இறகில்லாபன்றியைப் பறக்கச்செய்குவோம்-சித்து

தெய்வலோகக்குறத்திசொல்லுற-குறவஞ்சி.

வானரங்கனிகொடுத்தும்தியொடுகொஞ்சும் அம்மே
மந்திரிந்திகளுக்குவான்கவரிகள்கொஞ்சம் [illegible]ம்மே
[illegible]னிநிலம்பிறைமுடித்தவேணியலங்காரம் அம்மே
குற்றாலந்திரிகூடல்மலைபெங்கள்மலையாமே அம்மே
ஒருகூலத்[illegible]பெண்கள்கொடோடம்ஒருகுலத்தில்கொள்ளோம் அம்
உறவு[illegible]ாலும்விடோங்குறவர்குலம்காங்கள் அம்மே
கைலாயமெதன்மலைக்குள்[illegible]க்குமலையம்மே அம்மே
சகலமலையெந்தனுக்குள்[illegible]க்கமடியம்மே அம்மே
பரிதிமதிசூழ்மலையை[illegible]துக்கேகொடுத்தோம் அம்மே
பரமர்திருகூடமலைபல[illegible]லையம்மே அம்மே
காணவரைவிழியெடுத்துவானவரையழையா அம்மே
கமலசித்தர்வந்துவந்துகாயசித்தியளிப்பார் அம்மே
தேனுருவிதிரையெழும்பிவானில்வழியொழுகும் அம்மே
செங்கதிரோன்பதிக்காலுக்தெற்காலும்வருகும் அம்மே
கைலையெலும்வடக்குமலைதெற்குமலையம்மே அம்மே
கனகமதாமேருவனமிற்குமடியம்மே அம்மே

குறத்திசொல்-கலித்துறை-இ-ம்-பைரவி.

அனேகருஞ்செல்வர்திருக்கூடனூர்அணிநகர்வாழ்
மானேவசந்தபசுங்கொடியேயிந்தவேளைநன்றாய்
தானேயிருந்ததவமென்றேசெந்தாமறைபூந்
தானேருமலர்க்குறிகாட்டாமனக்குறிகாட்டுதற்கே

குறத்தி-மருத்துவதிக்குச்சொல்-தரு.

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

என்னகுறியாகிலுநான்சொல்லுவே — னம்மே-அம்மே
எகுவேனைதிர்த்தபேரைவெல்லுவே — னம்மே-அம்மே
மன்னவர்கள்மெச்சிமிகவஞ்சினை — ரயமே-அம்மே
வயனக்குக்குணிபோலகஞ்சிவா — ரம்மே-அம்மே
பின்னேயெனுங்கூழுமுதுகொண்டுவா — யம்மே-அம்மே
பெரியகுடிக்கைநெம்பமண்வாறி — யம்மே-அம்மே
அம்மேசொல்லவாராள்வெள்ளச்சி — யம்மே-அம்மே
யுனக்காகவருவதுபார்வளி — யம்மே-அம்மே

இதுவுமது.

இந்திராணிவாணிக்குமம்மே குறிகள்தன்னை
யெளிதாய்ச்சொல்லுகேறன் கேளம்மா

வ-ம் சந்தோஷமாக முத்துச்சரிகை புடவைரெண்டு அந்தமாகத்தந்தார் அறுமை அறிந்துபண்டு பொன்னூர் சூரியமின்னூர்வாளும்பொங்கும் கெந்தருவஸ்திரீகள் முன்னூல் இன்னூள்சொன்னகுறிக்குஇசைந்துநெத்திக வொளியாய்கோசுபண்காட்டி ஈந்தார் காவலுக்குமெட்டு இந்தசத்தரிஷிபத்தினிமார்க்கெல்லாந்தையலே சொன்னேன்குறிகளம்மே முத்தாபரணமொடு நத்துபுலாக்குதந்தார்மத்தாப்புகைதோடாவும் மாணிக்கமாலைதந்தார்.

மருத்வதிசொல்-விருத்தம்.

பலவகைக்குறிகள்சொல்லீபண்புடனுரைப்பேனென்றே
மலிவளர்குறக்குலத்து வஞ்சியேசொல்லக்கேளாய்
நிலையதாய்மனதிலொன்று நினைத்தன்னைதனியாராய்ந்து
நலமுடனெனக்குநங்கையேசுவியுவாயே.

வசனம்.

அடிவாடியம்மே குறிப்பெண்ணே நீநல்லகுறிகள் சொல்லுவே. னென்றதுசரிதான் ஆனால் நாலொரு நினைவு கொண்டிருக்கிறேன் அதையின்னதென்று ஆராய்ந்துசொல்லுவாயம்மே.

குறத்திதெய்வம்பரவும்-அகவல்.

அருள்பெருஞான வமலனீன்ற
கருணைசேர்மும்மதங்க ளகற்றின்மாமுகனே
பெருகுநற்கண்ணே பிரியமாயுமையாள்
விரும்பினேனுவலாய் விநாயகாசரணம்
பொதிகைமாமலைமேல் பொருந்துமாமுனிவர்
துதிசெய்யுங்கந்தனே சூரசம்மாரா
திங்கள்மாமுகனே தேவர்கோன்மருகா
மங்கையாள்வள்ளி மணாளனேசரணம்
மதுரைநகரில் வாழுமீனாட்சி
துதிபெறுஞ்சுந்தரர் துணைபெறவமர்ந்த
மதுரைமாகாளி மகிழுமோங்காரியே
நிதிபெறுந்துர்க்கையே நேசமாய்வேண்டினேன்
பதியினிலமர்ந்திடும் பதினெட்டாம்படியே
மதித்துவீற்றிருக்கும் மதுரைவீரையனே
சத்திவீரையனே சங்கிலிகருப்பா
முத்தியேவந்திடும் முத்தாலராவுத்தனே
கறுப்பண்ணசாமியே கழுகடையையனே
லாடசந்நியாசியே லாடமுனியையனே
தேடியேவந்திடு சகமுடியையனே
அகத்தியடியோனே ஐயனாரப்பனே
கோதில்குருமணியே சோலைமுத்தையனே
அஷ்டதிக்கினில்வாழ் அஷ்டமாங்காளியே
துஷ்டகாட்டேறியே சூராவளியே
வள்ளிநாயகியே மண்டலத்தாயே
பில்லிசூனியங்களை பிரட்டுங்காட்டேறியே
பக்தியாயுந்தனைப் பணிந்துநான்போற்றினேன்
சத்திமாதறியே சல்லியநங்கையே
மாமுண்டியையனே மலையாளபகவதி
சாமுண்டிதாயே சப்பாணிகறுப்பா
காத்தவராயா கதரியேவந்திடுந்
தோத்திரஞ்செய்தி— துரையேவந்திடும்
ஓட்டியஞ்சல்லிய மொன்பதுகம்பளந்
தொட்டிமலையாளந் திட்டமாகாளியே
இஷ்டமாய்வணங்கினேன் யென்குலதெய்வமே

மங்கைமருத்வதி மனதில்நினைத்து
அங்கையிற்கனிபோ லதமகிழ்ந்துரைப்பாய்
மரகதமணியோ வைரமேபொன்னே
பச்சைமாணிக்கமோ பகருஞ்சந்திராரமோ
வச்சிரப்பொன்னேலியோ மகிழுமுத்தாரமோ
கோமேதகமோ கோதைமருத்வதியே
ஆகமதெனக்கு அறிந்திடவருள்வாய்

குறத்தி மருத்வதிக்குச்சொல்-தரு.
இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்-கண்ணிகள்.

முத்திரைமோதிர மிட்டகையைக்காட்டாயம்மே-கடையம்
முன்கைமோதிர மிட்டகையைக்காட்டாயம்மே
சித்திரச்சூட மிட்டகையைக்காட்டாயம்மே-உந்தன்
செங்கைவளர்தங்க ரேகைக்கையைக்காட்டாயம்மே
அஸ்தகடகமணிந்த கையைக்காட்டாயம்மே-பொன்னின்
அங்காரகன்னெறியிட்ட கையைக்காட்டாயும்மே
சித்தமுந்தர்மஞ்செய்துவரு மெங்களம்மே-முத்தரும்
நிமலர்துதித்திடும்நிறைந்த கையைக்காட்டாயம்மே

குறத்தி-மருத்வதியைப்பிடித்துக்கொண்டு
சொல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு.

மாரும்மலிருநிலத்திலறம் வளர்க்குங்கையே-அம்மே
மணிபார்த்தால்வளம்பெருகும் பிறர்வளர்க்குங்கையே
ஆறுதசனங்கள்பசியாற்று மிந்தக்கையே-அம்மே
அனங்கனையும்வணங்கிநித்தம் யேத்துமிந்தக்கையே-அம்மே
தீராதசிந்தைதனைத்தீர்த்து வைக்குங்கையே-அம்மே
திருமாலுடரேகைதனைப்பொருந்து மிந்தக்கையே-அம்மே
நேரூகநினைத்தபொருள்விளையு மிந்தக்கையே-அம்மே
மேன்மேலும்பாலமிர்தம்அளிக்கு மிந்தக்கையே-அம்மே
மாரும்மல்முத்தளிக்குமாமி திருக்கையே-அம்மே
மாதவன்திருக்கைமாமுனிவர் மகிழ்கையே-அம்மே
சீராகுலத்தேர்பசிதீர்க்கு மிந்தகையே-அம்மே
சிவனடியார்நாளுமாசீர் வதிக்குங்கையே-அம்மே
அரும்பசியால்வருவோர்தமையழைக்குமிந்த கையே-அம்மே
தருமநெறிதவறுதயைபுரியு மிந்தக்கையே-அம்மே

50 ரூபா

குறத்தி அங்கங்கேபெற்றுக்கொண்ட வெகுமதிகளை
மருத்துவதிக்குச்சொல்-தரு-இம்-நாதநாமக்கிரியை-காப்புதாளம்.

பல்லவி.

கோலமடமாதர்க்குக்குறிகூறிவாங்கினவெகுமானங்கள்
கொஞ்சஞ்சொல்கிறேன்கொஞ்சஞ்சொல்கிறேன்கேளம்மே

அநுபல்லவி.

சாலவேஅருந்துயிர்க்குச்சந்தோஷமாய்க்குறிசொன்னேன்
தங்கைப்பொற்றாற்கமானப்பட்டியும்ரெங்கராஜத்தட்டியுந்
தந்தார்கைமருந்தாலேயிந்திராணிவந்தாப்போலே ஆகா

சரணங்கள்.

அச்சமில்லாமலேநிச்சயமாக லெட்சுமிக்குசொன்னேன்-அல்
லாமலுமலையன்மக ளம்பிகைக் கானகுறிகண்டு சொன்னேன் பட்ச
மதாக கடகமும்பாங்காய் கழுத்துக்கோர் முத்துதாவடமுங் கச்
கிதமா-என்னிருஸ்தனகுடமுங் கதிர்மாலைகள் நிறையும்படி துதி
செய்யுமே தந்தாரடிசந்தஸ்வாணிக்கு முந்த இந்திராணிக்கும்விந்
தையதாய் குறிசொன்னேன்-தரணிஆண்ட ஸ்ரீராமன்தேவிக்குத்
தகுந்தமெய்க்குறிசொன்னேன்.சுந்தரகாதுக்குச்சந்திரமுக
வந்தாய்சிமிக்கிஷலெருகுவிஸ்காரெத்தினமிட்டு குச்சிசெய்தது
தார்மெட்டே.

தரு.

பல்லவி.

அறிந்துக்கோண்டேன்குறிதெறிந்துக்கொண்டேன்குரி
அறிந்துக்கொண்டேனம்மே கேள்ரியம்மே அறிந்து

அநுபல்லவி.

பெருந்தபம்புரிவதற்கருள்தருநிலவுடன்
புனலணிமதுரைசுந்தரேசர்தன்னுட்டில் அறிந்து
மங்கிலியதெய்வம்வந்துஉன்மனையிலிருக்குது
மதுரைவீரசாமிவந்துகாவுகாவெங்குறு அறிந்து

சரணங்கள்.

ஓங்கள்குலமங்கிலியந்தெய்வம்வந்துநிற்குது
ஓர்சடைமுனிவனுங்காவுதொடெங்குரு
எரிக்குருஓயம்மேசிருக்கிருமூலையிலே
கிரிக்குருசிரித்துக்கொண்டிங்க்குரு இதுவும்கான் அறிந்து
சங்கிலிக்கரப்பன்வந்துசாடைமிகக்காட்டுரு
சப்பாணிகருப்பனுணெண்டியாடுரு

சாடுருஓயம்மே நாடுருவந்துவங்து ,
கூடுருகூடிக்கொண்டிருக்குது இதுமெத்த அறிந்து

பேச்சிக்காட்டேரிதெய்வம் பெட்டைக்கோளிகேட்குறு
பூமாலுராவுத்தனும்யென்முக்கப்பண்ணுறு
கலுக்குறுஓயம்மேபலுக்குறுமூலையிலே
குலுக்குறுகுலிக்கிக்கொண்டிடிக்குறுமெத்த அறிந்து

காத்தவராயனும்வீச்சருவாள்கேள்க்குரு
களுவட்டிநாகனும்கெஞ்சிகொஞ்சுறு
களிக்குறுகெச்சமூனியளிக்குருகண்ணேகண்ணே
மூளிக்குறுமூளித்துகொண்டிருக்குறு அதுமெத்த அறிந்து

உதிரகருப்பன்வந்து ஓண்டிஓண்டியாடுறு
ஓர்சடைமூனியனும் ஆடுகோளிகேள்குறு
ஓளிக்குருஓயம்மேயிருக்குறுசேணையிலே
என்னேப்பார்த்துசிரிக்குறுஎன்னுடன்புசிக்குறு அறிந்து

குறத்தி-மருத்தூதிக்குச்சொல்-விருத்தம்.

ஆசையாய்குறிகள்சொல்லென்ற அம்மைமையேகேளாயிப்போ
வாசவன்பதிக்குச்சென்ற மாமுனிவருவார்நீயும்
ஈசனருளினாலே யிமையவர்முனிவர்மிக்க
மாசிலாவுன்வயற்றில் மைந்தனும்பிறப்பானம்மே.

வசனம்.

அடிவாடியம்மே இரண்டுதன்னிமார்கள் சொன்னநிந்தையா
கியவசனங்கேட்டுநீமகாவிசனப்பட்டுக்கொண்டிருக்கிறாய் உன்பத்
தரவாகிய்மிருகண்டமகாரிஷி தெய்வசபைக்குப் போயிருக்கிறவர்
இந்தட்சணமே வரப்போகிறார் நீமகாதபத்தையுடைய புத்திரன்
உன்வயத்தில்பிரக்கப்போகிறார் நீயாதொன்றுக்கும் விசனப்பட
வேண்டியதில்லே யடியம்மே.

குறத்திமருத்வதிக்குக் குறிசொல்லுந்தரு.

ஒருபாலன்பிறப்பானம்மே பதினுறுவயதினிலே
ஒருபாலன்பிறப்பானம்மே

உயர்மாதவத்தோர்புகழும்நாலுவேதமுங்கற்றவனாய்
ஆலகாலம்போலவேகொண்டுவருங்காலனுக்குக்காலனாய் ஒரு
சிவபத்தியினிற்சிறந்துசிவமுத்திக்குரியவனாய் ஒரு

கட்-புரூவர் அதுக்கும்பெரிசியடா அய்யே, கட்-பின்னேயென்னடா குற-எறும்புடா அய்யே, கட்டி-சீதாயோழி எறும்புகூட புடிப் பாங்களா.

வேறு-தரு-குற-காடை நம்மைக்கண்டு முனிக்கிருங் குருகவு தாரிநம்மைக்கண்டுபதிங்கிட்டோடுறு நஞ்சானும்குஞ்சானும் அஞ் சாறுவருகுது கூப்புறு அய்யே பரவைகள் பாக்குறு அய்யே.

வசனம்.

குற-கூப்பாரோ கூப்பாரோ ஆப்புரா அய்யே, கட்-கொடுக்க கடா-பெரிசிடா அய்யே, கட்-கொக்கடா, குற-அல்லடாபெரிசிடா அய்யே, கட்-மாஞடா-குற-அல்லடா பெரிசிடா அய்யே, கட்பன் றியடா-குறஅல்லடா அதுக்கும் பெரிசிடா-கட்-பின்னே என்னடா புடிச்சே-குற-கொசுவடா அய்யே-கட்-அடேபோடா கொசுபுடிச் சப்பயலே.

குற-என்சிங்கியைக்காமிடா அய்யே

கட்-இவளா-குற-அல்லடா-அய்யே-கட்-அவளா.

குற-அவதாண்டா அய்யே, கட்-குறத்திப்பெண்ணே என்னே மோசம்பண்ணுறே ரேப்பரையிட்லே தகத்தின்னுவிலே கையாங்கும் மாவிலே போட்டுக்கோ ஜீரு.

குறவனுக்கும் குறத்திக்கும் தர்க்கம்.

இ-ம் ஆனந்தபைரவி-ஜம்பை தாளம்.

எங்கேதான்போனீயோ என்சிங்கி
எங்கேதான் போனீயோ
செங்கல்கருங்கடல் சூழ்முலகெங்கும்
தாவிபாவியுன்னைக் கூவித்தேடும்படி எங்கே

குறத்தி-சொல்வது.

கொல்லியில்வந்தகரியை மெள்ளயான்பிடிக்கப்போனேன்
பல்லக்காட்டியேப்பம்விட்டு அல்லியில்ஓடிப்போச்சே கொல்லை

குறவன்-சொல்வது.

மின்னலைப்போலேதிரிகின்ற வண்ணமில்லாளே
என்சிங்கிஉன்னைக்காணுமலே நெஞ்சம்பட்டபாடு
ஊருக்குத்தெரியுமோ அகோகொடும்பாவி எங்கே

குறத்தி-சொல்வது.

அம்புபட்டபுலிகன்னியில்தெம்பிட்ட தற்காகப்போனேன்
பம்பட்டசத்தத்தைக்கேட்டுசங்கட்டப்பட்டோடிப்போச்சே கொ

குறவன் சொல்வது.

அங்கமுழுதும்தித்திக்கின்ற செங்கரும்பாளே
யென்சிங்கிதங்கியிருபேரும் அனுபவித்தசுகம்
சற்றேனும்யெண்ணுமல் தையலர்மாதுசிளி எங்கே

குறத்தி-சொல்வது.

கண்ணிற்பட்டவெள்ளரைவன்னிமரத்தின்மேலேறிநன்னியற்றுப்
பிடிக்கப்போனேன்யென்னே யேச்சிவிட்டுப்போச்சே கொல்லை

குறவன் சொல்வது.

இந்துவைப்போல்முகம்வாய்த்த அந்தமுள்ளாளே
என்சிங்கிவந்துவிசோயாடியே நான்சிந்தைகலங்கி
சுந்தரமாதவள் யிந்தயிடந்தப்பி

குறத்திசொல்வது.

புள்ளிமான்யெனக்குமுன்னே துள்ளியோடிப்போய்
எங்களைக்கொல்லை யாக்கிவிட்டுப்போச்சு
கள்ளமாய்பிடிக்கப்போனேன்

முத்துவீராயிபாட்டுபோல்-குறவன்சொல்வது.

கொண்டலருந்திரு அண்டத்திலெண்ணும்
கோலித்திரியும்சிங்காயிருப்போம்
கண்டார்கண்கூசவும் உன்கொண்டையின்மீதிற்
கவிழ்ந்துகிடப்பது யென்னசிங்கி

தங்கம்பாட்டுபோல் குறத்திசொல்வது.

காடுகிடந்துஉங்கள்நாடும்புகழ்வீரென்று
தேடிக்குறிசொன்னேன் சிங்கநளராசருக்கு
அவர்தெளிந்தளித்தாராக்கடியிது ஆ-யென்சிங்கா-ஓ

முத்துவீரியபாட்டைப்போல் குறவன்சொல்வது.

வள்ளியொத்தகாதில்கிள்ளைமொழியாளை
வண்டியருளைப்போலிருக்கும்அள்ளிக்
கொள்ளுதென்றன் உள்ளத்திலெண்ணும்
அற்புதமோஉரையென்றன்சிங்கி

தங்கப்பாட்டைப்போல்குறத்திசொல்வது.

வாழ்வுநிறைந்ததொருவாண்டையாரவர்களுக்குத்
தாழ்வில்லாகுறிசொன்னேனடா-என்சிங்கா

குறவன்சொல்-விருத்தம்.

என்னுடன்சிங்கியே யிருந்தமிருகத்தையெல்லாம்
என்தந்தைசிலையால்கொஞ்ச யிளப்புஆயாசந்தீர
இந்தபூங்காவுஞ்சோலை யிறங்கிநாம்நித்திரைசெய்து
சந்தியிற்பொருதுமுன்னே சதிருடன்யேகுவோமே.

வசனம்.

அடிவாடி குறத்திபெண்ணே இந்தவனத்தி லிருக்கப்பட்ட ருகத்தையெல்லாம் எந்தன்கையிலுற் றொன்றதாகையால் என க்குசொம்பவும் இளைப்பாயிருக்கின்றது இவ்விடத்தில் நான்படுத் துக்கொள்ளுகிறேன் ஏதாகிலும்காதுக்கின்பமாய் பாடும்பெண் ணேகுறத்தியுலல்அப்படியே சொல்லிக்கொண்டு வருகிறேன்கேள் ராஅப்யே.

துக்கடா-டப்பா.

சின்னக்கடையேலேலோயோரத்திலே
நான்போகும்யேலேலோவழிதனிலே

கண்டுஜாடைகாட்டியென்னை
கட்டிமுத்தமிட்டாயென்னையேலேலோவழிதனிலே

கட்-வ-ம். அடிகுறப்பெண்ணே அடேய்குறவா என்னடா இங்கே கூச்சல்போடவேண்டாம் உங்களுக்கு யேதாகிலும் வினோதமானபாட்டுகள் தெரிந்திருந்தால் சொல்லுங்கள்நானல்ல வெகுமானம்தருகிறேன்.

குறத்தி-வ-ம்-அடா அய்யே எங்கசாதிக்கு என்னபாட்டுத்தெரியும் ஆனாலும் சொல்வேன்கேளுமையா.

ல ா வ ணி

பட்டுப்பாவாடைபுட்டாரவுக்கைபொட்டுமினுக்குதடி-அடி
தட்டாணிமிறட்டுமெட்டணிமாதுணை தொட்டாலேபோதுமடி
ஆடிடும்மயிலேபாடிடுங்குயிலே கூடுங்குயிலொயிலே-அடி
கோடிகோடிரவியோடும்போகுமுயிர் வாடிடச்செய்யுமயிலே
காலுக்குத்தண்டைகலகலகொண்டை மேலெங்குமணக்குமிண்டை
மூக்குத்திநத்துபுலாக்குமுத்து முகக்குறியோசித்து
நவமணிகூடையணங்கள்சாடைநடனமிடுமேடை-அடி
முருக்கியசேலைசுருக்கியவேலை உருக்குதடிமாலை
மடமயிலாடுதுஇடர்களுமோடுது வடந்தலையேருதடி-இனி
நில்லாதேயாடிசொல்லாதேபோடி நல்லாயென்னடிமோடி
குஞ்சிதநடையும்பஞ்சிதநதையும் வஞ்சிக்கொடியிடையும்-அடி
கண்டாலேகாமன்கொண்டாடுஞ்சோமன்கொண்டாடுவர்னேமதன்
மூக்குத்திக்காரிபுலாக்குகாரி முகத்திலேதேமலென்னடி-அடி
அண்ணநடையும்முன்னங்கைவீசும் அறிவேனடிமானே
பட்டாணிதுலுக்கன்தச்சாண்டிரவிக்கைமுத்தானஸ்தனமூட-அடி
ஆரணிசல்லாடோரியாபுடவை நகைமுகந்துடைதெரிய
பக்கத்தில்கூடைரெண்டுகண்ஜாடை கடைத்தெருபோரபெண்ணே
சட்டிபோல்கொண்டையும் தட்டுவாணிகுறத்திதயவைமறந்தாயே

கட்டி-வ-ம்-ஆ-ஆ-ஆ-ஸபாஷ் போதும்போதும் சக்கிலிச்சிங்காரம் தெரிந்திருந்தால் சொல்லுகேட்போம்.

குறத்தி-வ-ம். அதுவும் சொல்லுகிறேன் கேள்ராஅய்யே.

தெம்மாங்கு.

பொதிகைமலையோரத்திலே பூத்திருக்கும்ரோஜாவே
மதியுடனேகொண்டுவந்து மாமாநீதாராயோ

சக்கிலிச்சி சிங்காரமெட்டு.

கொண்டுவந்து தாரேண்டி கோமளமே நானுனக்கு-கொண் டையில்முடிப்பதற்கு கோதையரே போய்வாரேன் கோணிமுகம் வாடாதே கொஞ்சுங்கிளிரஞ்சிதமே கோபமுநீசெய்யாதே கொங் கையரேபோரேன்.

வ-ம் ஸபாஷ் ஒரு அம்மாயிபாட்டுகள் இன்னும்விணைதமான பாட்டுகள் தெரிந்திருந்தால் சொல்லடி குறப்பெண்ணே

குறத்தி-வ-ப் அப்படியே சொல்லிக்கொண்டு வருகிறேன் அய்யே.

அம்மாயிமெட்டு.

மிஞ்சிமிஞ்சிநடைநடக்கும் கொஞ்சுங்கிளியே
அடிஅஞ்சுப்பொன்னேவாங்கிப்போன வஞ்சிக்கொடியே
தேடிதேடியோடிகானும் தேய்ந்துபோச்சுதே-இராசாத்தி
நாடிநாடிவாடிகூடி நாமிருப்போண்டி.

கண்ணுட்டிசிந்து.

தங்கத்தினில்கல்லிழைத்த வங்கிதோடாவாம்-கண்ணுட்டி
சங்கையில்லாமல்கரத்தில் தகதகென்னுதே-கண்ணுட்டி

தில்லாலே வர்னமெட்டு.

அங்கம்பரிகொடுத்தேன் ஆதாரமாறுமற்றேன்
துஞ்சுமிடம்படுத்தேன் தூங்காமல்தூங்கிவிட்டேன் தில்லா
ஓய்யாரக்காரியவ ளோடியேவந்தென்னைக்கட்ட
கைசோரவிட்டாளே காலமென்னகாலமிது தில்லா
கெண்டிக்கிபோனமச்சான் கடையாப்பந்தின்னமச்சான்
கொளம்புக்குபோனமச்சான் கொண்டுவந்தருபாயெங்கே தில்லா
கெண்டியிலேமூணுமாதம் கப்பலிலேஆறுமாதம்
சீக்கிலேழுமாதம் செலவழிந்துபோச்சுதே தில்லா

பச்சைப்புறு வர்னமெட்டு.

பட்டுக்கோட்டைசந்தையிலே இ-இ ஆ-ஆ எ-எ அடிதில்லா லேபச்சைப்புறு-போட்சி பச்சைப்புறு போட்-தகதிக-பச்சைப்புறு போட்தத்தமி-பச்சைப்புறு-போட்தகிங்கிண பச்சைப்புறு-போட் பச்சைப்புறுமேயுதடி.

ஆலைகண்டு-ஆலைகண்டு ஆலைகண்டு கூவுதடி பதைக்கத்தங்க மே அடியாகுட்டிதங்கமே அடியாபெண்ணே தங்கமே ஆலைகண்டு கூவுதோடி பதைக்கத்தங்கமே.

தில்லானம்.

நாதர்தோம சுந்தரதீம் தனனனன தன்னம் நிதபம் தபகமறு
பமக தனனனனனனன நற நன நற நன நாதர்த்தத்தோம்

ஜெமுறே முலகு சுக்காருசுனவே
துனியாதீன அன்றயிமர்னப்பாவே
தாத்தாககிடதக தாத்தாக்கிடதக தா தா தா தா
தாத்தாக்கிடதக தாத்தாக்கிடதக தா தா தா தா
தாத்தாக்கிடதக தாத்தாக்கிடதக தாதாகிட
தகதாம் தத்தாகிட தகதாம் தீசானிதங் சனிதப
தபகமறிப மகறிச நாதர்த்தத்தோம்

நாரப்பாட்டு.

கடப்பச்சித்தாட்டமுகன்ன லூருபூமிகணமூலோயெதிரைதினே
நாறுமூடேலுதீருண்டதே நாறுநாலேருதீண்டதே
உடுக்குடுக்குசெட்டலுஉல்லிதெட்டலசாறுசீக்கனிந்தெஸ்தினே
நாறுகொங்குசாடலுதெஸ்திநேநாறுகொங்கசாட்டலோதெஸ்திநே

தங்கம்பாட்டு.

சிலிசிணுக்கறுத்துசெச்தூரபொட்டுமிட்டு
யென்னமயக்காதடிதங்கமே எண்கையிற்காசுமில்லே

கன்னம்-துக்கடா.

கய்யளீ சளே பளே கண்கணியமுக ணேடலே கய்
தொகரீனிமருளே அண்டிபிசின் திருகளே கய்
பன்னதேசலேபிடி இள்பள்பணேரவிக்கேதடி- கய்

இந்துஸ்தான்-துக்கடா.

உரோங்கிஉஷஉடதியை உடனேசிஷானபா
நீலம்பரிஐகாமம்மேறு ஆஷேமானபா உரோ
அல்லாஅகேகாம்சஜமாணும்ஐமேறு
ஐகத்தாஆயேசர்ப்பலக்சாமேறே ஆஷ்தானம் உரோ

முத்துவீராயி வர்ணமெட்டு.

அன்னமிருக்குதுகூடத்திலே-நல்ல
சொர்ணமிருக்குதுமாடத்திலே
இன்னமிருக்குதுமூன்றுமயிலதி
லென்றேணும்பாரடி மாங்குயிலே
சிங்கக்காவலிட்டதங்கக்கட்டிலதில்
பங்கயமெத்தையிருந்தநல்ல
மங்கையொருத்திபடுத்துசிரிக்கன்னே
இங்கேவாவென்றுளேகோமளமே

குள்ளத்தார-சிங்காரப்பாட்டு.

உன்னைப்போலபெண்ணைக்கு யேகுள்ளத்தார
உகந்தபிள்ளையாருமில்லை யேகுள்ளத்தார
யேகுலுக்கிதில்லாலே நீமுன்னுலேகான்பின்னுலே
உகந்தபெண்கள்யாருமில்லை யேகுள்ளத்தார
மயில்போலும்சாயலாளே யேகுள்ளத்தார
வந்துமுத்தம்தாராயோடி யேகுள்ளத்தார
குயில்கூவும்மொழியாளே யேகுள்ளத்தார
கூடிவிளையாடலாமே யேகுள்ளத்தார
யேகுலிக்கிதில்லாலேநீ முன்னுலேகான்பின்னுலே
கூடிவிளையாடலாமே யேகுள்ளத்தாராவே.

ஜாவளிகள்-இ-ம்-கேதாரி-கௌளம்.

ஏதுக்கிந்தவாதுசெய்குறும் கண்ணேபெண்ணே
கண்ணேபெண்ணேமானேதேனே மயிலேகுயிலேகிளியே

இ-ம்-இந்துஸ்தானி-காபி

தூபமீனமோரீகோகைபாலே கோவர்த்தனகிரிதாரீரே
மோரமகுடபீதாம்பராசோபே குண்டலசிசபஞ்ஞாரீறே தூப
பாசரிபாமிதிரிபதிடாரீ கோலாஜெகமாகீறே
மீராகேபிரபுகிரிதாணுகா சரணக்கமலபலஆரீவ தூப

கன்னடா-வேறு.

அயாம்யுவர் அம்புல்சர்வேண்டாதரிஞ்சிறேவரா
தயாம்புதேரீதுபாதபத்மமுசகுவேரா

கட்-ஆ-ஆ-சபாஷ்டி குறத்திப்பெண்ணே மகாகெட்டிக்காரிஇ தோகான் கொடுக்கிற வெகுமானத்தைப்பெற்றுக்கொள்ளடி

குறத்தி-நீகொடுத்தவெகுமானம் போதுமடாஐயோகான்போ ய்வாறேண்டாஐயே.

இங்கிலீஷ் விருத்தம்.

அவுயியுமைமடியர்லே அயாம்வெரிகிலாட்டுசீயு
எவ்வரிவொயர்இந்திஸ்ட்ரீட் இன்யினப்பட்வாட்யூஸே
இவ்மியென்யில்கிங்அண்தென் வெரிகிளாட்ஓய்கென்பிடாசிங்
கவ்வாட்வொன்லீலேடிதட்வல் ஆல்வேல்லவவ்வான்அவ்யூடு

முதல்பிரிவு-முற்றிற்று.

இரண்டாம் பிரிவு.

கட்டியக்காரன் வஞ்சி-விருத்தம்.

செந்தவமருத்வதி இன்றெறியிலுற
அந்தமாய்முனிவர் வந்தனர்தாமே.

வ-ம். இத்தப்பிரகாரமாய் தன்பத்தாவாகியமிருகண்டேயரை க்காணேமென்று மருத்வதியானவள் துயரப்பட்டுக்கொண்டு இருக்கும்போது தேவலோகத்துக்கெழுந்தருளிய மிருகண்டேயமகா முனியானவர் தன்னுடைய ஆச்சிரமத்துக்கு வருகிறவிதங்காண்க.

மருத்வதிசொல்-விருத்தம்.

வானவர்சபைக்குப்போன மாமுனிவரவுங்காணேன்
தேனமர்காமியிந்த தெரிவையின்மொழிகளெல்லாம்
ஞானிப்போரிவிக்குச்சொல்லி காதலர்தம்மைநோக்கி
கானகந்தன்னிற்சென்று நிர்த்தவம்புரிவதெப்போ.

தரு-இ-ம்-தாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னபாவம்செய்தேனோதானே இந்தவிதிக்கிவசமானேன்
முன்னமேமுப்புரமெரித்த அந்தமுக்கண்ணனருடையகற்பனேயோ
மன்னன்மிருகண்டேயர் இன்னம்வரமலைக்குமயங்குவாரோ
கன்னல்மொழிமடலார்தந்து காதல்மிகுத்தெந்தனகத்தினில்
அன்னம்புசியாமல்தம தாசிரமத்துக்கேகினரல்லோ
சிவனேவிதிவசமோ இந்த நீணிலக்கரசனேபெண்பிறந்தேன்
அவனியிலெத்தனைப்போலேபாவி ஆரிருப்பாரெந்தனருயிரே
பார்விபுதிக்கியமிந்தப் பாரினிலின்னமெவருக்குண்டோ
ஆவிதவருதையாசுவாமி ஆண்டவனேவந்துகாக்கொணுதோ.

தரு-இ-ம்-செள்ராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மருத்வதியான்புலம்பக்கேட்டு மாமுனிவர்வந்தனரே

அநுபல்லவி.

திருத்தமாகவேவணிந்து
வருத்தமாகத்தானடந்து
தண்டுகமண்டலங்கொண்டு
மாமுனிவர்வந்தனரே-மரு

சரணங்கள்.

அய்யோவென்றசத்தம்கேட்டு
வையகத்துள்ளோர்புகழும்
கூவென்றசப்தங்கேட்டு
பூவைமருத்வதிவாழும்
தேவர்சள்பதியையிட்டு
பாவமற்றமிருகண்டேயர்
அலறியேதடைதடைந்து
மாமுனிவர்வந்தனரே-மரு
கோலமுனிதரிப்போ
பொற்பவளவாசிம்மாடமரு
செந்தாமரைப்பாதம்நோக
பரிவுடன்மனைக்குவந்தார்-மரு

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல்-விருத்தம்,

மானிகர்வதனத்தாளே மடக்கையேகேளாயிப்போ
அதிகமாய்மனதுகொந்து அழுதுளம்வாடிவாரினேன்
பதிதனில்வந்தபோதார் பாவையேவாடுதென்ன
அதிசயமதனோடீயு மன்புடனுரைசெய்வாயே.

வ-ம். சந்திரனைப்போல் பிரகாசியானின்ற முகாரவிந்தத்தையுடையபெண்ணே உன் மலைய மனதுகிலேசித்துப்புலம்புவானேன்

நம்முடைய ஆசிரமத்தில் நான்தேவசபைக்குப்போன நாள்முதல் நடந்தவர்த்தமானங்களை சொல்லிவாரும் பெண்ணே மருத்வநி.

தரு-இ-ம்-லீலாம்புரி-தாளம்-ஜம்பை

கண்ணிகள்.

என்னசொல்வேன்முனிநாதா நான்எதுசொல்வேன்விதிவசத்தை
அனலமேறும்சரன்முகனர் அவரிந்தவிதிவசத்தை
வீண்ணவர்கள்தேவிமாரோ விமலருடதேவிமாரோ
மன்னவர்கன்தேவிமாரோ மாமுனிவர்தேவிமாரோ
கன்னியரிருவர்வந்து கஞ்சமலர்மாதுபோல
பெண்ணரசேயெங்களுக்கு பெரும்பரிமெத்தவென்றார்
அன்னமுடன்பால்பழங்கள் அன்புடனேயான்படைத்தேன்
உண்ணவென்றுசம்மதித்து உன்மகனெங்கேயென்றார்
எந்தனுக்குமைந்தனில்லை என்றுரைத்தேன்முனிநாதா
செந்தவஞ்சிறந்தவர்க்குச் செல்வர்களில்லாமற்போமோ
குழந்தையில்லாரகம்புகுந்தால் கொடும்பாவியாவோமென்றார்
தழுவமைந்தனில்லாதோர்க்கு தவமதுசிறக்காதென்றார்
அரிவையரேயுன்னகத்தில் அழுதுகொள்ளப்பாவமென்றார்
பெருமையுடனிவ்வசனம் பேசஉற்றாமுனிநாதா

மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

பாலனில்லையென்றுயென்று பரியாறுமல்
கோலமாய்போனவாறே குவலயந்தன்னிலிப்போ
சீலமாயிருந்தசிந்தை சிதரியேதங்குதையோ
ஆலமுண்டவரைநோக்கி அருந்தவமியற்றுவோமே

தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மைந்தரில்லாப்பாவியாகினேம்-அரகரசிவசம்போ
மைந்தரில்லாப்பாவியாகினேம்

அநுபல்லவி,

அநித்யகாலம்வந்தபோது அருமைமகனைதுடைகள்தனிலே
சொந்தமாகநாமிருவரும்சொர்க்கலோகஞ்சேரத்துய்ய மைந்

சரணங்கள்.

அண்டர்தேவர் போற்றிடும்
அங்கமாகவே நின்றுயேற்றிடும்-மைந்த
பண்புபழகியே பாவஞ்செய்தேனே
பரமனடியைத் துஷித்தேனே-மைந்த
ஏரிகுளங்களைத் தூர்த்தேனே
எளியவர்கட்கிடர்செய்தேனே-மைந்த
வீரியங்கள் பேசினேனே
வேதியரைத் தூஷித்தேனே-மைந்த

வ-ம். அகோவாரும் என்பிராணநாயகரே எத்தனைபாக்கியமிருந்தபோதிலும் புத்ரபாக்கியமே பாக்கியம் புத்திரனில்லாத அன்னம்புழுவுக்குச்சமானம் நித்திரையிலும் புத்திரவிசாரமே தவிரவேறில்லை ஆனபடியினாலே ஈஸ்வரனைத்தியானித்துத்தவஞ்செய்வோம்வாரும்என்பிராணநாயகரே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

மாதர்கட்கரசியான மருத்வதிமயிலேகேளாய்
ஆதினம்விளங்கவேதான் அருமையாய்மைந்தன்வேணும்
எவரிருந்தாலுமென்ன யென்குலம்விளங்கவென்று
போதவேதவங்கள்செய்ய பூவையேபோவோம்வாராய்

வ-ம். அகோவாரும்பெண்ணே மருத்வதிநான் தெய்வசபைக்குப்போனபோது மூப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும் நிறைந்திருக்கிற சபையிலேநான்போய்உட்கார்ந்தவுடனேதேவேந்திரன்பார்த்து வேதவியாசரையழைத்து இவ்விடத்தில்வந்திருக்கப்பட்ட பேர்களிலே புண்ணியபாவம் ஆருக்குண்டென்றுகேட்டார் அப்போது வேதவியாசர்சொல்வார் பூலோகத்திலேயிருந்துவந்த மிருகண்டமகாரிஷிக்கு பிள்ளையில்லாதபடியினாலேஅவருக்குச் சொர்க்கமில்லையென்றார் அப்போதுதேவேந்திரன் அந்தவார்த்தையைக்கேட்ட மாத்திரத்திலேஅத்தப்பாவிநம்முடையசபைக்குவரவொட்டாதிருங்களென்றார் உடனேநான்ரகசியமாய் எழுந்திருந்து வந்துவிட்டேன் அங்கேநடந்தவிருத்தாந்தத்திற்கும் இங்கேநடந்திருக்கிற விவரத்திற்கும் சரியாயிருக்குது நம்முடையகுலகோத்திரம் விளங்கும்படியாகதவத்துக்குப்போய்வருவோம்வாரும்பெண்ணே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி,

நடப்போம்தவசுக்கு-நடப்போம்

அநுபல்லவி

நடப்போம்தவசுக்கு நலமாய்நாமிருவரும்
விடையார்தமைநாடி விருப்பமாகவேகூடி

சரணங்கள்.

மங்கையோர்பாகனை மாதவர்பாதமேநோக்கி
சங்காசிவனேயென்று சர்வகாலமும்பூசிக்க-நடப்
வீசும்புகழ்காசி விஸ்வநாதரைத்தேடி
நேசமுடன்பணிந்து நெஞ்சில்நினைத்துப்போற்றி-நடப்
ஆலமுண்டகண்ணார்த னடியிணைதொழுதேற்றி
கோலவழகனை குமரனைப்பெற்றெடுப்பாய்-நடப்

மருத்வதி மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்

இந்தநல்வனத்துக்கப்பா லிருந்தநற்காசிக்ஷேத்திரம்
வந்தனமனேகதூரம் வருத்தமாயிருக்குதிப்போ
எந்தனற்பதம்பாத மெங்கிலுங்கொப்பளித்து
சந்ததம்நோகுதிப்போ சரணமென்பிராணநாதா

வசனம்.

அகோசரணமையா சுவாமி நான்வெகுதூரம்நடந்துவந்தபடியினாலே அடியாளுடையகால்கள் இரண்டுநோகுது இப்போஒருஅடியாவதுவெடித்துவைக்க யென்னால்முடியாது சற்றுநேரம்இங்கேயிருந்துஇளைப்பாறிதெளிந்து காசிபட்டணமிருக்கிற இடத்தைத்தெரிந்துக்கொண்டு எழுந்தருளுவீர் தேவரீரிங்கு கொஞ்சங்களையாற்றிக்கொள்ளும் என்பிராணநாதரே.

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

மங்கையேகளாயிந்த வனமதாண்டியப்பால்
கங்கையாநதியுங்காணும் காசிநன்னகருந்தோணும்
நங்கையர்கூடிவாழும் நல்லாண்மனைகள்தோணும்
பங்கயப்பதத்தினாளே பரிவுடனெழுந்துவாராய்.

சிந்து-தரு-இ-ம்-புன்னகவராளி-ஏகதாளம்.

கண்ணிகள்.

இந்தவனத்திலேதவமளந்தாரும்தவஞ்செய்முனீசர்கள்
சுந்தரப்பெண்களுடனேநிகழ ஜோதிஜெகதீசனிட்டருடன்
கந்தமலர்க்குழலார்கூடி கானக்கன்னிலோசினைமோம்
எந்தெந்தநாளுமிங்கேஅந்த யேத்திழையாருடன்சேர்ந்திருப்பார்
மாதேமருத்வதியேகாசிமாநகர் தோணுதுபாரும்பெண்ணே
போதத்தவம்பெறலாம் இந்தபுண்ணியர்கங்கையிக்கன்னியரே
இராசன்பகீரதன்தான்விசுவநாதன்மலரடிபோற்றிசெய்து
தேசம்விளங்கவந்தகங்கைதன்கரைதோணுதுமங்கையேபார்

மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

கந்தமிகுசந்தனிறைந்தவனமோ ஐவர்களிப்புடனிருந்தவனமோ
கொந்தளநிறைந்தவனமோமுல்லைமல்லிகுருந்தமுநிறைந்தவனமோ
பந்துள்செண்பகநிறைந்தவனமோ கங்கைசேர்ந்தருவிபாயும்வன
மோ, அந்தமிகுசோலையுநிரந்தரமுஞ் சூழ்ந்திவருமிந்தவணமே

வசனம்.

அகோவாரும் என்பிராணநாயகா சரணம்சரணமையா சுவா
மிஉன்னதமாகிய வாசனைபொருந்திய முல்லைமல்லிகைநிறைந்தஇந்
தவனத்தினுடைய மகிமையை எனக்குச்சொல்லவேணுமையாஎன்
பிராணநாயகரான மிருகண்டேயமகாமுனீஸ்வரரே.

மிருகண்டேயர்சொல-சிந்து-இ-ம்-புன்னகவராளி.

அடதானம்-கண்ணிகள்.

பனிவெண்ணிலாமொழியேயிதோ பாராய்காசிநகர்பாவையிது
கன்னற்புருவநோக்கிமனக்களிப்புடனேகல்பாவையிது
இன்னமறைநாழிகடிந்திடி லெழிலுயர்மனக்குறைகள்தீர
மின்னேதெரியுமிப்போ காசிவிசுவநாதரிடசந்நிதியும்
அண்டமதின்நிலையும்நல்ல அன்னபூரணியம்மாள்சோபமும்
தொண்டர்சூழ்ந்துதுதிக்கும் வெகுதுய்யதிருவாசகப்பாக்களும்
பாராய்வினைதீர்த்தநாதர்பட்சம்வைத்தாரூவாருச்சிதமாய்
சீரானகாசிவந்தோம்பெண்ணேசிந்தையிலேமிகநொந்திடாதே
இந்தஸ்தலந்தனிலேசிவன்எல்லார்க்கும்வினைதீர்த்தவர்தான்
மைந்தாநமக்குண்டுகாண் உன்தன்மனதிலென்றுமகிழ்ந்திடுவாய்.

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்

பத்தியாய்ப்பரன்பாதம் பணிந்துநற்றவமியற்றும்
சித்தியகவாதி மெய்நிருகண்டேயர்
சித்திரமானதங்கை சிறந்தநற்கறைநாடக்க
பத்தியாய்த்தோணியேற்றும் புகழுமலப்பையாவந்தாரே.

தோணிக்காரர்வருகிற-கரு-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்.

கண்ணிகள்.

கத்தக்காற்புமென்றுதும்பி — கடைவாயிற்புளமடக்கி
சுத்தமானமிருகண்டர்முன் — தோணிக்காரர்தோணிஞரே
சுதர்மீன்கான்மைதின்சாப் — சாம்பக்கிரிசாயப்புடனே
ஆதரவாய்தோணிக்காரர் — அடைவுடன்வந்துதோணிஞரே
அதேன்உசேன்பயனென்று — அல்லாகுத்தஆலாவெனக்
கல்குலெண்ணுதுலுக்குப்பேச்சும் — கரையர்வந்துதோணிஞரே
சையன்கரண்முகமத்தானும் — சாநவிவந்தமகுதானும்
துய்யமிருகண்டேயர்முன்னே — தோணிவந்துதோணிஞரே

ஓட்டப்பாட்டு-இ-ம்-புண்ணாகவராளி.

ஏலேலோ ஏலேலோ தங்கையாள் ஏலேலோ ஏலேலோ
ஆலமுண்டவருள் பாவியாருன்மீதினில் கோலமிருகண்டாலேஉத்
தரணற்றேசுதனில்தந்தையாளையிர்மூனிதேவியாளிடம்ஏலேலோ

புத்திரனேவேண்டிதவம்தத்தைய-பூண்டிடவே பூமிதனில்-அங்க
மாய்ச்சந்திரவனமது கடந்து-அருள்கரு மிந்திரவனமதுகடந்து

விந்தைபெறுகவத்தோருரை மேதவனங்கடந்து
வேங்கைபுலியோடுகரடி விளங்கும்வனங்கடந்து
தந்திமுகன்பதமலரை சிந்தையில்நினைந்து
தயவானகாசிநகர்தன்னருகில்வந்தார் ஏலேலோ

அல்லாவைநம்பிநான் குல்லாவைதச்சேனேஅல்லாவே அல்லாவே
அல்லாவுக்குல்லாவும்ஆத்தோடேபோச்சுதேஅல்லாவே அல்லாவே

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

சன்னியேமனமகிழ்ந்து கனககோபுரங்கள்கண்டோம்
துன்னியபாவம்போகுந் துள்ளறுங்கங்கைகண்டோம்
மின்னியவதனில்மூழ்கி விஸ்வநாதரைச்சேவித்தால்
வன்னியின்மெழுகைப்போல வளர்ந்திடும்பாவம்பேதமோ

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதிநாமிவ்வளவுதூரம்கடந்து வந்துசிவகாமி விஸ்வநாதருடைய பொன்னின்கோபுரத்தைக் கண்டோம்மகத்தாகிய பாவிவிமோசனமானகங்காதீர்த்தத்தையுங்கண்டோம்இத்தருணியிலே வேதவிதிப்பிரகாரம் ஸ்நானம்பண்ணினால்நல்லபுத்திரனைப்பெற்று வாழ்ந்திருக்கலாம் பெண்ணே அனலிலகப்பட்டமெழுகைப்போல் அடைந்தபாவம்தீர்ந்துபோகும் பெண்ணே.

தரு-இ-ம்-புன்னகவராளி-ஏகதாளம்.

கண்ணிகள்.

பாவநாசகங்கையிது — பாவையேநாமிருபேரும்
தேவரைப்பணிவோம்வாராய் — தெரிவையேயிகமகிழ்ந்து
துங்கபத்திரைகோதாவரி — தையகிருஷ்ணவேணியிது
பங்கயபத்தினிளே — பாவையேமகிழ்ந்துவாராய்
தேவர்கள்முனிவரெல்லாந் — தீர்த்தமாடுங்கங்கையிது
பாவையேஇதிலாடிஞற் — பாவமதுதான்தீருமே
முன்னுள்ளவினைகள்தீரும் — மொய்குழலேதீர்த்தமாடாய்
உன்னுளமகிழ்ந்துவோதும் — ஓதியேயிதிலாடாய்

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்விருத்தம்.

அன்புள்ளமனைவியாளே அரிவையேசொல்லக்கேளாய்
இன்பமாயிவ்வனத்திலிருவருமாகச்சென்று
துன்புறும்பசிக்காகாரம் தூயிலாக்கனிகாயுண்டு
தென்புடன்சிவஞர்பாதம் தேடியும்துதிசெய்வோமே

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதி இத்தவனத்திலேதானேநாமிருவருமிருந்து பசிக்குகனியாய் கிழங்குகளைபட்சித்துக்கொண்டு ஈஸ்வரனைக்குறித்து அறியதவம் புரிகுவோம் வாரும்பெண்ணே.

மருத்வதி-மிருகண்டேயர்க்குச்சொல்-விருத்தம்.

தவமதுபுரிவோமென்றீர் சாஸ்திரவிதங்களோதும்
நவமணிஎன்னவந்த நற்றவமுனியேகேளீர்
குவலயத்தன்னிலுள்ள குலவுமிவ்வனத்தியற்கை
அவசியமாகத்தானே அன்புடனுரைசெய்வீரே

வசனம்.

அகோவாரும் முனிநாதரே இத்தவனத்தில்தானே தவஞ்செய்யலாமென்றீர் ஆனால்இத்தவனத்தின் மகிமையைத் தெரியப்படச்சொல்லவேணுமையா சுவாமி.

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

தையலேசொல்லக்கேளாய் தவத்தவர்மகிமைதன்னை
சந்தர்வதூபவோர்வேந்தர் கருணையாற்தேவர்மூவர்

சித்தத்திற்களித்துமிங்கே செய்தருற்றவத்தால்வந்த
அத்தனர்விடையிலேறி அரும்வினைதீர்த்ததாமே

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதி இதவனத்திலுடையமரு
த்வமெப்படியெனில் தவசிகள் இராசாக்கள் பிராமணர்கள் அருந்தவ
ஞ்செய்ய பரமேஸ்வரன் பார்வதிசமேதராய் ரிஷபவாகனமேறிவந்
துகாட்சிகொடுத்த வனமாக்குமிவ்விடத்திலேபோய்நாமிருபேருந்
தவஞ்செய்தால் அப்படியேநமக்குக்காட்சி கிடைக்கும் பெண்ணே.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இவ்விடம்நல்லதென்று இருவருமன்புகூர்ந்து
ஒவ்வியதழைகளாலே ஊர்வசியைசிர்படுத்தி
திவ்வியசலந்தெளித்து சதுர்மூகாக்கினியுண்டாக்கி
திவ்வியமிருகண்டேயர் நிறமுடன்தவஞ்செய்தாரே

வசனம்.

அகோகேளுங் கியானவான்களே இத்தப்பிரகாரமாய் அநேக
திகன்தாண்டி சோலவனங்கள் கடந்து காசிப்பட்டணத்துக்கருகா
மையாய்பஞ்சரோசனத்துக்குள்ளிட்டிருக்கிற திவ்வியமானபுட்பவ
னமத்தியில் ஓரிடத்திலே நிலத்தைமெழுகி பிர்மாக்கினியைவளர்த்
தவஞ்செய்கிற விதங்காண்க.

தரு-இ-ம்-சங்காபரணம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

பரப்பிரம்மசொரூபனே பவக்கடலொழித்திடும் பாலன்தருவாயே

அநுபல்லவி.

இரவும்பகலுங்காசி யீசாயுன்னிணையடி
ஏற்றுவோம்போற்றுவோம் எக்காலமும்பூசிப்போம்-பரப்

சரணங்கள்.

உன்னையல்லாலெங்க ளாருயிர்க்குத்துணையான
உத்தமராரையா

அன்னைபிதாகுரு தெய்வமும்யானென்ற
ஆதரவாய்வரும் போதசொரூபனே

நித்தியமாமமுறையானசெப
நிஷ்டையாகங்களும்

அத்யந்தமுன்னடங் தாலல்லோ-உந்தன்
அருட்பெறலாமதனுளங் களித்திடும்-பரப்

சன்மார்கவழியில்லையென்று
சங்கராவதியாயோர்

மின்னிலைவந்தந்து பேதையர்குறைதீர்ப்பீர்
பெருமானேயெங்கள்காலப் பிழையாவையும்பொறுப்பீர்-பரப்

மிருகண்டேயரும் மருத்வதியும் காசிவிஸ்வநாதரை
போற்றி விருத்தம்.

மாசிலாமணியேபோற்றி மாதவர்க்கருளேபோற்றி
பாசிபோற்படுமையப் பவக்கடலெளிப்பாய்போற்றி
ஏசிலாவுருவேபோற்றி எங்கணுற்றிறைத்தாய்போற்றி
ஈசிகூர்காசிவாழும் அண்ணலேபோற்றிபோற்றி

கட்டியக்காரன்-பொதுவிருத்தம்.

தவமதுபுரியுமேபோது தற்பரனன்புகூர்ந்து
நவமணிமாலைபூண்டு நந்திவாகனத்திலேறி
கவுரியைபிடத்தில்வைத்து காணக்கண்ணில்வந்து
உவமையில்மிருகண்டேயர் வடமகிழ்சபையில்வந்தார்

வசனம்.

இத்தப்பிரகாரத் தவஞ்செய்துதியானித்துக்கொண்டிருக்கிறமி
ருகண்டேயர்சபைக்கு காசிவிஸ்வநாதசுவாமிவருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-மோகனம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

சங்கரர்வந்தாரேரிஷபவாகனமேறி சங்கரர்வந்தாரே

அநுபல்லவி.

கங்கைசடையணிந்து கவுரிபாகம்பிணைந்து
அங்கைமழுமானேந்தி அருள்பெருமுனிவர்முன்-சங்கர

சரணங்கள்.

கவுரிமலையன்விஸ்வனைத்திதேவர் கட்டியலிழுக்கூறவே
பரிவுசங்கீதம்பாடவே தாதிகள் பரிவாயிசைபாடவே
கவிகுரம்பைபூர் வகிடனைமாடவே
தத்திமிகிடதத்திமி தரிகிட தந்தினதோமென-சங்க
வெள்ளரிஷபமேறியேதவத்தின் மீதிற்கருணைபூரியே
பிள்ளைகலிதீர்க்கவேபுவிதனில் பெருந்தவத்தோர்க்கேக்கவே
அள்ளிவிபூதிதந்து அஞ்சாதிருங்களென்று
வள்ளல்மிருகண்டேயர் வாழுஞ்சபையைநாடி-சங்க
அங்கசரடிதொழுவேசுப்ரமண்யர் அறியக்கட்டியங்கூறவே
மங்கையர்க்குமபமேந்தவேணிமன மகிழ்ந்துமங்களம்பாடவே
பொங்கயமாய்பூம் யாகசமுமபுகழவே
புரந்தரன்முதறேவ ரெவர்களுந்திகழவே-சங்க

மிருகண்டேயர்-சுகாமியை துதித்தல்-விருத்தம்.

தேனுடனலர்ந்தகொன்றைத் திங்களும்புனலுஞ்சூடி
மானுடன்மழுவுமேந்தி மகிழ்விடைதனிலேறும்
சோனுடன்பருவவந்த கோலமதறிந்தெழுந்து
ஞானுனச்சடையென்று நவமுனிதுதித்திட்டாரே.

மிருகண்டேயர்சொல்-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

காசிவிசுவேசா நின்சரணம் கைலாசவாசா நின்சரணம்
மாலிலாச்சூடே நின்சரணம் மகிழ்விடையோனே நின்சரணம்

ஆலமுண்டவா நின்சரணம் அம்பிகைபாகா நின்சரணம்
கோலவழகா நின்சரணம் குருவடிவானே நின்சரணம்
வேதகீதபா நின்சரணம் விமலர்க்கருளே நின்சரணம்
ஆகமவானல் நின்சரணம் ஆதிமூலமே நின்சரணம்
அகரநிலயனே நின்சரணம் ஆதிமூலமே நின்சரணம்
புகழ்மாதேவா நின்சரணம் புதிரன்முருவாய்நின்சரணம்

தேவாரம்.

ஐயனேபோற்றிபோற்றி ஆதியாந்தேவாபோற்றி
பையரவணிக்காய்போற்றி பார்வதிபாகாபோற்றி
கையினில்மழுமானேந்தும் கருணையங்கடலேபோற்றி
மெய்யனேபோற்றி மேலவர்முதல்வாபோற்றி

ஈஸ்வரர்-மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

அருந்தவமுனியேயிந்த வரிவையோடடர்வனத்தில்
இருந்திடுங்கன்மமேதிங் கிருவருமணைநினைத்து
பெருந்தவஞ்செய்வதேது பெரும்வரமதுதானேது
திருந்தவேயெமக்குறைத்தால் திறமுடன்கிருபைசெய்வேன்

வ-ம். அதோவாரும் மிருகண்ட மகாமுனிவரேஉமதுபத்தினி யோடுகூடஇத்வனத்தில்வந்து நம்மைநினைத்து தபசுபண்ணவே ண்டியகாரணம்யாது உங்களுக்குவேண்டியவரம் எனக்குத்தெரிவி த்தால்அந்தப்படியே திருவருள்புரியலாம் முனீஸ்வரரே

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

வள்ளலேபோற்றிபோற்றி மதியணியடையாய்போற்றி
உள்ளமேமகிழ்ந்திவந்த வுமையவள்பாகாபோற்றி

கள்ளமில்லாநல்லலெள்ளுங் கங்கையுங்கலந்திருக்க
தெள்ளமுதாரூமீசா திறமுள்ளமகனேயீவீர்.

வ-ம். ஆகோசரணஞ்சரணமையா சுவாமிசந்திரசேகராகமத இழ்ந்து ரிஷபவாகனரூடராய் அம்பிகைசமேதராய் அணுக்கிரகிக்க வந்தஎன்ஐயனே எங்கள்நித்தியகாலத்திலே சுவர்க்கலோகம்சேர்க்கும்படியாய் எனக்கு எள்ளுந்தண்ணீரிறைக்கஇயல்பானதெள்ளிந் தேவாமிர்தந் தந்தருளுமையனே ஆரோகத்திடகாத்திரமுள்ளஒருபுத்திரனைத்தந்துமோட்சசாம்பிராச்சியபதவிக்குஏர்வையாக்கிக்கொள்ளவேணுமென்று தங்களைவேண்டுகிறேனையா சுவாமி.

சுவாமிசொல்-விருத்தம்.

மூப்பிறப்பினிலேநம்மை முழுமனத்துடனினைத்துச்
செப்பியதவஞ்செய்யாமல் சேயிழைகருத்துக்காக
ஒப்பியேவந்தாயிப்போ வுயிர்வரமுனக்களித்தால்
தப்பிதமாகுமந்தத் தனையனும்நாள்தங்கானே.

வ-ம். அகோவாரும் மிருகண்டேயமகாரிஷியே ஐன்மாந்திரங்களிலேநம்மைநினைத்து ஒருவில்தளமாவது பூசிக்காமலும் உமது பாரியாரூடைய அல்லலுக்காகஇப்போதுவந்தரியதவம்புரிந்தாய்உங்களுக்குப் புத்திரவசங்கொடுத்தால் முறைவவரும்அந்தக்குழந்தையும்தீர்க்காயுடனே பூமியில் வாழ்ந்திடாது நானென்னசெய்வேன் மூனியே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

எத்தனைபிழையானலும் யேழைகான்செய்ததெல்லாம்
மெத்தவுமனம்பொருத்து மேதினியோர்கள்மெய்க்க
பக்தாட்சகனேயுந்தன் பதம்பணிந்திறைஞ்சிநல்ல
சித்தமதுறுதியான செல்வனேயருளுவீரே.

வ-ம், சரணஞ்சரணமையா சதாசிவமூர்த்தியே நாங்கள்மனதறிந்தும் அறியாமலும் எத்தனைபிழைசெய்திருந்தபோதிலும் அத்தனையுமனம்பொருத்திந்த பூமியிலுள்ள சகலரும்உம்மைநம்பிபக்திபண்ணும்படிக்கு வரதாட்சகரான உம்முடைய பாதாரவிந்தத்தைதபூசிக்குமனதையுடைய நல்லவுருதியுள்ளவனைஒருபுத்திரனையருளிச்செய்யவேணுமையா சுவாமி.

புத்தியீனமாய்மெத்தப் பொய்யனக்கள்வனுஞ்சி
பித்தனுய்வயதுளரில் பெரும்வரதரவோ அல்லால்

மெய்த்தவமிரெட்டில் மேல்வர்ப்தஞ்சேர்வோனுய்
உத்தமர்தாவோயிக்த னுளத்தினிலுறைசெய்வாயே

வ-ம். அகோவாரும் மிருகண்டேயமகாமுனியேஅறிவில்லாத வனுயும் அசக்யராயுந் திருடனுயும் பித்தக்கொண்டவனுயுமிருக்கி றபிள்ளையை நூறுவயதிலேதாவோ அப்படிக்கில்லாமல் அரியதவத் தையுடையவனுய் பதினுறுவயதிருந்து உடனே உன்னுடையதேவ லோகத்திற்கு வருபவனுய் பிள்ளேவேணுமோ உத்தனுள்ளகர்மத் தைச்சொல்லும்மகாரிஷியே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

ஊனமுஞ்செவிடுபேடும் உள்ளவநூரானுலும்
ஆனந்தார்க்குருவமில்லே அவதியில்வயதிரெட்டில்
ஞானவானுனுலும் ஞாலத்தில்வாழ்வோனுக
ஈனமில்லாமல்தாரும் என்குலம்விளங்கத்தானே.

வ-ம். கேளும் ஜகதீசா கூன்குருடு செவிடுகொண்ட சப்பா ணிபொய்களவு சூது இப்பேர்ப்பட்ட குணத்தையுடையபிள்ளைகள் நூறுனுலும் பிரயோசனமில்லே ஞானவானுப்பேநும் பிரதிஷ்டையு முள்ளவனுய்ப்பதினுறுவயதானபோதிலும் ஒருகுழந்தையைக்கொ டுத்துரட்சிக்கவேணுமையா சுவாமீ.

சதாசிவன் சிவகணங்களுக்குச்சொல்-விருத்தம்.

கண்ணுதலெண்ணுமோர் சிவகணங்களிலொருவர்
நண்ணுமாமுனிவர்தேவி நற்றவத்தரித்து
பண்ணுமாவயதிரெட்டு பதிவுடன்சென்றகாலே
மின்னுநற்பதவிசேர விரகினிற்போய்ச்சேர்வீரே

வ-ம். அகோவாரும் சிவகணங்களாவுங்களில்ஒருவன்போய்மி ருகண்டமகாமுனியினுடைய பத்தினியினுலவயற்றில்கெர்ப்பமாயு தித்துபதினுறுவயதளவும் பூலோகத்திலிருந்துமிருந்ததபோதனரா கியநம்முடைய பதவிக்கு வந்துவிடுஞ்சிவகணமே

இந்தநன்னெறியுரைத்து எழில்மிகுமுனியைநோக்கி
உந்தநற்றவத்தக்காக உலகினில்பதினுறுண்டில்
செந்துவர்வாயர்தீர்த்தோனுய் செல்வனீத்தந்தெண்கைக்கொ
ண்டந்தமாய்நீங்கள்வாழும் ஆசிரமமடைகுவீரே.

வ-ம். பரமேஸ்வரராணவர் இந்தப்பிரகாரமாய்சிவகணங்களுக் குச்சொல்லி மிருகண்டேயமகாமுனியைப்பார்த்துஉம்முடையதவ த்தக்குமெய்த்துபூலோகத்திலே பதினுறுவயதளவும் சீவித்துநல்ல தவத்தில்மிகுந்தவனுய் எங்களுடனுதவிக்கு வருபவனுயொருதிவ்வி யகுமாரனைத்தாருமென் ஆகையால்என்னுடைய பத்தினிசமேதனுய் ஆசிரமத்திற்கெழுந்தருளென்று விடைகொடுத்தனுப்பி சிவனுருந் தமதுகைலக்குச்சென்றார் மிருகண்டேயருந் தமதுஆசிரமஞ்சோந் தபின்புமருத்வ்தி சொல்வதெப்படியென்றால்.

மருத்வதிசொல்-விருத்தம்.

மாமுனிக்கரசேபோற்றி மாதவப்பிரபுவேபோற்றி
நேமமாயரணேவேண்டி நெடுந்தவம்செய்தீரிப்போ
காமனையிரத்தபிசன் கருணையாய்த்தந்தகன்ன
கோமகமுமிகவுண்டாகசீக்கிரமருள்செய்வீரே

வசனம்.

வாரும்முனிவரதரே சரணஞ்சரணமையசுவாமிஇப்போதுமி குந்தவமியற்றிளமரியசனஸ்வரனிடத்திலே நமக்குக்கோமமுண்டாகுமபடியாய்வரங்கிகொணடுவந்தவரமென்னமோ அதைசீக்கிரத்தில்சொல்லியருளவேணுமையா மகாமுனிவரே.

இருவரும்சொல்-தரு-இம்-கம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

மருத்வதி-தரு.

வரமதாமமக்கென்ன வாங்கினீர்முனிநாதா
அரணமக்களித்திடு அடியாளுக்கருளுவீர்

மிருகண்டேயர்-தரு.

அருள்செய்தார்பாலக னரணமக்கீரெட்டில்
செருக்குள்ளஞானச் சிரோமணியே

மருத்வதி-தரு.

சகியேசுதமமக்கு தந்தார்விமலனரும்
நிசமசய்தூவுவயது கர்கொள்ளைஞரீதா

மிருகண்டேயர்-தரு.

எண்ணுதென்துரைக்கிறு யுவியுமுற்றவம்
பண்ணுதவர் பலிப்பதென்மயிலே

மருத்வதி-தரு.

மயிலேப்போல்மகனுக்கு வனத்தில்தவமிருந்து
ஓயிலாகிவரம்பெற்ற தமக்குத்தான்சரியோ

மிருகண்டேயர்-தரு.

சரிதான்செவிடிமை கருகின்றதைத்தடித்து
பரிவுள்ளானையொரு பாலன்போதாதோ

விருத்தம்.

ஈசனாருவினுலே இருவரும்வழிநடந்து
நேசமாச்சமத்திற்சென்று நிமலர்கண்ணுடனேகூடி
ஆசையாலனக்களித்து அழுங்கன்றன்மாவிருன்னி
பாசமார்சோபமுற்றுப் பரிவுடன்வருகின்றுரே

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி.

கெர்ப்பமாகிவந்தாளே மருத்வதிமாது (கெர்ப்ப)

அநுபல்லவி.

கெர்ப்பமாகிவந்தாளே ஈர்த்திசேர்மருத்வதியாள்
செப்பிமுலைதுணிகறுத்து செங்கல்முகம்வெளுத்து (கெர்)

சாணங்கள்.

கொண்டமூன்றுதிங்களுஞ் சென்றுகெர்ப்பந்தரித்த
கோலமனைத்துமனங் கொண்டு
கண்டத்திலுள்ளோர்மகிழ்ந்து கன்னியெல்லாம்புகழ்ந்து
கொண்டைபில்லைமலரணிந்து கூசிக்கூசியேநடந்து (கெர்)

வண்டுமொய்க்குழல் சிலிர்த்துமலரையொத்த
வாள்விழியிரண்டும் வெளுத்து
பண்டுமுன்னிடைகனத்து பரிவுடன்வயர்பெருத்து
சண்டமதனைத்தடுத்து சங்காணையும்விடுத்து (கெர்)

மெய்யுஞ்சொர்ணச்சாயை யென்னவேபச்சைநரம்பு
மேனியிரத்தின நீலமென்னவே
பையபையநடந்து பாங்கிமாருடனெயிலாய்
தையல்லாமகிழ தத்தைப்போலேநடந்து (கெர்)

மருத்வதிசொல்-விருத்தம்.

ஓயனேசிவனேநீரன் றளித்தநல்வரத்தினாலே
தாயலென்வயிற்றிற்கெர்ப்பந் தரித்திடச்சந்தோஷித்தேன்
வையகத்தோர்நகைக்க வளருமெய்யெங்குநோகச்
செய்யவேமிகப்பயந்தேன் சிவசிவாதுயர்தீர்ப்பாயே.

தரு-இ-ம்-பைரவி-ஏகதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாநீர்துணை செய்யவேணுஞ்
செட்டிபெண்ணுக்குத்துணை செய்ததுபோல
தவநிலத்தினில்தந்த வரம்போலே
தற்காத்தென்னை ஏட்சித்தருளுவீர்

புவிதனிலேயொரு பெண்ணைப்பிறந்தநான்
புத்திரவேதனைசற்றும் பொறுக்குதில்லை
அரனேநங்களுன்னேநாடி அதிகதவமிருந்தோம்
தரணிமீதில்நானிந்தத் தயவுதாயப்படவேனே
நகைத்தமுப்புராமெரித்த நாயகனேநலமாயென்னே
நகைத்தகழுத்தினையறுத்தநாதனேநானென்செய்வேன்

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்.

பெருத்தநல்வயிறுங்கண்ணும் பீளையுங்கோட்டிவாயுங்
கரித்துணியிடையிற்கட்டி கையினிற்கோலுங்கொண்டு
வரித்தநற்றலையினேடே மெல்லியாள்முன்னதாக
மருத்துவமாதாதானும் மகிழ்ச்சியாய்த்தோன்றினாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக பிரசவவேதனைப்படுகிற மருத்துவகியின்முன்னே மருத்துவக்கிழவி வருகிறகோலம் காண்க.

மருத்துவக்கிழவிவருகிற-தரு.

இராகம்-தசாவர்த்தி-அடதாளம்-கண்ணிகள்.

ஒட்டகம்போலேமுதுகுகூனி ஒருகையிலேதடியுங்கொண்டு
மட்டற்றதவமருத்துவச்சியுந்தோணினாள்
நாறுபோல்முலைகளாட நரைத்தலையும்விரித்துக்கொண்டு
ஆழிதான்விரலிலணிந்து மருத்துவச்சியுந்தோணினாள்

கிழவிகளைப்போலே பேசுதல்.

கலங்கிடக்குது கழுவாமலே கலநெல்லுகிடக்குது குத்தாமலே மொறங்கிடக்குது மொழுகாமலே முத்தங்கிடக்குது கூட்டாமலே சாக்கிடைகிடக்குதுகழுகாமலே சாணிகிடக்குது தட்டாமலேயடி வேம்பே அரசடியொதுக்கே ஒதியம்பட்டையே உன்னையார்சீந்தப் போறார் வாக்கியங்கரையிலே வறப்பிலேதோப்பிலே ஏரிக்கரையிலேவுச்சியிலே உருமத்திலே அந்திசந்திவேளையிலே ஆசையுமயக்கிறதுபோலே மயக்குறியே தண்ணிகுடத்தை யிறக்கிப்போட்டுகுலுக்குறதுபோலே குலுக்கிறையோ சீசீ ஓடிபோ,

மார்க்கண்டேயர் நாடகம்.

பிரசவவேதனைப் படுதல்.

மருத்துவச்சியைக்கண்டு மருத்துவிசொல்லும்

தெலுங்குநடை சிசுரத்தியம்.

ஆவிதான்சோறுது அடிவயறலையுது
அன்னமேயென்னசெங்வேன் அருமைமாமே ஆ ஆ ஆ-அம்மா
தாயியேபாலனுந் தலைகிறுக்குது
தையலேயென்னசெய்வேன் சகிகள்மாரே ஆ ஆ ஆ-அம்மா
மேவியகோரமோ விண்ணவர்சாபமோ
மெய்யெலாழுலையுதே மெல்லியர்காள் ஆ ஆ ஆ-அம்மா
கூவியபாலனுங் குடல்தனைச்சுருட்டுது
குத்துவலிக்குது கோதைமாரே ஆ ஆ ஆ-அம்மா
தந்தைதாயாங்கள் முன்செய்ததவமிதுவோ
மைந்தன்வருவதிலை யான்மயங்கமுறையோ ஆ ஆ ஆ-அம்மா
விந்தையாமென்னை முனிவிரும்பிச்சோ
வந்தவேளையோ அறிகிலேன் வனிதைமாரே ஆ ஆ ஆ-அம்மா

தரு-இ-ம்-சங்காரபரணம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்செய்வேன்னதுசெய்வேன் ஈசனரே-இப்போ
என்னிடுப்புநோகுதையோ ஈசனரே
பின்னியேவருனையுதையோ ஈசனரே-எந்தன்
பூத்திதமோதுதையோ ஈசனரே

கண்ணிரண்டுஞ்சொருகுதையோ ஈசனரே-எந்தன்
காதிரண்டுஞ்சொருகுதையோ ஈசனரே-கொர்ப்ப
மார்பிலேறிப்புரளுதையோ ஈசனரே
சகிக்கமுடியாதையோ ஈசனரே-நான்

சோபத்தியம்.

மாதேயென்னடிமெத்த வயிறுநொந்துளையுது
ஆதாவாயெந்தன் அருகில்வாடி
பாங்கியேயீயென்தன் பரிதாபம்பாரடி
ஏங்கித்தவிக்கிறேன் என்னசெய்வேன்
வார்த்தைக்குத்தான்பிள்ளை வயிற்றுக்குயேமனும்
வையகத்தோர்க்குள்ள வாழ்வுமிதுதான்
நீதியில்லாமலே நிஷ்டூரம்பேசுகிறீர்
பாதகாரீங்க ளிப்பாபபடவும்
ஞானதைக்கண்மெகிழ்வேனே நங்கைமாரே
பிரம்மதேவனுமிப்படி பேதையாகப்
பாரில்பிரிந்திடவைத்தோர் பாவமேதோ
வெகிவாயினி பொறுத்திடேனென்னசெய்வேன்.

தரு-இம்-பந்துவராளி-ஜம்பை-தாளம்.

என்னசெய்குவேனீஸ்வரனே எதுசெய்வேனீஸ்வரனே
அம்மம்மாரேயென்னசெய்வேன் அடிவயறுநோகுதம்மா
ஆயிரந்தேள்கொட்டிஞப்போல் பக்கமெல்லாம்நோகுதையோ
பாம்புவந்துதீண்டிஞப்போல் பக்கமெல்லாம்நோகுதையோ
சகிமார்கள்யாவருஞ் சார்பில்வந்திருக்கொணுது
வாருங்களடிதாதிமார்கள் வண்ணமுலைமாதர்களா
பாங்கிமாரேயென்னசெய்வேன் பழுவெலும்புநோகுதையோ
பூவையாய்ப்பிறந்திதினி போதுமையாபிரம்மதேவா
என்தலைவிதிப்படியோ எழுதினவன்கற்பனையோ
செங்கமலத்தாகிளா சிக்கிரம்வாருங்கடி
கட்டியணைப்பிடிக்கவொரு காரிழையாள்வரவொண்ணுதோ
சேர்த்தணைப்பிடிக்கவொரு சேயிழையாள்வரவொண்ணுதோ

தாதிமார்சொல்-விருத்தம்.

இந்தநல்வனத்தின் மீது இருந்துதீபுலம்புகின்றாய்
மைந்தனைப்பெறுவாய்நீயும் மனதினிற்கவலைவேண்டாஞ்
சிந்தையிலையமென்ன சிவனதுகிருபையுண்டு
உந்தனுக்கருகிருக்கு முயிர்துணையாமேபாராய்.

வ-ம். அகோவாரும் மருத்வதிமாதே இந்தச் சிங்காரவனந்தனிலேயிருந்து மெத்தவும்நொந்து புலம்புகிறாய் உனக்குயாதொருகுறைவுமில்லை கோடிசூரியப் பிரகாசமாய் நவமன்மதாகிருதியாய் நிரந்தரமுந் தபோநிஷ்டனாய் ஒருகுமாரனைப் பெற்றுவளர்த்துசீராட்டுவாய் உன்மனதுக்கு சந்தோஷமாயிருப்பாய் சந்தேகமில்லை ஈஸ்வரனுடைய கிருபையுமுண்டு உன்பக்கத்திலே நாங்கள்யாவருங்கூடிக் குலாவிக்கொண்டிருக்கிறோம் பயப்படாதே மருத்வதி.

கட்டியக்காரன்-விருத்தம்.

மாதமோபத்துஞ்சென்று மைந்தனைப்பெறுவதற்கு
வேதனையாகநொந்து விமலருக்கபயமென்று
தாதிமாருடனேகூடி தவித்தவள்வயிற்றில்கெர்ப்ப
வாதனைப்படமாட்டாமல் மருத்வதிபுலம்புவாளே.

தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

அம்மா என்னசெய்வேன் அடியம்மா

அநுபல்லவி.

அம்மம்மாயென்னடி- வயிருனையுதவிம்முது
அரையினிடமேமூச் செரியுது(அம்)

சரணங்கள்.

சகிப்போமோ அடிமானே
சகிப்போமோயடி தையலேயிப்போது
நருக்குவலியாகவே உருக்குதேயென்திரேகம்(அம்)

மயக்கமாய்வருகுது வயிருகொந்தளையுது
சகிக்கப்போவதில்லை சாமிக்குச்சொல்லுங்கடி
தரிக்கக்கூடமேலடி தையலேயிப்போது(அம்)

நடுக்குவலியாலே இழுக்குதேயென்திரேகம்
இடுப்புகள்கடுக்குது இருதுடைநோகுது
இருக்கவும்போகுதில்லை இருடிக்குறையுங்கடி(அம்)

விருத்தம்.

செய்தநல்வயிற்றில்வந்து சிறந்தநற்குருவுமாகி
துய்யதோர்கலைமெஞ்ஞான மோங்கியபெயருமாகி
பொய்யெனுங்கலியெடுத்து பொற்புயந்தளர்ந்துசாட
வையகந்தனிற்சிங்கார வனத்திடையுதித்ததம்மா.

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி

மைந்தர்பிறந்தாரே முனிவர்க்கு மைந்தர்பிறந்தாரே

அநுபல்லவி.

மைந்தர்பிறந்தாரே மருத்துவியிற்றில்
சுந்தாமிகுந்தபாலன் தோகைபுத்திரசோபந்தீர(மை)

சரணங்கள்.

வேதமிருகண்டமுனி விரும்பித்தவசுபண்ண
மாதவத்தினாலே வையகந்தனில்நல்ல(மை)
சந்ததியில்லாமலேமுனி தபசுசெய்தபலத்தினாலே
வந்துதித்தார்புவிமெச்சும் மாமறைகளோதிடவே(மை)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

வேதியர்தமக்குநல்ல விரைதானம்விளங்கச்செய்து
தீதிலாதசாதனங்கள் சிறப்புடனளித்துநல்ல
மாதவத்தோர்கட்கெல்லாம் மகிழ்வுடன்கனியளித்து
போதசக்கரைவழங்கிப் புகழ்ந்துதாலாட்டினாரே.

வ-ம். இந்தப்பிறகாரமாகக் குழந்தைபிறந்து பத்துநாளுமான பின்பு புண்ணியவாசனம்பண்ணி சாதகரணம் நாமகரணம் முதலானதும் பண்ணியபிற்பாடு சுமங்கிகிகள்கூடித் தொட்டிலிட்டுதாலாட்டுகிறவிதங்காண்க.

தாலாட்டு-தரு-இ-ம்-புன்னகவராளி-அடதாளம்

கண்ணிகள்

சீரானவேதகுலஞ் செழிக்கவந்தரசியமே
பேரானநல்லமுதே பெருமாளேகண்வளரீர்
சீலசெங்கல்நற்றவத்தில் செல்வனெனவந்துதித்த
கோலமுனிமிருகண்டர் குலக்கொழுந்தேகண்வளரீர்
இலேதீர்ந்துகொடிவதங்கி இல்லையென்றுபோகாமல்
மலைமாதிபோலுதித்த மைந்தனேகண்வளரீர்
அஞ்செழுத்துமாய்ந்து அரனடியைப்பூசைசெய்து
தஞ்சந்துயர்தீர்க்கும் மைந்தனேகண்வளரீர்

இதுவுமது-விருத்தம்.

சித்தையிருநாட்பத்து சென்றநாளுதயந்தன்னில்
மைந்தனுக்கினியநாமம் மார்க்கண்டனெனவகுத்து
இந்தனன்மைத்தாலே எவர்களுமழைப்பிரென்று
விந்தையாய்த்தொட்டிலிட்டு விரைவில்தாலாட்டுவாரே.

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

கண்ணிகள்.

ஆரோஆரீரோ ஆரோஆரீரோ
சீரானமிருகண்டேயர் தவத்தாற்றித்தசெல்வனே (ஆ)
ஆரியமாமுனிவர்துயர்தீர்க்க ஐயனேகண்வளரீர்
பேருடையோர்வந்துதித்த பெருமானேகண்வளரீர் (ஆ)
தாமரையில்நீர்போல்இருபேருந் தயங்கிடும்வேளையிலே
மாமறையோதவென்றுநான்பெற்ற மைந்தனேகண்வளரீர் (ஆ)
அரசில்லாப்பேதுபோலிருபேரு மசைந்தாடும்வேளையிலே
உச்சிதமாகப்பெற்ற உத்தமனேகண்வளரீர் (ஆ)
ஏக்கமடைந்துகுழந்தைவொன்றில்லையென்றெண்ணிவாடாமல்
பாக்கியமதுபோல்நான்பெற்ற பாலகனேகண்வளரீர் (ஆ)

விருத்தம்.

பாலரல்வயதோரைந்தில் பாங்குடன்பள்ளியோதி
சாலவேதாதிவேத சாஸ்திரமாதுங்கற்று
கோலமாய்நீறணிந்து குருவருள்படைத்துநல்ல
சீலமார்க்கண்டனை செல்வனுஞ்சபைக்குவந்தான்.

வசனம்.

இந்தப்பிறகாரமாய் குழந்தைக்குவயதுஐந்து நிறைந்தபோது யோகாப்பியாசம்பண்ணி ரிக்குவேதமும் ஆறுசாஸ்திரங்கள் முத

லானதுங்கற்று விபூதிருத்ராட்ச பரஞ்லங்கிருதனுகிய சுசிசீலனு ஐந்துவயதின் குழந்தைவடிவாய் சபைக்கு வருகிறவிதங்காண்க.

மார்க்கண்டேயர்வருகிற - தரு-இ-ம்-மோகனம் - தாளம்-திரிபுடை

பல்லவி.

வாலிபன்வந்தானே மார்க்கண்டனும்

அநுபல்லவி.

வாலிபன்வந்தானே வையகத்தன்னிலே
சாலவேநாலுவேத சாஸ்திரமாறுங்கற்று(வா)

சரணங்கள்.

ஒன்றிரண்டுவயதில்பள்ளியோதி ஓடைந்துமின்னலிட்டு
தண்டைசதங்கையிட்டுக்கரந்தனிலே தங்கக்கடையமிட்டு
கண்டசரங்களிட்டுக் கனகபொற்பணியிட்டு
வண்டாடும்விழிகளில் மையிட்டழகிலாக(வா)

சந்தியான்மத்தியானமுஞ் செபதபஸ்தானவுபானஞ்
சொன்னவயதோரைந்தில் சிவபூசைதுலங்கியநேமங்களும்
இந்தவிதிமுறை யெல்லாமிகக்கற்ற
சந்தோஷமாகவே தாயின்மனம்பூரிக்க(வா)

நெற்றியில்நீறணிந்து குருவருள்செய்துடன்பணிந்து
கர்த்தனேயந்திசந்தியுச்சி மூன்றுகாலமுந்தானினைந்து
பத்தியும்புத்தியு மெத்தவுடையவராய்
சப்தரிஷிகண்டு சந்தோஷமாகவே(வா)

மார்க்கண்டேயர் மிருகண்டேயருக்குச்சொல் விருத்தம்.

மறைகளுக்குறைகள்சொல்லு மாதவமுனியேபோற்றி
கரைகண்டுசாஸ்த்ரமோதுங் காரணகுருவேபோற்றி
வரையென்னுமபுராணநூல்கள் வகையதுதெரிந்தாய்போற்றி
தரணியிலென்னையீன்ற தந்தையேபோற்றிபோற்றி.

வ-ம். அருமையாகிய ஆறுசாஸ்த்ரம் நாலுவேதங்களின்பொருளுரைக்குந் தவப்பெருமானே போற்றி கன்னூல்களிலுள்ள விதிகளறிந்து கரைகண்டு தெரியச்சொல்லப்பட்ட குருநாதனேபோற்றி மலைபோன்ற அனேக ஆகமாதிகளை யறிந்துரைக்கும் ஐயனே போற்றிபூவுலகத்திலே என்னைப்பெற்றதந்தையேபோற்றிபோற்றி.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

அரன்திருவருளால்வந்த அன்புள்ளசுதனேகேளாய்
திறமுளயாசீர்வாதந் தேவர்கள்முனிவர்மெய்க்க
கருணையாய்வாழ்ந்திருப்பாய் கடவுள்தன்னருளினாலே
மருமலர்வாசத்தோடு மகுத்துவம்பெற்றுவாழ்வாய்.

வசனம்.

அகோவாராய் மகனே மார்க்கண்டா தேவர்கள் முனிவர்கள் ஆசீர்வாதத்தினாலே நீ எண்ணுஞ் சிரஞ்சீவியாக யிருப்பாய் எழுந் திருமப்பாமகனே மார்க்கண்டா.

கட்டியக்காரன் சீசால்-விருத்தம்.

இப்படியிருக்கும்நாளில் இருடியாமிருகண்டேயர்
மைப்படிவிழியாளான மருத்வதிமயிலாலோடும்
அப்பணிசடையோன்றந்த ஆயுசுமாச்சுதென்று
ஒப்பிலாமகனைநோக்கி யுருகுவார்கருகுவாரே.

வசனம்.

இவ்விதமாக இருக்கிறநாளில் மிருகண்டேயமகாமுனிவரும் மருத்வதியும் சிவன்றந்த வயதில் ஐந்துமாயிற்றுதென்று உவமையு ற்ற மகனைநோக்கி விசனப்படுவதுகாண்க.

மருத்வதிபுலம்பல்-தரு.

இ-ம்-புன்னகவராளி-ஏகதாளம்

கண்ணிகள்.

சந்ததியுன்பாசத்தாலே தவமதுதானிருந்து
மைந்தன்மீதிலாசையாலே வயிற்றிலிடங்கொடித்தேனையோ

போதவேதவங்கள்செய்து புத்திரனைப்பெற்றீனியோ
வேதமுனிவர்நகைக்க விதித்தாயோபிர்மதேவா
சைவநெறிதான்தழைக்க சங்கரனுர்செய்தகோவே
வையகற்றும்மார்க்கண்டனே மறலிவந்தாவென்னசெய்வேன்
பாலகனில்லாதபேர்க்கு பரலோகமில்லையென்றுரே
மாலயனுறைசபையில் மாமுனிவர்தானுரைத்தார்
சேல்விழியின்மாதர்வந்து செல்வர்குறையென்றதாலே
ஆலகாலமுண்டயீச ராஞர்பாதம்போற்றிசெய்து
சிலமுள்ளதவமிருந்து சிவனடியைப்போற்றிசெய்து
மாலயனுந்தேடிக்காணு மகாதேவர்தேடிவந்து
பாலகாவுனக்களித்த பதினுறினிலங்குமாச்சே
காலனும்வந்திடுவானே கண்மணியேயென்னசெய்வோம்
கோமானேநாமென்னசெய்வோம் குமாரனேநாமென்னசெய்வோம்
ஏமனுக்கேநான்வளர்த்தேன் என்மகனேயென்னசெய்வேன்

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

தந்தையேதாயேநீங்கள் தாங்கியேமனதுநொந்து
சிந்தையாயுள்ளம்நைந்து வேற்றுருவாவதேது
சுந்தரமுகங்களெல்லாம் சோர்ந்திடுங்கருமமேது
எந்தனுக்கறியவிப்போ யின்னதென்றியம்புவீரே.

வசனம்.

அகோவாருங்கள் என் தாய்தந்தைமார்களே எப்போதும் சூரியவுதயத்திலேயிருக்கிற அலர்ந்த செந்தாமரைப் புஷ்பம்போலே இராநின்ற தங்களிருவருடைய முகாரவிந்தமானது அடியேனைக் கண்டபோதெல்லாம் சந்திரனைக்கண்ட கஞ்சமலர்போலே வாடிவ தங்கியிருக்கவேண்டிய காரணமென்ன நான் ஏதாவது குற்றங்குறைகள் செய்திருந்தால் அடியேனுக்குத் தெரியப்படச் சொல்லுங்கள் என்னைப் பெற்றோர்களே.

மருத்வதிசொல்-தரு.

இ-ம்-காம்போதி-அடதாளம்-கண்ணிகள்.

ஐயனேவுந்தனை-பிரிந்திருக்கவும்-அரனுர்செய்விதியோ
அரன்சதியோ- இதுகதியோ-நல்லகெதியோ-பாலகா
ஐயனே-ஐயனே- அறிவிலேனே-மகனே
வையகமீதினில்-மகனையிழந்து-வாழவும்போமோ

மார்க்கண்டேயர் நாடகம்.

பொதுவாமோ-இதுதாமோ-மகனே
வாடுதே-வாடுதே-என்னுள்ளமும்-மகனே
பாவியேமண்வந்-துன்னைப்பிடித்தால்
பத்துமேபுடலம்-எந்தனுடலம்-அண்டபடலம்-மகனே
பாலகா-பாலகா-அறிகிலேனே-மகனே
மேவித்தவஞ்செய்துன்னைப் பெற்றதுவீணைப்போச்சே
வெகுபேச்சே-வகையாச்சே-மகனே
வித்தகா-வித்தகா-வித்தாகனே-மகனே
பாரிலுந்தனைப்பெற்றுமேகொடிய
பாவியானேனே-இனிநானென்னசெய்வேன்-மகனே
பாவமோ-பாவமோ-பாவமோ-என்னசெய்வேன்மகனே
ஆருமில்லாமலலைந்திடப்போமோ யருமைக்கண்மணியே
நவமணியே-இனிதனியே-மகனே
அப்பனே-அப்பனே-அப்பனே-அறிகிலேனேமகனே
காலன்வந்துன்னைக்கட்டியிழுத்தால்கண்ணற்பார்ப்பேனே
சகிப்பேனே-கதிதானே-சகிதானே-மகனே
காலமோ-காலமோ-காலமோ-அறிகிலேன்மகனே
ஆலமுண்டவரளித்தவபதுஆச்சுதே
அவமே-முனஞ்செய்பவமே-இதுதவமே-மகனே

மருத்வதிசொல்-வாசார்ப்பு.

அப்பாமார்க்கண்டா என்கண்மணியேஅடா
ஒப்பிலாதவத்திணல் உதித்தசெங்கனியேஓ
உன்னையிழந்திருப்பேனேதனியே மகனேயடாதனியே
மகனேயடாசுதனேயடா

ஏமனுக்கிரையாக உன்னைவளர்த்தேனே
உதவிசெய்வாயென்று நினைத்தேனே
மகனேயடாசுதனேயடா

இதுவுமது-வேறுமெட்டு.

அடாமரியுனைப்பிடிக்க அடாமகனே நாங்கள்தவிக்க
கோடையிடிசத்தம்போலும் எமனுன்னைவாடவேகட்டுதற்கு
ஓடிவருவானடா

அப்பாவுன்னைப்பாரிலே ஏமன்சிறியேவந்து
கட்டியிழுப்பானடா அப்பா

இதுவுமது-வேறுமெட்டு.

அப்பாமகனேவுன்னைப்பிரிந்து என்னுயிதரித்திடுமோ
அடாகோலமாய்கலியாணஞ்செய்து கண்ணாலேபார்க்கிலேயே
அடாகொத்தவாவயர்பத்துதே கொடும்பாவியாணபெற்ற
கடனைத்தீர்க்கலேயே அப்பா

ஆலகாலன்தவத்தாலுதித்த கோலமாங்குமாரா அடா
ஆரணுகண்ணுறீருதே சற்குணவுன்னைப்பிரிந்து
என்னுயிதரித்திடுமோ அப்பா

மூத்தவீராயி வர்ணமெட்டு.

சற்குணவுன்னைநான் எப்படியிழந்து
எப்படியிருப்பேண்டா யென்மகனே
பஞ்சமாபாவிநான் ஏமன்கைதந்து-உன்னை
பார்ப்பேனே கண்ணாலேயென்மகனே.

அகவல்.

என்னென்றுசொல்லுவேன் என்னிடமகனே
மன்னனும்யானும் மகிழ்ச்சியதாக
திரிபுரமெரித்த திங்கள்நற்சடையோன்
அருமையாயளித்த என்னையனேகேளுந்
தந்தையானும் சதிருடன்வாழ்ந்து
சுந்தரமாக சுகமுற்றிருக்க
எந்தன்மனையி லிருத்தியேழுனிவரும்
இந்திரன்சபைதனக் கேகியபோது
காட்சிசேராச்சிரமங் காத்திருந்தவென்முன்
சாட்சியதாக சகியர்களிருவர்
வந்துமேயெந்தன் வரிசையைக்கண்டு
அந்தமாய்த்தண்ணீ ரன்புடன்கேட்க
அன்னமும்நீரும் அருந்துவீரென்று
கன்னிமார்தங்கள் கழலிணைபணிந்தேன்
அனைவரிருவரும் அரிவையேயுந்தன்
மன்னவரெங்கே மகனெங்கேயென்றார்

திங்கள்செஞ் சடையோன் திருவருட்குறைவால்
எங்கட்குப்பாலக னில்லையென்றுரைத்தேன்
மாமுனியிந்திரன் மகாசபைக்கேகிய
நேமமதெல்லாம் நெறியோடுரைத்தேன்
இம்மொழியதனை யாவருங்கேட்டு
சிந்தனையுற்று சிவசிவாவென்றே
உள்ளமுங்கலங்கியுருகியென்முன்னே
பிள்ளையில்லாத பெரும்பாவிகையில்
நீரருந்திடுதல் நெறிகுறைவென்று
தூரமாய்நின்று தூற்றியேயென்னை
மைந்தரில்லாத மாபாவிதன்னை
எந்நாளாகிலும் இயலுடன்காண்பது
நிந்தையேயென்று நேரிழையிருவரும்
எந்தனகைத்து ஏகியபின்னர்
ஏந்திழையாளும் ஏங்கியேவாடி
சாந்தியடைந்திடச் சமையமேதென்று
இறையவன்வருகைக் கெதிர்பார்த்திருந்தேன்
மறையவர்சபையில் மகிழ்ந்திடுமிந்திரன்
இன்புறமைந்தரில்லார்க்குமோகூம்
அன்புடனுண்டோ அரைகுவீரென்ன
இந்தமொழியுன் றந்தையுங்கேட்டு
நொந்தவரேங்கி நோன்பிலைலென்முன்
அருமையதான அருந்தவஞ்செய்யில்
பெருமையதாகப் பிள்ளையுண்டாவாய்
காசிமாநகர்க்கு கருத்துடன்சென்று
வீசியகங்கையில் விதியுடனுழி
சிவனையுள்ளிருத்தி செங்காங்குவித்து
அவனியிலிருவரும் அருந்தவம்புரிந்தோம்
எங்களுள்ளன்புக் கிரங்கியேயவனில்
சங்கரனுமையவள் சமேதராய்வந்து
மூப்புமரணித்தமூர்த்தியுமெங்கள்
தப்பிதமெல்லாந் தயவாய்விலக்கி
பாலனையுனக்கும் பதினறுண்டென
ஞாலத்தோர்புகழ கலமுடன்தந்தார்
வாங்கியேவார்த்தை வையகம்புகழத்

தாங்கியேகெர்ப்பம் தரித்துமேவயிற்றில்
திங்கள்ரற்பத்துஞ் சென்றதன்பிறகு
மங்களமாக மகிழ்ந்துனைப்பெற்றேன்
உந்தன்கைகளா லுகந்திடுமோகூம்
வேண்டியேயாங்கள் விருப்பமாயிருக்க
ஆண்டுமிப்போது பத்தாச்சுதுமகனே
துடிதுடித்திடுதே தோகையென்னுள்ளம்
அடிவணங்கிடினு மந்தகன்விடானே
காலனைக்கண்டால் கலங்குமேலோகம்
பாலனேயானும் பாரினிலேங்கக்
கூத்தனும்வந்துன்னைக் கொண்டுபோவானே
பார்த்திடுவேனோ பாவியென்கண்ணால்
நேமமாய்நாங்கள் நெடுந்தவஞ்செய்தோம்
மாமுனியானும் மாபாவியானேம்
பிள்ளையைப்பெற்று பெரும்பாவியானேம்
கொள்ளைகொடுக்கவோ குமரனைப்பெற்றோம்
மூன்செய்ததவத்தின் முறையிதுவேதான்
என்னசெய்வேன்மகனே எனதுகண்மணியே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

மகனேநாங்களென்ன செய்வோம்
வாலவயதுசிறுபாலா வுன்னையும்பொல்லாத
காலன்கையிலொப்பிக்க பாலூட்டிவளர்த்தோமே
ஆலமோமனந்தேறுமோவாடா ஒருமுத்தந்தாடாவுனதருல்ல
பேருமிழந்தயிரு பேரும்பிரிந்தநாங்கள்மகனே
எத்தனைத்தவங்கள்செய்துநான் பெற்றவயிறெனக்கு
பத்திலெரியுதடா மகனே
சித்தமிரங்கிக்காலன் பத்திழுக்கவந்தால்மகனே
தாவியேமெய்மனம் தாவிக்கூவியழுகஅவன்
மேவிப்பிடிக்க வந்தால்

பாவியுந்தனையீழந்தாவி வைத்திருப்போமோ
மகனேநாங்களென்ன செய்வோம்

மருத்வதிசொல்-விருத்தம்.

மைந்தனேயந்தநாளில் மட்டில்லாத்தவங்கள்செய்து
உந்தனைப்பெருவதற்கா யுயிர்க்கழுவினிலிருந்தேன்
சிந்தைநொந்துருகிமெத்தச் செல்வனேயுன்னைப்பொல்லா
வந்தகன்றனக்கொப்பித்து அகமகிழ்ந்திருக்கலாமோ.

தரு-இ-ம்-பைரவி-ஏகதாளம்.

அந்தநாளில்மகனே தவமிருந்து ஈசர்
அடவிதனில்காட்சி தந்தபோது
மைந்தனேயாமுன்னை வேண்டிமுன்னுல் காலன்
வந்திடாமல்வரங் கேட்டிலோமே
பாலடைக்குப்பால் வார்த்தபோது நாங்கள்
பாக்கியங்களிட்டுப் பேரிட்டிலோமே
காலனுரைக்கண்ணில் கண்டபோதே மனம்
கலங்கிடாதேயென்தன் கண்மணியே
உன்னைநாங்கள்பெற்ற நாள்முதலாய் மகனே
ஒருபொழுதும்விட்டுப் பிரிந்ததில்லே
என்னவென்றுமனந் துணிந்திருப்பேன் மனம்
ஏங்கிடாதேயென்தன் கண்மணியே
மன்னர்மைந்தர்மகனே என்னசொல்வேன் எங்கள்
வயிறுபற்றிமிக எரியுதடா

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

என்னிடதாயேகேளீர் இத்தனைதுயரம்வேண்டாம்
பின்னையார்ஜனனமாகப் பிறந்திடமாட்டேன்கண்டீர்
என்னறிவாலேயீசன் எழிற்பதம்பூசைசெய்து
உன்னிதமாகவுங்க ளுளமகிழ்ந்திடச்செய்வேனே.

வசனம்.

அகோவாரும் அம்மா தாயே, நீங்கள் இத்தனைத் துயரப்பட வேண்டிய காரணமென்ன தேவீர் பூசைசெய்த பரமேஸ்வரனே யானும் பக்தியாய்ப் பூசைசெய்வேன் இனி இறப்பும்பிறப்பும் அற்றுப்போகும்படியான வரம்வாங்கிவந்து உங்களுடைய பரிதாபம் தீரும்படிக்குத் தவம்செய்யப் போகின்றேன் நீங்கள் மனசஞ்சலத்தை யொழியுங்களம்மா.

மருத்வதி-புலம்பல்-தரு-இ-ம்-பிலகரி-திரிபுடைதாளம்

கண்ணிகள்.

என்னசெய்வேனிதுக் கேதுசெய்வேனடாயென்மகனே
முன்னுலீசர்கந்த வயதோரைந்திருக்குதென்மகனே
என்னசெய்வோமென்று ஏங்கவேண்டாமெந்தன்- அன்னையாரே
சரெட்டுவயதிற்தயிசரெங்கேபோனர் அன்னையாரே
காலன்றனைக்கண்டுகலங்கியழுவாயடா என்மகனே-என்ன
காரணங்காணவோ உருவெடுத்துவந்தாய்-எந்தன்மகனே
சூலாதரன்பாதம்துணையாகக்கெண்டுநான் அன்னையாரே
தூசத்திவிடுவேன்நீங்கள்தூக்கப்படவேண்டாம் அன்னையாரே
பாவியுன்னைசிறுபாலனென்றறிவாரே என்மகனே-அவன்
பாசசூலமெந்தன்பரிதாபம்பார்க்குமோ என்மகனே
தேவிபங்காளன்திருவடியார்தனை அன்னையாரே-என்னைத்
தீண்டவொட்டாமல் திருவருள்புரிவார்-அன்னையாரே

மருத்வதி-புலம்பல்-விருத்தம்.

இவ்வாறு இயம்பியமைந்தன்முன்
நொந்தழுதுபுலம்பித்தவித்தமனம்
நைந்துவாடிமயங்கித்தயங்கி
வெந்துநொந்து பதைத்துப்புலம்புவாள்.

தரு இ-ம்-அடாணை-ஆதிதாளம்

கண்ணிகள்.

ஐயனேமார்க்கண்டா ஆருனுயென்துயர்
ஆருடன்சொல்லுவேண்டா என்மகனே
செய்யுங்கயிலைவாழும் சிவனருளோப்படைத்து
சிந்தைமகிழ்ந்திருப்போம் என்மகனே
வையகத்தோர்நகைக்க உந்தன்மேலெங்களுக்கு
வாஞ்சைக்கிடமாச்சுதடா என்மகனே
கையில்கிளிவளர்த்து பூனைக்கிரைகொடுத்த
கதையைப்போலாச்சுதடா என்மகனே
மெய்யென்றுனைநம்பி மெத்தமனதிலெண்ணி
வீழித்தேன்கினவாச்சுதே என்மகனே
பாலகாவுந்தனுக்குப் பரமசிவன்கொடுத்த
பதினாறுமாய்விட்டால் என்மகனே

காலனுர்தூதர்வந்துகட்டியிழுக்கவேநீ
சுதரியழுவாயடா — என்மகனே
என்றுமிருப்பாயென்றுயிருபேருமகிழ்ச்சியாய்
எண்ணிமகிழ்ந்தோமே — என்மகனே
இன்றுகண்ணிணுற்பொல்லாஎமனைகண்டுமயங்கி
ஏங்கியாம்மகிழ்வோமோ — என்மகனே
மைந்தனேநீயெங்கள்பாவஞ்செய்தவயத்தில்
வந்துபிறப்பதேனே — என்மகனே
உந்தனைஎமன்கையில்வொப்பிகொடுத்தபின்பு
உயிர்வைத்திருக்கலாமோ — என்மகனே
எள்ளுநீருங்கலந்துஎங்களிருவருக்கும்
இறைப்பாயென்றிருந்தோமே — என்மகனே
அள்ளியஞ்சையுண்டஅண்ணலாடிதேடி
ஆசையாய்த்தவஞ்செயதோம் — என்மகனே

விருத்தம்.

நஞ்சணிகண்டத்தான் சிவனருளாலுனைப்பெற்ற காளய் நாங்கள், கொஞ்சிவளர்த்தெடுத்துக் கோதாட்டிபிள்ளையென்று குறித்தோமெங்கள். நெஞ்சகத்திலுனதுகையாலிருபேருக்குமோட்சமென்றுநினைத்தோம்நாங்கள், வஞ்சகமில்லாயெங்கள்கெதிவளமதென்மகனே ஈவழுத்துவாயே.

வசனம்.

அடாவாடாமகனேமார்க்கண்டா எங்களிருவருக்கும்அந்தியகாலவேளையிலே எள்ளுந்தண்ணீருமிறைப்பாயென்றெண்ணியிருந்தோம் இப்போது ஏமன்வந்துபிடித்துக்கொண்டால் என்னசெய்யப்போகிறோம் மகனேமார்க்கண்டா.

மிருகண்டேயர் மருத்வதியும் புலம்பல்

கரு-இராகம்-முகாரி- அடதாளம்.

என்னநான்செய்குவேன் — என்மகனேமார்க்கண்டா
ஏமன்வருகாலாச்சே — என்மகனே
முன்னமீதறியாமல் — என்மகனே-முனிவர்
மூழ்முதியழிக்காரே — என்மகனே

மார்க்கண்டன் தரு.

நாளாகுதென் றுசெய்யும் நற்றவங்களொளித்தும்
நன்மைகடக்கலாமோ தாய்தந்தையே
ஆளாச்சிவசங்கர னடியினேபூசித்து
அந்தகனேவீழ்த்துவேன் தாய்தந்தையே

தாய்தந்தையர் தரு.

கண்ணேயென்கண்மணியே கட்டிமுத்தேமனம்
கலக்கமுற்றுவாடுதே என்மகனே
மயக்கமேளங்களுக்கு மாதவனேபூசிப்போர்முன்
தயக்கமுற்றறியேனே என்மகனே

மார்க்கண்டன்தரு.

தயக்கமுற்றுநல்லன்னம் தண்ணீரில்லாதுலகில்
தரிக்குமோஉங்கள்பிராணன் தாய்தந்தையே
மயக்கமேனுங்களுக்கு மாதவனேபூசிப்போர்முன்
மறலிவருவதேது தாய்தந்தையே

தாய்தந்தையர் தரு.

ஏனென்றுகைகிறுய்நீ என்மனதிற்குறை
ஈசனிவனடா யென்மகனே
சூதென்றுமுணர்ந்திடா சுதனேயெங்கட்குத்திடம்
சொன்னதுபோதுமடா யென்மகனே

மார்க்கண்டன்தரு.

போதும்போதுமென்றிப்போ புலம்பித்தவிக்கிறீர்கள்
புவிதனேப்போற்றுவீர்காண் தாய்தந்தையே
ஏதுமறியார்போல யேக்கமுற்றுக்கலங்கி
இருதயங்குழையலாமோ தாய்தந்தையே

தாய்தந்தையர் தரு.

ஆமோவென்றெங்களோநீ ஆகடியஞ்செய்கிறுய்
அந்தகனுக்கேதுரைப்பாய் என்மகனே
காமோதரனுனுலுக் கலிவினையைத்தவிர்க்க
தன்னுணர்வேதுரைப்பார் என்மகனே

மார்க்கண்டன்தரு.

தன்னுணர்வேதென்றிந்த தயையிற்றயங்கலாமோ
கலிவியாரறிவார் தாய்தந்தையே

என்னுயிர்க்குயிரான ஈசனரியதுண்டு
ஏதுங்கட்கிம்மயக்கம் தாய்தந்தையே

தாய்தந்தையர்தரு

பெற்றமனம்பித்தங்கப் பிள்ளைமனம்கல்லென்று
பேசுமொழிபழுதே என்மகனே
சுத்தமனத்தோனே நீசொல்வதெல்லமெங்கட்குச்
சூதாகத்தோணுதடா என்மகனே

மார்க்கண்டன் தரு

ஆகாதெனக்குமெத்த அதிசயமாகுதந்த
அந்தகனெங்கிருப்பான் தாய்தந்தையே
சாகாவரம்பெற்றிருந்த சமாசாரம்பழித்து
சந்தோஷமாயிருப்பேன் தாய்தந்தையே

மார்க்கண்டேயர் சொல்விருத்தம்.

அருமையாய்தவமிருந்து அரனடிபூசைசெய்து
ஒருமையாய்பயின்றெடுத்த உத்தமிதாயேகேளும்
தருமனுங்கஞ்சிடாமல் தற்பரன்தனைபூசித்து
வருமினைக்கொடியறுத்து மனத்துயரகற்றுவேனே

வசனம்.

அகோவாருங்களென் தாய்தந்தையரே நீங்களெனக்காகவரம் பெற்றவயது பதினறுமுடியுமுன்னமே இந்தஅண்டபிண்டசராசரசங்களுக்கும்மூலகாரணப்பொருளாயிருக்கிற ஆதிபராபரவஸ்துவாகியஸ்ரீசாம்பவமூர்த்தியினது பாதாரவிந்தத்தைப்பூசித்துஅந்தயெமதர்மராசனுடைய ஆக்கினையை தவிர்த்துக்கொள்ளுவேன் நீங்கள்யாதொன்றுக்கும் கவலைபடவேண்டாம்தாய்தந்தையர்களே.

தாய்தந்தையர்புலம்பல்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஐயையோபாலா அருமையாய்வளர்த்தேன்சீலா
கையிற்பாசங்கொண்ட டேமன்மிரட்ட
கலங்கியழக்கண் டிருப்பேனடா
கட்டிக்கணியேகாண்பேனே திருமுகத்தையினியே
யெட்டியுனையேயமன் பிடித்தால்யிருக்கானினியே
மட்டில்லாதவமுஞ்செய்துபெற்றமகனே அடாசுதனே

பொன்னுனஉன்முகத்தைப்பாராமல் புவியிலிருக்கவோஐயையோ
மூன்னுல்தவமிருந்து பெற்றேமே பாலா
மூழுமோசமாகுதே அப்பாசுதனே
அப்பாதுரையே அந்தமுள்ளயெங்கள்கிறையே
செப்பாவரையேசெல்வமே என்னசெய்குவேன்துரையே
இப்புவியோர்களெந்தனைப்பழித்து இருந்ததவசுஈன்றதிழந்து
ஒருமொழியாகிலும் வாய்திறந்துசொல்லே
உன்க்குமுன்னே என்னுயிரைக்கொல்லே
வருவானேகாலனிதோநிலையாய்விடுவதே யென்மனமும்அலையே
அலையில்தரும்பாய் அலைத்தலைந்தோடித்தவித்து
நிலையாயிருப்பாய் உளம்கொதித்தாலைகரும்பாய்
தலைவிதியினுலுன்னைப்பிரிந்து தாளுமோயெந்தன்சடலமின்னம்

மருத்வதிசொல்விருத்தம்

அப்பனேமகனேநாங்கள் அருந்தவமிகவிருந்து
செப்பமாய்ப்பயின்றெடுத்த சிவனுடஅருளினுலே
மெய்ப்புடன்காலன்வந்து விரைவுடன்பிடிக்கவந்தால்
யெப்படிசிப்பேனென்று யேங்கியேபுலம்புவாளே.

கண்ணிகள்.

கைலைவாழும்ஈசர்கருணையால் தந்தவரம்
காலமு மாச்சுதடா
மயிலாரூந்தனைபெற்று இருபேர்க்குதவியென்று
மகிழ்ந்து மிருந்தோமடா
சுந்தரமுகத்தன்னை யெந்தவிதமறந்து
துணிவுகொண் டிருப்போமடா
அந்தகனபாவி கையிற்கொடுப்பதற்கு
அருமையாய் வளர்த்தோமடா
ஆசையுடனேநாங்கள் நேசமறவாமற்கூடி
அருகி விருப்போமடா
பாசக்கயறுகொண்டு வீசிஇழுக்கக்காலன்
பயந்து அழுவாயடா
வையகத்தன்னிலே மெத்ததவமிருந்து
மகிட்சியாய் பெற்றேமடா
கையிற்கனிவளர்த்து பூனைக்கிறைகொடுத்த
கீரைபோல வாச்சுதடா

யெண்ணுமிருப்பாயென்று யிருபேருமழச்சியாய்
யெண்ணியே யிருந்தோமடா
கண்ணிலெமனைக்கண்டு கலங்கியழும்போதெங்கள்
கண்பார்த்து களிப்போமடா

மார்க்கண்டேயர்சொல் வசனம்.

அகோவாரும் சரணமம்மா தாயே இந்த அண்டபிண்டசராசரங்களுக்கெல்லாம் ஆதிபராபரவஸ்துவாயிருக்கிற ஸ்ரீசாம்பசதாசிவனுடையபாதாரவிந்தங்களைப் பூசைசெய்துவரப்பட்ட தன்பங்களையெல்லாம் தீர்த்துக்கொள்வேன் யாதொன்றுக்கும்சஞ்சலப்படவேண்டாம் தாயே.

மருத்வதி-சொல்-விருத்தம்.

மலரடிபோல்வெகுளாயன் வருந்தினேனுனைநோக்கி
பலபலதவமியற்றிப் பரமனருளினாலே
நலமதாயுனைப்பெற்று நமனுக்கொப்பித்துயாணும்
உலகத்திலுனைப்பிரிந்து உயிருடனுய்குவேனே.

தரு-இ-ம்-சங்கராபரணம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயனேயென்மகனே எந்தனுசைக்கினைந்தகண்ணே.

அநுபல்லவி.

கையினிற்கிளியை வளர்த்துபூனைக்கிறை
காட்டிக்கொடுத்த கதைபோலாச்சுதே-ஐயனே

சரணங்கள்.

பாலகாஉன்முகத்தையிருவரும் பார்த்துமகிழாமல்என்ன
காலங்கள்வந்துதடாளந்தன் கண்மணியென்னசெய்வேன்
சாலவேநொந்துனைப் பெற்றெடுத்தவயிறு
தணலாயுருகி தயங்குதேயென்னுள்ளம்-ஐய

கட்டிதிரவியமேஉள்ளங் கருகியபாக்கியமே
விட்டுப்பிரிந்தினிமேல்இந்த மேதினியோருறவேன்
மட்டுப்படாத கவலைக்குடன்பட்ட
மைந்தனேமானிலந் தன்னில்பிறந்தோனே-ஐய
ஈசனன்றனக்குத்தந்தவயதிதா னீரெட்டுமாச்சுதடா
பேசுமெருமைகிடா தன்னிலேறிவமனிப்போ

பாசக்கயற்விழுல விசியிழுப்பானே
பாலகனேயந்தக் கோவத்தைப்பார்ப்போமே-ஐய

மார்க்கண்டேயர்சொல் விருத்தம்.

தவமிகச்செய்தேபெற்றதாய் தந்தையரேகேளாய்
பவமொழித்தருளுபாதி பரமனர்பாதம்போற்றி
சிவஸ்தலமெங்குஞ்சென்று தெரிசனஞ்செய்துவாரேன்
குவலயத்தோர்கள்மெய்க்க குணமுடனளிப்புவீரே.

தரு-இ-ம்-எ துகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

இந்தவினைக்கென்னசெய்குவேன்-உன்னைப்பிரிந்
தெவ்விதமாய்மனமுய்குவோம

அநுபல்லவி.

தந்திரமாமுடி வாச்சே-உன்னையழைக்க
தருமன்றூதுவர வாச்சே

சரணங்கள்.

அந்தநாளில்யமன்செய்த அருந்தவம்நலமாலுல்
அரும்வயதென்றும்பதினாறாய் நிலைக்கொணுதா-லுந்த
மாதவஞ்செயலறி வாயோ யெமையன்றி
மகிழ்ந்துவனத்துக்கேகு வாயே
காதவழிநடப் பாயோ பாதம்நோக

ஆலனுக்குமரிதாமோ இந்தக்கருமம்
ஆகந்துணிந்துவிடை வாகமொழிந்தெழுந்தாய்-இந்த

கலியுகம்பிறந்திட லாச்சே-தவத்தோர்
காட்சிபெறவேகன லாச்சே
கலியுகத்தேவர்கள்கைக்கொள் வாரோ-உன்னிறு
பாலனென்றிகழ்ந்து விள்ளாரோ

சலித்தமனத்திற்கு சள்ளைமேலிடுங்கண்டாய்
ஜகதீசன்கிருபையென்ற சாபல்லியமிகக்கொண்டாய்-இந்த

யெந்தநாளும்தவசிக ளாச்சேயெங்களையெந்த
இடைமேயோரெவருமகிழ லாச்சே

சொன்னலுங்கேட்பாயோ மகனே-மனப்பேய்நான்
சுவாதீனமாயிரு மகனே
உன்னலெங்கள்தீவினை யொழியுமென்றிருந்தோம்
ஊழ்வினைப்பயன் தோன்றியுருக்கொண்டதே-இந்த

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

தந்தையுந்தாயுமிந்த தகமையாயுரைக்கக்கேட்டு
யெந்தையேயெமக்குமுன்னீஸ்வரன் கிருபையுண்டென்று
சிந்தையில்மிகத்தெளிந்து செழுந்தவவடிவுஞகி
விந்தையாய்மார்க்கண்டே யர்விரைவினில்நடந்திட்டாரே

கரு-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்,

நாரணனும்நான்முகனும் நாடுமலர்பாதந்தேடி
காரணமார்க்கண்டே யரும்கடுகி நடந்தனரே

எத்திசையுள்ளோர்பணியும் ஈசன்றன்பாதந்தேடி
பக்தியாகபூசைசெய்யபாலகன் நடந்தனரே

ஆலமுண்டகண்டருறையா யிரத்தெட்டுதலமும்
சீலமுடனேசேவிக்கசெல்வரும் நடந்தனரே

மருத்வஇபெற்றெடுத்த மைந்தனுமார்க்கண்டேயர்
கருத்துடன்சிவனே போற்றிகருணைபெற நடந்தனரே

அந்தநாட்சிவனளித்தான்வய துபதினைஞும்
எந்நாளுமெனக்கேயென்றுயெழிலுட நடந்தனரே

காமனையெரித்தகண்ணன் கழலிணைபொழுதுபொல்லா
ஏமனைவீழ்த்துவேனென்றுஇயலபுடன் நடந்தனரே

பூவனத்தில்பூதாதன்பொற்கழல் பணிவோர்க்கெல்லாம்
தவனலமுண்டென்றன்தன்னையேசி நடந்தனரே

சொற்ப்பனத்திலும்சிவன்றன் சோதியைநினைத்தோர்க்கெல்லாம்
கெற்பவாதைதீர்த்தென்னிலேசமாற்ற நடந்தனரே

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

பருவத்திலெழுந்துவந்து பரமனேதுதிக்குமந்திரம்
இருபத்துநான்குஞ்சொல்லி எழிற்றவமியற்றும்போது
உருவத்திற்சிறந்தோராகி ஆசிதையாழ்கையிலேந்தி
கெருவத்தின்மிகுதியுற்று கெடிகொள்நாரதர்வந்தாரே

கரு-இ-ம்-செளராஷ்டகம்-அட்தாளம்.

பல்லவி.

நாரதர்வந்தாரே மகாமுனி நாரதர்வந்தாரே

அநுபல்லவி.

பாரினில்மிருகண்டேயர் நாரிபாகனைத்தேடி
பண்ணியதவத்தினால் வந்தபாலகனைநாடி-நாரதர்

சரணங்கள்.

செஞ்சிசடைமுடியுடன் சிறந்தபஞ்சாட்சரத்தின்
செபமாலைகையில் லீலங்க
பஞ்சமுகருத்ராட்ச மாலைபுனைத்தோலுடன்
புரிவாய்வந்துவிஜைதம் பரவும்கலகஞ்செய்ய-நாரத

அயன்வருவாரிருவருக் கருள்மிகத்தாவென்று
அசக்கித் தசக்கிக்கொண்டு,
நயனமூன்றுடையோனே நாடித்துதித்துக்கொண்டு
நற்றவரெவரையும் நங்குநொடித்துக்கொண்டு-நாரத

புவியில்மார்க்கண்டரைப்போல புனிதரெவருண்டென்று
புத்திமகிழ்ச்சி கொண்டு
செவியில்கேட்பதெவையும் சிக்கையில்வைக்கேனென்று
சிறந்ததவமியற்றுங் செல்வமார்க்கண்டேயர்முன்-நாரத

மார்க்கண்டேயர்சொல் விருத்தம்.

வந்தநாரதரையையன்மகிழ்ந் தடிவணங்கிப்போற்றி
தந்தைதாய்நீரேவேறுத் தன்னினமில்லைகண்டீர்
யெந்தனைபொருட்டாயெண்ணி இதயத்திர்களித்துவந்தீர்
சிந்தனைதவிர்த்துசண்டன் செயலொழிவைகைசெய்வீரே.

வசனம்.

அகோசரணஞ்சரணமையாநாரதமகாமுனிவரே தேவரீர்தெ
ய்வலோகத்திலே வசம்பண்ணப்பட்டவர் அடியேனை யொருபொ
ருட்டாயெண்ணி இவ்விடத்தில்வந்தீர் எனக்கு உம்மைப்பார்க்கி
லும் வேறேயாதொரு ஆதரவுமில்லை ஆனபடியால் எனக்குத்தாய்
தந்தையர் இஷ்டாமித்தீர் எல்லாரும்நீரே எண்ணித்தேடி வரப்
பட்ட எமனைசெயித்தவனுடைய ஆக்ஞைக்கு உட்படாமலிருக்
கும்படியான வகையை யருளிச்செய்யவேணுமையா சுவாமி,

நாரதர்-மார்க்கண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

மாதவமிருகண்டேயர் மைந்தனேகேளாயிப்போ
வேதனைமனதில்நாடி விரும்பியேதவம்புரிந்தால்
போதவேசிவபூசைக்கும் பொருள்வசையுள்ளதெல்லாம்
ஆதரவாயுரைப்பார் அந்தகன்தனைவெல்வாயே.

வசனம்.

திருவாரூர்வாழ் தியாகராஜனே
திவ்யமனோஹர சின்மயதேஜனே

அநுபல்லவி

கருஞநக்குட்டிரும்பவாசாமல்
கருணைகானேயென்னேச்சிறுயெம்பி

சரணங்கள்.

யார்தங்களாண்மெத்த வோடினேன்-இக
சிந்தனை போலுளம்வாடினேன்
வந்தனஞ்செய்துதேடினேன்-இப்போ
எந்தன்பிதாவென்றேநாடினேன்
வந்தனிப்போவென்றும்பாடினேன்
வாதாவென்மேலென்றுங்கூடினேன்
சந்திரசேகரனேசங்கரசற்குருசம்போ
அந்தகனுக்கஞ்சிவந்திடும்சம்போ

தேவாரம்.

அல்லிமாலைபுனைந்த அரகரா திருவாரூரா
மெல்லிக்குபிள்ளையின்ற மேலவவேதியேறி
கொல்லவேபாசங்கொண்டு கொக்கரிப்போடுவந்து
அல்லவேமண்மைக்கு அஞ்சுவாய்தியாகராசா.

தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

இந்திரன்பூசைபுரியும்பாதனே திருவாரூரில்வாழும்
ஏகனேதியாகராசலிங்கமே
மந்திரமுரையாகபூசிப்பேன் சிவசாம்பசிவா
மாலிவராமற்காததருள்வாயே
பாலைவனக்குதூதுசென்றவா அல்லியங்கோதை
பங்கிலமருந்தியாகராசனே
சரணமென்றுனைபூசைசெய்கிறேன் சிவசாம்பசிவா
சங்காயெந்தன்சஞ்சலந்தவிர்ப்பாயே
கமலநாயகிபாகத்தமர்ந்தவா சிவசாம்பசிவா
கடையேனுக்கருள்புரிபவேணுமே
அமலனேயுன்னைப்பூசைசெய்கிறேன் சோமமன்னனுக்
காசருளியதியாகராசனே
அல்லிமாலைபுனைந்தசனே சிவசாம்பசிவா
ஐயனேயுன்னைப்பூசைசெய்கிறேன்
மெல்லிக்கிபிள்ளைவரமளித்தவா தேவாண்டியின்காவில்
மேவுயிர்தந்ததியாகராசனே

தேவாரம்.

அண்டர்கள்முனிவண்போற்ற ஆயிரங்கண்ணன்பூசை
கொண்டதோராரூரீச கோகனகத்தாள்போற்றி
தொண்டருக்குள்ளாய்போற்றி துதிப்பவர்மனத்தாய்போற்றி
சண்டகனெண்முன்வாராமல் சந்ததங்காப்பாய்போற்றி.

கொச்சகம்.

சண்டன்கிடாவிலறி சாடுவேனென்றுமவன்
தண்டனைக்குள்ளாகாமல் தற்காத்தருள்பானே
கொண்டலினம்பரவக் குயிலொலிகள்கேட்டுமகிழ்
அண்டர்கோவேயாரூர்க் கரசனேதியாகேசா.

கட்டளைக்கலித்துறை.

அமலனேபோற்றிபோற்றி யானந்தநிருத்தாபோற்றி
விமலனேபோற்றிபோற்றி வெள்விடைபாகாபோற்றி
தருதமக்கையாய்போற்றி சதுர்மறைப்பொருளேபோற்றி
கமலவார்சடையாய்போற்றி கயிலைநாயகனேபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

மூன்றும்பிரிவு-முற்றிற்று.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

மார்க்கண்டர்முனிவர்தாமும் வையகந்தன்னின்மீது
கார்க்கண்டதூரமெல்லாங் கடுகியேகடந்துமிப்பால்
தாரமர்பூக்கள்கொண்டு சதிருடன்போற்றிசெய்து
ஆர்கொண்டகடையூரீச னடியினைபூசைசெய்தார்.

வசனம்.

ஆகோ கேளுங்கள் நித்தியானந்த பரிபூரண சிருபையையடைந்தபக்தசிரோமணியானவரே இந்தப்பிரகாரம் பூமியின்கண்ணுள்ள ஆயிரத்தெட்டு சிவாலயங்களுந்திரிந்து அங்குள்ளதீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணிநித்தியகர்மானுஷ்டானங்களைமுடித்துக்கொண்டுஸ்வரபிரதானங்களினாலே சந்துஷ்டியடைந்துவருங்காலில் ஒவ்வொருநாளும் ஆயிரத்தேழு ஸ்தலமும் யாத்திரைசெய்துவந்தோம் இனியிந்த அமுர்தலிங்கமர்ந்திருக்கிற சேஷத்திரத்துக்குவந்து பூசிக்கிறகாலத்திலே கந்-வயதும் கச-மாதமும் கஞ்-நாளுமாய்விட்டது இனி

இவரைத்தவிர நமக்கு என்றுஞ் சிரஞ்சீவியாயிருக்கும்படியான வரமளித்து திருவைசெய்பவர்கள் வேறொருவருமில்லையென்றுநிச்சயித்து சுவாமியின் ஆலயத்தில்நாம்பூமண்டலத்திலுள்ள சிவாலயமெங்கணும்போய் கடைசியாக இந்த க்ஷேத்திரத்துக்கு வர்தோம் ஆகையால் இந்த க்ஷேத்திரத்துக் திருக்கடையூரென்கிற நாமதேயம் நம்மால்வழங்குமென்று கடையூராளே என்னைக்காருமென்று அங்குள்ள அமிர்தகுண்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பரிமளசுகந்த புட்பங்களைக்கொய்துகொண்டு திருக்கடையூராளென்று வழங்கிவருகிற அமிர்தலிங்கரை தோத்திரஞ்செய்துபூசிக்கிறவிதங்காண்க



நான்காம்பிரிவு.

(*)

இதுமுதல் திருக்கடையூர் பூசை.

சமலாகிரஸ்வகலாமாராதிபயபஹரூதவேளகதம்வாத்வயா
தருஷ்டகிஞ்சாதெதருதசாதனேரிமபஜபூபலம்
ஜிகவாயாமணிசித்தகடிகாவாண்டதேதேசே
புருஷதம்தேகிலமனூர்விஷ்ணுமயம்சம்போமஹாதவன்

வங்கியாகாரமகித்தியசூத்தியர்த்தம்நிகமாகபாகஷிதம்
நித்யகல்யாணிலிலமநுவகாயகமோகம.

நூதன ஜாவளித்தருக்கன்.

ஸ்ரீ திருக்கடையூர் சேஷத்திரம்.

ஜாகம் சோகயாளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

கடையூரீசா — என்னசெய்குவேன்
காலனிப்போ — வந்துவிட்டானே-ஈசா

கெட்டகாலன் — கிட்டவாரான்
கடைக்கண்ணாளி — கடையூரீசனே-காலன்

கட்டிஎண்ணே — வெட்டப்பார்க்கிறான்
கிட்டிவந்தேன் — கடையூரீசனே-எண்

கொடியசண்டன் — கொன்றுபோடுவான்
கடியநீவா — கடையூரீசனே-சண்

ஏமன்பல்லை — இளித்துவாராமனே
தாமசமேன் — கடையூரீசனே-பல்

சீராய்பூசை — செய்யுமார்க்கண்டனே
காராயிப்போ — கடையூரீசனே-பூசை

கண்ணிகள்.

ஆதியந்தமாகிநின்றவா — திருக்கடையூரில்வாழும்
அமூர்தலிங்கதேவனே

பூதலமெங்குந்திரிந்துநான் — சிவசாம்பசிவா
புனிதனேயுமைப்பூசைசெய்கிறேன்

மல்லிமுல்லைசெண்பகமலரால் — சிவசாம்பசிவா
மலர்ப்பாதத்தனைப்பூசைசெய்கிறேன்

சொல்லும்நந்தியாவர்க்கமலர்கொண்டு — சிவசாம்பசிவா
சோதியேயுனைப்பூசைசெய்கிறேன்

ஆலமருந்தியமுதளித்தவா — திருக்கடையூர்வாழும்
அபிராமிமகிழமூர்தலிங்கமே

காலன்வந்தெனைக்கட்டிடாமலே சிவசாம்பசிவா
கஞ்சமலர்கொண்டு பூசைசெய்கிறேன்
கொன்றைதும்பை வில்வமலர்களே சிவசாம்பசிவா
கொண்டுவந்தே பூசைசெய்கிறேன்
என்றைக்குமென்மூன் னேமன்வராமலே சிவசாம்பசிவா
இணையடிகள் தந்தாளுமையனே

இ-ம்-பண்சாதரி

தலையேவணங்காய்-தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபரிதேருந்தலையனைத்-தலையேவணங்காய்

கண்காள்காண்பின்களோ-கடனஞ்சுண்டகண்டன்றன்னை
பெண்டோள்விசிறின்றுடும்பிரான்றன்னை-கண்காள்காண்பின்களோ
செவிகாள்கேண்பின்களோ-சிவ-னெம்மிறைசெம்பவள
வெரிபோன்மேனிபிரான்றிரமெப்போதும்செவிகாள்கேண்பின்களோ
மூக்கேநீமுரலாய்-முது-காடுறைமுக்கணனை
வாக்கேகோக்கியமன்னைமணாளனை-மூக்கேநீமுரலாய்
வாயேவாழ்த்துகண்டாய்-மதயானைபுரிபோர்த்தம்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னைவாயேவாழ்த்துகண்டாய்
கெஞ்சேநீநினையாய்-நிமிர்-புன்சடைநிர்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை-கெஞ்சேநீநினையாய்
கைகாள்கூப்பித்தொழீர்கடிமாமலர்தூவிநின்று
பைவாய்ப்பணியார்த்தபாமனைக்-கைகாள்கூப்பித்தொழீர்
ஆக்கையாற்பயனென்-கறைக்-கண்டனுறைகோவில்
பூக்கையாலடிப்போற்றிபெண்ணுதவிவ்-வாக்கையாற்பயனென்
கால்களாற்பயனென்-கறைக்கண்டனுறைகோவில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழ்-கண்டனுறைகோவில்
உற்றாராருளரோ-உயிர்கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தரல்லாணமக்குற்றாராருளரோ
இருமாந்திருப்பன்கொலோ-ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டு
சிறுமானேந்திபின்சேவடிக்கீழ்சென்றின்றுகாந்திருப்பன்கொலோ
தேடிக்கண்டுகொண்டேன்-திரு-மாலொடொன்முகனும்
தேடிதேடொணாத்தேவனையென்னுள்ளேதேடிக்கண்டுகொண்டேன்

தோத்திரம்-அகவல்.

சிவசிவசம்போ திரியம்பகாபோற்றி
பவமறுத்தாண்ட பரமனேபோற்றி
மாகதவடிவாய் வணிதையோர்பாகர்
அரவாபரணு ஐந்துதுட்பொருளே
திங்களுங்கங்கையுஞ் சிறந்தவேணியனே
எங்களுயிர்தாரு யிருந்திடும்பொருளே
பஞ்சாட்சரத்துட் பதிவிருந்தவனே
கஞ்சன்சிரசைக் கபாலமாய்க்கொண்டு
கஞ்சையுண்டு நாகவில்கொண்டு
தஞ்சமென்றடியார் தமக்கருள்புரிவோய்
மூப்புரமெரித்த முக்கண்ணேபோற்றி
தற்பரானங்கன் றண்ணீயுமெரித்த
மெய்யென்றிருந்த மீனவன்றனக்காய்
வையையடைக்க மண்ணீச்சுமந்து
அடியதுபட்டே அடியவர்தமக்காய்
வடிவதுகாட்டி வாழும்வித்தகனே
கறுக்குழிதோறுங் காயமெடாமலே
திருக்கடையூரா திருவருள்புரிவாய்

தேவாரம்.

திங்கள்சீர்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
அங்கைமான்மழுவுமேந்தும் அண்ணலேயரனேபோற்றி
பொங்காவணிந்தாய்போற்றி பூதங்கட்கிறைவாபோற்றி
சங்காரகடையூர்வாழும் சதாசிவப்பொருளேபோற்றி

வசனம்.

அகோகேளும்பிள்ளாய் மார்க்கண்டா மூப்பத்துமூக்கோடிதே வர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அஷ்டதிக்குப் பாலகர் களும் என் அருமை மனைய ஆனைமுகனுக்குச் சிறியசுதனாய் ஆறு முகவனும் அறிவத்தக்கதாக இன்று முதல் என்றும் குறைவில்லாம லே யென்றும் பதினாரு வாம்பிடியும்பிள்ளாய் மார்க்கண்டேயச் செல்வமே.

கடையூர் பூசை.

இ-ம்-இந்துஸ்தானி-தக்கடா

மல்லிகையிருவாட்சிபுன்னை மலாடிசாத்திகர்த்தனே மலர்
னன் அல்லல்களைத்தீரு மகாதேவனேபோற்றி
சாலவுண்ணேயான்துதித்தேன்சாமி சங்காராகர்த்தனேசாமி
காலமிதுயென்னேயாளசாலமேதையா
ஆதியிலேநால்வ ,க்கு மோதினபொருளேகர்த்தனேயோதின
உன்-காதில்முருகர் ஓதினசொல்பா திஅருளே
கையில்பாசக்கொண்டுவமன் கடுகிவாரான்-என்
மெய்நடுங்குதுஎன்னசெய்வேன் மெல்லியர்பாகா
கடையூர்தனில்வாசனே ஓய்கருணைபாரையா
தடையில்லாமலிதுவேளை தருணங்காரையா
நம்பியுன்னைநான்துதித்தேன் நாயந்தானேயா
வம்புயிதுவந்துவாங் தாருதேனேயா

இ-ம்-சாமா.

எட்டுத்திசையோரும் போற்றிதுதிசெய்யும் அஷ்டாக்ஷரப்பதி யே, தயாநிதியே-பெருங்கதியே—ஆதியேயுமைப்பாதியே-பாஞ்சோ தியே-சோதியே.

சம்போசதாசிவ சங்கரனேயென் தலையில்வித்தாளை, உம் பர்தொழுதேற்றும்பரனேயிந்தவுலகில்பெரும்பாவியானேனே.

அங்கமெல்லாமொரு லிங்கவுருவான சங்கரனே கங்காதரனே எங்கெங்கும் தேடினுன்காணுமல்வாடினேன் யிந்தவேளைகார்ப்பாய் மைந்தனே.

முத்துவீராயிமெட்டு.

துதர்வரவுற்றார்களே வாதுசெய்யவாறார்களேயேதுக்குஜென் மமெடுத்தேனே-அந்த-பாதகருடனே வாதுசெய்யவிட்டு பார்த்திரு ப்பாயோ நீ கடையூரானே.

அண்டமிடிந்துயென் அண்ணைடயில்விழுந்தாப்போல் அண்டார் பெருங் கூச்சலிட்டுவாரான், அவனைக்கண்டுபயந்து உன் அண்டை யில் இன்றேனே கார்ப்பதுன்பாசம் அபயமையா

மார்க்கண்டேயருக்கு பரமசிவன் அசரீவாக்காய்

தைரியங்கூறல்.

அபயமென்றபாலகாகார்க்கிரேண்டாயிதோ அஞ்சமடிக்கிறே ண்கைகொட்டா இனிபயம் இல்லையடா பாலர ஏமன்வந்தாலும் அ ஞ்சாதேயடாபாலா

ஆனைமுகவனும் சாட்சியடாபாலா ஆறுமுகவனும் சாட்சிய டா, சேனையுடனே வந்தெதிர்த்தாலும்சற்றும் அஞ்சாதே உதைக் குரண்டா.

தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

அன்னைபிதாகுருதெய்வமூர்கடை — யூரிஞதா-உன்றனை
அண்டினேனடைக்கலங்கார்த்தருள்வாய்கடை — யூரிஞதா
பின்னையொருவர்துணையில்லைதிருக்கடை — யூரிஞதா-ஏமன்
பிடியாமலெத்தனையாதரிப்பாய்கடை — யூரிஞதா
கொன்றைமலர்கொண்டு பூசைசெய்வேன்கடை — யூரிஞதா-என்முன்
கூத்தன்வந்தணுகாமல் காத்தருள்வாய்கடை — யூரிஞதா
என்றைக்குமுந்தனடிமைகொள்வாய்கடை — யூரிஞதா-நான்
ஏற்றியடிபிணைபோற்றிசெய்வேன்கடை — யூரிஞதா
நல்லவில்வங்கொண்டு பூசைசெய்வேன்கடை — யூரிஞதா-நான்
நாசகாலன்வாதருள்வாய்கடை — யூரிஞதா
மூல்லைமலர்கள்கொண்டுபூசைசெய்குவேன்கடை — யூரிஞதா-என்முன்
மிருகியுவந்தணுகாமல்காட்சிதருவாய்கடை — யூரிஞதா
கங்கியாவிருட்சமலர்கொண்டிருக்கடை — யூரிஞதா-உந்தன்
கனிமலர்ப்பாதம்பூசைசெய்குவேன்கடை — யூரிஞதா

அந்திசந்திவெள்ளெருக்கமலர்கடை — யூரிகாதா-ஙிதமும்
ஆராய்ந்தெடுத்துனைப் பூசிப்பேன்திருக்கடை — யூரிகாதா
செண்பகமொடுபாரி சாதமலர்க்கடை — யூரிகாதா-வெகு
சீராயெரித்துச்சேவடிபூசிப்பேன்கடை — யூரிகாதா
பண்பானபாதிரி மலரெடுத்துக்கடை — யூரிகாதா-உந்தன்
பாதத்திற்பூசித்துப் பணிவேனென்திருக்கடை — யூரிகாதா
பொங்காவணிந்திடும் சங்காரனேகடை — யூரிகாதா-உந்தன்
பெற்பாதமேகதி யாகத்திருக்கடை — யூரிகாதா
செங்கமலர்களைக் கொய்துவந்துகடை — யூரிகாதா-உந்தன்
சிந்தைமகிழ்ந்திட பூசிப்பேன்திருக்கடை — யூரிகாதா
எந்தஸ்தலமுந்திரிந்துவந்தேன்கடை — யூரிகாதா-உன்னை
எமனுக்குவயிரியென்றெண்ணினேன்கடை — யூரிகாதா
இந்தவிதமாய்நாணெண்ணு மொன்றுய்க்கடை — யூரிகாதா-உந்தன்
இணையடிபோற்றிகொண்டிருப்பேன்கடை — யூரிகாதா
ஏமன்வந்தெண்ணை யிழுத்திடையில்கடை — யூரிகாதா-வய
தெண்ணும்பதினெறன்றியம்புவர்க்கடை — யூரிகாதா
ஓ நாமத்தையென்றுமிந்நாட்டினுள்ளோர்கடை — யூரிகாதா-ஙித்த
நவின்றிடுவாரெமன் நாடாற்றிருக்கடை — யூரிகாதா

கட்டியக்காரன் சொல்-விருத்தம்.

பூசைகட்கிசைந்தபத்ர புஷ்பங்கள்தேடிவந்து
ஆசையாய்கடையூர்வாழும் யமுர்தலிங்கேசர்பாதம்
நேசமாய்பூசைசெய்து நென்கிடைவணங்கயேமன்
பாசமதகற்றியாளப் பரமனும்பிரசன்னமானார்.

வசனம்.

அகோகேளுங்கள் அதிபக்திமான்களான புண்ணியபுருஷர்கள்ளே இந்தப்பிரகாரம் பூஜார்க்கமாய் இருக்கிற ஒவ்வொரு புஷ்பங்களையும் தேடி கொய்துக்கொண்டு வேதவிதிப்படி நெறிதப்பாமல் பூசித்துப் போற்றி அணுப்பிரமாணமும் சித்தம் பேதியாமல் ஈசர் கிருபையிலல்லது அந்த எமதர்ம மகாராசனை செயிக்கமுடியாது சிவனது நாமமாகிய பஞ்சாட்சரமேஜெயிக்கும்பிரமமென்று இடைவிடாமல் பஞ்சாட்சரத்தை ஜெபித்துக்கொண்டு மனதுருகியாகி

ஓ இவ்விடத்தில் எந்தன்நாமத்தை என்று வருவித்துபாடவும்.

மார்க்கண்டேயருடைய அதியுக்ரமானபக்திக்குசந்தோஷித்துஅனுக்ரகிக்கவேணுமென்று பக்தபராதீன அமுர்தலிங்கேஸ்வரசுவாமி பிரசன்னமாவது காண்க.

மிருத்தியஞ்செய அவதாரம்.

கரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

அருந்தவமார்க்கண்டர்க்கருளு மிருத்யஞ்செய
ரவதரித்திருந்தாரே

அநுபல்லவி.

பெருந்தவமியற்றிய பிரம்மனுபதேசத்தால்
பெருவேமெனவெண்ணி மிகதேசத்தால்

பெருந்தவர்க்கிணையாகி போற்றிபூசிக்கும்போது
புனிதன்மூன்னேதவமறையோனும் புவிமீது

கந்தியிச்சுராடி- போற்றித்துதித்திட
நாராயணனருகினில் கலம்பெறவிற்றிட

கந்திரமுகத்துமகன் தாளிணைபூசிக்கத்
தவமிகுவறுமுகன் நான்மறைவாசிக்கத்

திகதிகிடதிரிகிட கிமிதகிடஜெக
திமிகிடதரிகிடதி திங்கணத்தோமென-அருந்

அன்புடன்நாரதர் வீணையிசைபாட
அரம்பைஊர்வசி இருவருந்திருநடனமாட

இன்புறத்தும்புரு கின்னார்குழலூத
இசைந்தகிம்புருடர்கள் இசைந்தபாடல்களோத

தென்புரம்போற்றிசெய் திடமருந்தவத்தோர்முன்
திருகுசெந்தரிக நீமிடதோமென-அருந்

அடியவரைதற்காத் தருளும்கொடிபடைத்து
அண்டமாயிரத்தெட்டுக் கதியெனபடைத்து

கொடியபாதகங்க ளனேகஞ்செய்தவரேனும்
கொண்டாடுவோர்க்கருள் கொடுக்கவவனேயானும்

பதியில்மார்க்கண்டா யவமொழிப்பயின்று
பகையாள்வருங்காலனையப்பால் கவிழ்த்துவருவேனென்று அன்று

மார்க்கண்டேயர் சொல்

தேவாரப்பதிகம்.

பண்-நட்டராகம்.

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
பன்னேமாமணியே மழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லா லினியாரைநினைக்கேனே. க

கிளார்கோவணமுந் திருநீறுமெய்ப்பூசியென்றன்
ருளேவந்தடைந்தேன் றுலைவாவெனையேன்றுகோணி
வாளார்கண்ணிபங்கா மழபாடியுண்மாணிக்கமே
கேளாய்நின்னையல்லாலினி யாரைநினைக்கேனே. உ

எம்மானெம்மானேயென் றெனக்கெட்டனைச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிப்பிறந் தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாமூம்பொழில்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
யெம்மானின்னையல்லாலினி யாரைநினைக்கேனே. ங

பண்டேநின்னடியே னடியாரடியார்கட்கெலாந்
தொண்டேபூண்டொழிந்தேன் றொடருமைத்துரிசறுத்தே
வண்டார்பூம்பொழில்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
யண்டர்நின்னையல்லா லினியாரைநினைக்கேனே. ச

கண்ணேயமுதமுங் கருத்தாய்அருத்தமுமாய்ப்
பண்ணேர்தமிழாய்ப் பரமாம்பரஞ்சுடரே
மண்ணேர்பூம்பொழில்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
யண்ணநின்னையல்லாலினி யாரைநினைக்கேனே. ஞ

நாளார்வந்தணுகி நலியாமுன்நின்றனக்கே
யாளாவந்தடைந்தே னடியேனையுமென்றுகொணி
மாளாநாளருளு மழபாடியுண்மாணிக்கமே
யாளாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. ட

சந்தாருங்குழையாய்சடை மேற்பிறைதாங்கியல்ல
வெந்தார்வெண்பொடியாய் விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லா லினியாரைநினைக்கேனே. ண

வெய்யவிரிசுடரோன்மிகு தேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகு செம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
மையாநின்னையல்லாலினி யாரைநினைக்கேனே. அ

நெறியேநின்மலனே நெடுமாலயன்போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனே கொடியேரிடைவாள்தலைவா
மறிசேரக்கையனே மழபாடியுண்மாணிக்கமே
மறுவேநின்னையல்லாலினி யாரைநினைக்கேனே. சு

ஏரார்மும்புரமு மெரியச்சிலைதொட்டவனே
வாரார்தெ ரங்கையுடன் மழபாடியுண்மேயவனைச்
சீரார்காவலர்கோ னூரானுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார் பரலோகத்திருப்பாரே. ஞ

திருச்சிற்றம்பலம்.

அமர்தலிங்கேசர்சொல்-விருத்தம்

பாலனேபயப்படாதே பகர்ந்தகல்வயதிரெட்டும்
ஞாலத்தோரறியத்தந்தேன் நாளென்றும்பதினராகக்

காலனுக்கஞ்சுவேண்டாம் காருத்தனயன்கொண்டாட
சீலமாங்கைலைதன்தோம் திருப்பதம்பூசிப்பாயே

வசனம்.

அகோகேளாயப்பா மார்க்கண்டா நீயாதொன்றுக்கு மஞ்சவேண்டாம் மூப்பத்துமூக்கோடி தேவர்களும் காற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும் மற்றுமுண்டான அடியார்களும் அறியத்தக்கதாய் இன்றுமுதல் உனக்கு என்றும்பதினாகவரத்தந்தோம் என்மூத்தமகனாகிய கணேசன் சாட்சியாய் உன்னைக் கைவிடுகிறதில்லை அந்த ஏமன் உன்னிடத்தில் வருவானேயாகில் நீ அவனுக்கு கிஞ்சிற்றேனும்பயப்படாமல் அவனுடனே யெதிர்த்துவாதாடி யோட்டிவிடும் பிள்ளாய் மார்க்கண்டசெல்வமே.

திருச்சிற்றம்பலம்.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

தீர்த்தமாயிந்தவாறு திருவருட்பலைத்தவேத
மார்க்கண்டரமூர்தலிங்கர் மலரடிபோற்றுநாளில்
மூர்க்கமாய்தருமராசன் மூவுலகோர்கணக்கும்
பார்க்கவேசீனியோடு பண்புடன்கொலுவில்வந்தார்.

வசனம்.

அகோகேளுங்கள் பக்தசிரோன்மணிகளே இந்தப் பிரகாரமாகமிருத்யுஞ்செயரான அமூர்தலிங்கேஸ்வராலேனமபயரிவாரணமான மார்க்கண்டேய மகாமூனிவர் சஸ்வரருடைய திருவடித் தாமரைகளைப் பூசித்துக்கொண்டிருக்கும்நாளில் ஒருநாள் எமதர்மராசாவானவர் செயலால் பூமியத்திரசொர்க்க மென்கிறதும் மூன்றுலோகத்திலும் உள்ள சிருஷ்டி திதி சம்ஹாரம் இதுகளுடைய கணக்கு வழக்குகளைப் பார்க்கவேணுமென்று தன்னுடைய சேனுசயினியங்களைசூழ்ந்துவர ஆடம்பரத்துடனே எமதர்மராஜன் கொலுசபைக்கு வருகிறவிதங்காண்க.

எமதருமராசன்-கொலுவுக்குவருகிறதரு.

இ-ம்-சௌராஷ்டகம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஜெகுணந் ஜெகுணந் தக்கத்தய்யதா
தக்க ஜெகுணந் ஜெகுணந் தக்கத்தய்யா

அடாவாடா காலகிங்கிரிய தூதர்களே
அடாளமகாத கிங்கிர்யர்களே

இதை அந்தச் சரணங்களில் சேர்த்துப்பாடவும்.

சூரியகுலத்துவேந்தன் குலத்துவேந்தன்
சொல்லரிய சேனைசூழ-அடா
காரியர்கடனஞ்செய்ய கடனஞ்செய்ய
கன்மயமாய் கொலுசபைக்குவந்தான்-அடா

முத்தணிந்தமாலைமார்பன் முரிகியகார்வண்ணமெய்யன்
குற்றமிலாதர்மராசன் கொலுசபைக்குவந்தான்-அடா

தினமணித்தவத்துதித்த தீரனேமதர்மராசன்
தனமுடன்கிடாவிலேறிகருணைசேர்கொலுவில்வந்தான்-அடா

கைதனிற்பாசசூலமும் கனத்தஇருப்புலக்கையுடன்
வெய்யவன்குமாரனென வேந்தனுங்கொலுவில்வந்தான்-அடா

எமதர்மராஜன்சொல்-விருத்தம்.

நல்லதர்மங்கள்நீதி கடத்திடும்வாசக்காரா
வல்லகட்டியனேகேளாய் வாகுளகமதுசெங்கோல்
செல்வமேசெய்யுந்தூதர் சிறந்திடுமவரையெல்லாம்
எல்லியிலழைத்துவந்தென் உளமகிழ்ந்திடச்செய்வாயே.

வ-ம். ஆகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா வேதநீதி வழுவாமல் இராச்சியபரிபாலனஞ் செய்துவருகிற செங்கோன்முறை தவறுமல் கடத்திக்கொண்டிவருகிற தூதுவருட்சிறந்த நாலாயிரத்தி நாநூற்று நாப்பத்தெட்டு தூதுவரையும் அதி சீக்கிரத்தில் அழைத்துக்கொண் டிவாரும்பிள்ளாய் கட்டியனே.

கட்டியக்காரன்-சொல்-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

எண்டிசைதன்னிலுள்ள எவ்வுயிரையும்வலித்து
கண்டித்துப்பிடித்துவந்து கதிவிவரங்களாய்ந்து
தெண்டிப்போர்தமைதெண்டித்து திருவருட்படைத்தோர்தம்மை
யண்டிடாதூதர்தாமு மந்தகன்கொலுவில்வந்தார்

தூதர்-கொலுவுக்குவருகிற-தரு
பல்லவி

தூதர்வந்தாரேமெம தூதர்வந்தாரே

அநுபல்லவி

பாதகஞ்செய்வோரையென்றும் பாழ்நரகிலேயிருத்தி
தோதகஞ்செய்திட்டவர்க்குத் துன்பங்கள்விளைப்போமென்று-தூத

சரணங்கள்.

கண்ணிவலையிற்கொண்டும் காதர்தம்மேல்விண்டும்
எண்ணிறந்தகாலமார்க்கெல்லையிலாத் தொல்லைசெய்யும்-தூதர்
விருப்புடன்தர்மங்கள்செய்ய வெண்ணிடாஅர்ச்சனை
இருப்புலக்கையாலடித்து இழுகரகிற்றள்ளுவோமென்று-தூதர்
காலபாசத்தன்னையேவி கதறச்சிதறவடித்து
சூலபாசத்திலைக்குத்தித் தூக்கிவந்தடிப்போமென்று- தூதர்

தூதர்சொல் வசனம்.

அகோசரணஞ் சரணமையா சுவாமி தூதர்வந்தோம் எங்களை அதிசீக்கிரமாய் அழைப்பிதகாரியம் திருவுளமருள வேணுமையா எமதர்மராசனே.

தருமராசன்-சொல்-விருத்தம்.

ஏவலுக்கினியதூதர் இட்சணந்தன்னிலேகிப்
பாவபுண்ணியமிரண்டும் பாங்குடனெழுதியோதும்
ஓவல்சேர்சித்ராபுத்ர வையகீனயழைத்துக்கொண்டு
தேவர்கள்புகழுமெந்தன் திருச்சபைதனக்குவாரீர்

வ-ம். அகோவாருங்கள் தூதர்களே நம்முடைய அரசாட்சிக் குள்ளாகிய பூமியந்திர பாதாளமிந்தமூன்று லோகத்திலுள்ள சகல

சிவராசிகளுடைய கணக்குகளைப் பார்த்து வரவேண்டியிருப்பதால் அழைத்துவாருங்கள் தூதர்களே.

தூதர்சொல் வசனம்.

அப்படியே அதிசிக்கிரத்தில் அழைத்துவருகிறோமையா எமதர்மராசனே.

தூதர்சொல்-விருத்தம்.

ஐயனேயுயிர்கட்கெல்லாம் ஆயுள்களமைத்துவோதும்
செய்யநற்கணக்காள சித்திராபுத்திரனேகேளீர்
கையிலேசூலமேந்துங் காலனுமும்மையிப்போ
துய்யநற்சபைக்கழைக்க தூரினிலாக்ஞையிட்டார்

வசனம்.

அகோவாருங்களோயாசித்திராபுத்திரவிசித்திரரே பூமியந்திரபாதாளமித்த மூன்றுலோகத்திலுள்ள சிவராசிகளின் ஆயுள்நிர்மாணக்கணக்குடனே உம்மை அதிசிக்கிரத்தில் எமதர்மராசாவானவர் கொலுச்சபைக்கு அழைத்துக்கொண்டுவரச்சொன்னார்ஆகையினல்தாமசம் செய்யாமல் தயவுசெய்யவேணுமையா சுவாமி.

சித்திராபுத்திரர்சொல்-வசனம்

அப்படியே அதிசிக்கிரத்தில் வருகிறோன் தூதர்களே

சித்திராபுத்திரர்-வருகிற-தரு.

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

கட்டுச்சுருளோலையும்நல்ல கணக்குடனெழுத்தாணிகைபிடித்து
திட்டவட்டங்கள்சொல்லும்கணக்கசித்திரபுத்திரனுந்தோணினனே
உச்சிக்கொண்டைமுடித்தமெத்த உதறியேகடந்தனனே [ன்
எச்சரிக்கைசொல்லும்கணக்கனும் இயமன்சபையில்வந்துதோன்றினனே
நாட்டுகணக்குகொண்டுநல்ல யெமனுடகணக்குக்கூடக்கொண்டு
சீட்டுகணக்குங்கொண்டுவிளங்கிய சித்திரபுத்திரனுந்தோணினனே
பூமியின்வுயிர்கட்கெல்லாம்பொருந்தியகணக்குகள்தானெடுத்து
நேமமாகவேதான்சித்திரபுத்திரன் நிமிஷத்தில்வந்துதோணினனே
மந்திரமாமுனிவர்நல்ல மார்க்கண்டேயனுக்குவயதுசொல்ல [னனே
சுந்தரமாகவேதான்கணக்கினில் சுருக்காகசித்திரபுத்திரனுந்தோணி

சித்திராபுத்திரர்சொல்-வசனம்.

அகோசரணஞ் சரணமையாசுவாமி என்னை அழைப்பித்தகாரணத்தை திருவாய்மலர்ந்தருளவேணுமையா சுவாமி.

எமதர்மராஜன் தரிசனம்.

எமதருமராசன்சொல்-விருத்தம்.

மித்திரபேதமற்றி மோனமிவ்வுலகினுள்ள
வெத்தராவுயிர்களுக்கும் விதிகளாய்ந்துரைக்குநல்ல
சித்திரபுத்ராகேளாய் சிவராசிகள்கணக்கை
பத்திரமாயாராய்ந்து பரிவுடனுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சித்திராபுத்திரா ஒவ்வொரு சிவராசிகளும் ஒன்றோடொன்று அன்னியோன்னியமாய் விவகரிக்கப்படுகின்றஎந்தலோகத்திலுமுள்ள எவ்வுயிர்களினுடைய ஆயுசு பிரமாணங்களின்கணக்குமுறைவழுவாமல் அணுப்பிரமாணமாவது சுவர்க்கணிர்ணயங்குறையாமல் எடுத்தெழுதிச்சொல்லி வாரும்பிள்ளாய் சித்திராபுத்திரா.

சித்திராபுத்திரன்சொல்-விருத்தம்.

வானவருலகினுள்ள வண்மையோர்கணக்குப்பார்த்தேன்
கோனவர்க்குறியொன்றிலே குலவியவந்தாத்தோர்க்
காணநற்கணக்குப்பார்த்தேன் கணக்குவித்தியாசமில்லை
வானவர்கணக்கைக்கேட்டால் மகிழ்ச்சியாயுரைசெய்வேனே.

வசனம்.

அகோகேளும் எமபுரத்தரசே தேவலோகத்தார்கணக்கும் அந்த பாதாளத்தார்கணக்கும் யாதொருகல்மிசமில்லை பூலோகதத்தார்கணக்கு கேட்டால் பெருமையுடன் சொல்லிவருகிறேன் கேளுங்க ளெமபுரத்தரசே.

எமதருமராசன்சொல்-விருத்தம்.

மெத்தவுண்மையான மிருகணக்கறிந்துரைக்கும்
சித்திரபுத்ராகேளாய் சிரித்துமுப்புரமெரித்தோன்
பத்தனுமிருகண்டேயன் பரிவுளத்தவத்துதித்தோன்
புத்திரமார்க்கண்டன்தன் புதுகணக்கெடுத்துரைப்பாய்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய்அதிகதுணுக்கமான கணக்குகளினியல்பை ஆராய்ந்தெடுத்துரைக்கும் சித்திராபுத்திரனே முன்னளிலே முப்புராதியரை எரித்த சிவனுடைய திருவருள்பெற்ற மிருகண்டேய முனிவரது தவத்தில்வந்த மார்க்கண்டனுடைய ஆயுளின் விபரகணக்குகளை எடுத்துரையும்பிள்ளாய்சித்திராபுத்திரே.

சித்திராபுத்திரன்சொல்-விருத்தம்.

காலனேவுயிர்கட்கெல்லாங் கர்த்தனேசொல்லக்கேளீர்
ஞாலமதண்டோன்றந்த அழகனமார்க்கண்டனுக்கு
சீலமாய்வயதிரெட்டுஞ் சென்றுகின்றுடனேயாகில்
கோலமாய்த்தூதர்க்காக்ஞை குறிப்புடனிட்டிடுமே.

வசனம்.

அகோவாரும் தர்மராசனே ஸ்ரீ பரமசிவனுடைய பக்தியிலே சிறந்தவனை மார்க்கண்டமகாமுனிவருடைய வயது-கசு-ம் இன்று டன் கணக்குமுடிந்துவிட்டதாகையால் அதிக துரிதமாய்தூதர்களுக்காக்யாபித்தனுப்பி யாதொரு பாபகர்மமில்லாதவனைபடியினாலே மகாசந்தோஷமாக யழைத்துக்கொண்டுவாச் சொல்லுமையா மகாராசனே.

எமதருமராசன் சொல்-விருத்தம்.

எந்தனற்றூதர்தம்மில் யிசைந்திடுங்கொள்ளித்தேனே
செந்தலைபூதாவாடா செங்கண்ணீலாவாடா
இந்தநற்பாசங்கைக்கொண் டேகியேமார்க்கண்டன்றன்
சுந்தரவுயிர்கவர்ந்து சுறுக்கினில்வருகுவீரே.

வசனம்.

அகோவாருந் தூதர்களேசிறந்தசெந்தலைப்பூதா செங்கண்ணீலாரீங்கள்போய் இந்த என்னுடைய அதிமிருதுவென்னும் பாசத்தினாலேமார்க்கண்டனுயிரைவாங்கிக்கொண்டுவாருங்கள்கிங்கார்களே.

எமதூதர்கள் சொல்-வசனம்.

அப்படியே வாங்கிகொண்டு வருகிறோம் எமபுரத்தரசனே போய்வருகிறோமையா சுவாமி.

கட்டியக்காரன் சொல்-விருத்தம்.

அத்தருணத்தருகொண்டு அடைவுடன்காலதூதர்
விண்தலமெமலோகத்தை விட்டெழுந்துவகையற்று
கந்தமார்சடையோன் கழல்தொழுமுனிமார்க்கண்டன்
சந்ததம்பூசைசெய்யிருக் யஞ்செயக்கடையூர்வந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரமாய்நிச்சயிப்பண்ணின தருமராசன்தூதர்கள் எமலோகத்தைவிட்டெழுந்துமகாசந்தோஷத்தோடு வாசனைபொருந்திய மலர்களணிந்த சடாபாரத்தையுடையபரதாரவிந்தத்தைப்பூசித்துக்கொண்டிருக்கிற திருக்கடையூரென்று மொழுங்கும் மிருத்தியஞ் செயரென்னும்புரத்தை காடிவருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

பாசக்கயிறுகொண்டு செங்கையில்
பாங்குள்ளவாளேதடி தான்பிடித்து
தோஷத்துக்கஞ்சாத கால
தூதர்கள்வந்து தோணிறாரே. பாச

வெட்டிபறித்திடுவோம் காட்டில்
வேடரைப்போல் தோன்றிடுவோம்
கட்டிக்கொண்டோடுவோம் யென்றே
காலதூதர் தோணிறாரே. பாச

சிங்கப்பற்களைக்கடித்து மீசையைத்
திருகிமுறுக்கியே கதையெடுத்து
பொங்கரவெனச்சீறி தூதர்கள்
புனிதன்முன்வந்து தோணிறாரே. பாச

எப்படிபிடிப்போ மென்று
கோடையிடிபோலே முழங்கிக்கொண்டு
கைபிடிக்கவந்த கால
தூதரும்வந்து தோணிறாரே. பாச

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

தூதர்கள்வருகும்போது துய்யதற்கடையூர்வாழும்
மாதவனைவேதா மார்க்கண்டன்பக்தியோடு

தீதகன்றிகளாடிச் சிறந்தபூங்காவில்புக்கி
நாதனைப்பூசைசெய்ய நன்மலர்கொய்திட்டாரே.
தானிபோதனுவிண்டி வேராதன்ற
மார்க்கண்டேயர் தூதனஜாவளிவர்னமெட்டு.

பல்லவி.

தாசனைகண்டான்னமில்தாராளமாகவுந்தன் தா

அநுபல்லவி.

ஆசையுடன்பூசித்தே அமுர்தலிங்கேசாவுன்

சாணங்கள்.

ஈசாதயவில்லையோ எந்தனையாள
பாசங்கதையுங்கொண்டு பாவிவாரானேயின்றுதாச
ஆனையுரித்தபரனே அடிமைமீது
ஏனையாபிந்தவாது யேழைமீதினிலிப்போது-தாச
அந்தகனுக்காளாக அடியேன்மிக
நொந்துமனதுவாடி நோகுதேபுண்ணி-தாச
பாலன்னுரைசிங்கன் பணிந்துநிற்கும்
தேவாதிதேவாயுன் நிருவடிக்காளாக்கும்-தாச

தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

கொன்றைதும்பைமலர் கொய்வேன்-அரகரசம்போ
கொன்றைசூடியுனைப்பூசை செய்வேன்
செண்டுமல்லிகைவில்வங்கள் கொய்வேன்-அரகரசம்போ
சிறந்தமிருத்யஞ்செயாவுனைப் பூசைசெய்வேன்
புன்னைவிருட்சபாரிஜாதம் கொய்வேன்-அரகரசம்போ
பிஞ்ஞகனேயர்ச்சனை செய்வேன்
வன்னியரும்புதுளசி கொய்வேன்-அரகரசம்போ
வாமதேவனேயர்ச்சனை செய்வேன்
நந்திவிருட்சமலர்களைக் கொய்வேன்-அரகரசம்போ
நாரிபாகனேயர்ச்சனை செய்வேன்
விந்தையரளிகஸ்தூரி கொய்வேன்-அரகரசம்போ
மிருதபஞ்செயனேயர்ச்சனை செய்வேன்

மல்லிகைசெண்பகமலர் வல்விணை தீர்த்தானைப்பூசை
அல்லிமலர்செங்கழுநீர் அந்திவண்ணன்றனைப்பூசை
நல்லதவனமருவுங் நந்திவர்தனைப்பூசை
முல்லைதாமரைமலர்கள் முக்கண்ணன்றனைப்பூசை
நெல்லிமனோரஞ்சிதங்கள் நிராயுதண்பாதத்திற்பூசை

கொய்வேன்-அரகரசம்போ செய்வேன்
கொய்வேன்-அரகரசம்போ செய்வேன்
கொய்வேன்-அரகரசம்போ செய்வேன்
கொய்வேன்-அரகரசம்போ செய்வேன்
கொய்வேன்-அரகரசம்போ செய்வேன்

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இன்னெறியுடன் பூசித்துக் கிருக்கின்றமார்க்கண்டேயர்
தன்னெறிதனையெறிந்த தர்மனூர்தூதர்தாமும்
நன்னெறியுளமார்க்கண்டா நமனுனையழைத்தாரென்று
சொன்னெறிதனையறிந்து சோறுவார்கூறுவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் பூசித்துக்கொண்டு அருகிலிருக்கிற மார்க்கண்டேயருடையநிலைமையையறிந்து உன்னைஎமன் அழைத்தார்வாருமென்றகாலதூதரைக்கண்டு மிகவும்பயந்து அதட்டிக்கொண்டு நடுநடுங்கிக்கிடுகிடுத்து தமக்குள்தாமே தேறிக்கொண்டுலோகாபிமானமென்கிற பாசத்தினாலேகட்டுண்டு சொல்வதுகாண்க.

மார்க்கண்டேயர்சொல் விருத்தம்.

அந்தகன்றூதாவாடா அன்வலுவெனக்கிங்குண்டு
மந்திரகிரிமேல்மொய்த்த மசகமென்றழைக்கலாமோ
உந்தனுக்கஞ்சேனெந்த னுயிர்தனையிழுக்கப்போறுப்
வந்தெனைகிட்டவேண்டாம் வண்மையோடேகுவாயே.

வசனம்.

அடாவாடா காலதூதர்களே பிருத்தியஞ்செயராணபீஸ்வரருடைய பால்போன்ற கிருபைக்குப் பாத்தியவானுயிருக்கிற என்னைக் கொண்டுபோவதற்கு உங்களால்முடியாது மூன்னுளிலேஒருகாரணத்தினால் முப்பத்துமூக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணுபிரம்ரிஷிகளும் கூடிக்கொண்டு தேவயாகம் பண்ணும்போது அதிலிருந்த

ஆனையானது அண்டகடாகமெல்லாங் கவளிக்கத்தொடங்கியதுண்டு பூபரமேஸ்வரரானவர் விருத்தாகவதாரம்பண்ணி வந்த ஆனையின்தோலுரித்துப் போர்த்துக்கொள்ளவில்லையா அப்பேர்ப்பட்ட மஹாதேவருடைய கிருபையிருக்கும்போது எனக்குயாதொருகுறைவுமில்லை மந்திரகிரியினாலேயே மொய்த்த கொசுவானது அதமமிலையை வேருடனேயசைத்துப் பிடுங்கக்கூடுமோ அதுபோலேஉன்னாலே என்னைப்பிடித்துக்கொண்டுபோகக்கூடுமோ ஆயிரஞ்சொன்னாலும் உங்களுக்குக் கஞ்சமாட்டேன் அதிதுரிதமாய் எமலோகத்திற்குப் போய்விடுங்கள் தூதர்களே.

தூதர்கள்சொல்-விருத்தம்.

வலியதுபேசவேண்டாம் மார்க்கண்டமுனியேகேளாய்
புலியதுபெரிதாவேடன் பொருதுயிற்பெரி தாபாராய்
னலியதுயெதிர்த்தாற்பூனை யேக்கமுற்றிருக்குமோபார்
நலியதுவுனைக்கொண்டேகி நமன்முன்னேவிடுவோமே.

வசனம்.

அடாவாடாமார்க்கண்டாபுலியானதுபெரிதாவேடன்னைகளில் பெரிதாஎனினதிர்த்தால் பூனையேக்கமடையுமோஉன்னுடையசொற்பனத்திலும அந்தகனுக்கு பயப்படுவோமென்றுநினைக்காதே உன்னுடைய உயிரைநசுக்கிப்பிழிந்து ரத்தாளிசெய்தனங்களுடையமூவிரலுக்குள்ளே இடுக்கிக்கொண்டு போம்படியானபலமுமனங்களுக்குள்ளே வண்டடா மார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

இத்திரமியம்பத்தூதர் ஏங்கியேமுனிமார்க்கண்டன்
உத்திரமுரைத்திடாமல் உள்ளதிலாட்சிகொண்டு
மிதகிரபேதமாற்றும் மிருத்தியஞ்சேபரித்த
சித்திரமேதோவெனறு சிறப்புடனுநகுவானே.

இத்துமுடி வானிகமன சிந்துலேதயா எனகிற

மார்க்கண்டேயர் நாதனஜாவளி வர்ணமெட்டு.

பல்லவி.

அந்தகனும்வந்துமெனை பிடிப்பேனென்கிறான்
கதையாலடிப்பேனென்கிறான்.

பாசந்தொடுப்பேனென்கிறன்
பூசைகெடுப்பேனென்கிறன இதோ-அந்த

அநுபல்லவி

நந்திவாகனத்திலேறும் நாதாகண்பாராய்
நம்பிவந்தேனுந்தனைத்தேடி யெந்தனைக்காராய்
ஓ இனியருள்தாராய்
ஏமனவாரார்நோய்
என்றுயர்தீனைத்தீராய் இதோ-அந்த

சரணங்கள்.

ஏகமாய்த்தூதர்கூடியேமன்வாராவே
கோடிநாகம்போல்சத்தங்கொண்டு
நாடியெனைக்கண்டு
நெருங்குகிறனென்று
நெஞ்சம்பதருதேயிண்டு
உன்னைவிடுவேனெனென்று இதோ-அந்த

வாசமலர்கொண்டு வந்துனையேபூசித்தேன்
நசனேயென்னைப்புரிந்தபிருபதந்தானையா
உன்னைநம்பினேனையா
காலன்வம்புசெய்வான்மெய்யா
என்னைப்பாதுகாரையா இதோ-அந்த

தாசன்துரைச்சிங்கன்தமிழை சகலருங்கொண்டாடவே
நேசமாம்அபிராமியுடன் நேராகவாரும்
என்துயர்தனைத்தீரும்
ஏமன்வருகிறன்பாரும்
ஏழையைக்காரும் இதோ-அந்த

தரு-இ-ம்-எதுருல்காம்போதி-அடதாளம்.

பல்லவி.

தேவாதிதேவனே என்னசெய்வேன்-இந்த
திவினைக்கென்னடா உய்வேன்

அநுபல்லவி

தேவாதிதேவனே செய்யும்பூசையைஏற்று
ஈவாவென்றழைப்போர்தான் நெறிகட்குட்படுவேனே தே

சரணங்கள்

பார்க்கபயங்கர மாகுதே மிகப்பொல்லா
பாவிகட்கஞ்சிமனம் நோகுதே

மூர்க்கர்சூலத்தினல் தாவுதே மிருத்தியஞ்செயர்
மூன்றுலேபூதகணங் கூவுதே

கார்ப்பாயுனக்கபயம் ஏர்ப்பாய்கடையூரானே
கங்காதானேயெனக் கிங்கருள்தானேயே தே

கோடையிடிபோற்சத்தம் எட்டுத்திக்கும்
கூடபாசத்தாற்கட்ட வீசுவார்

வாடைபொடிகளென்மேல் வீசுவார் கிணக்கொண்ணு
வல்லடிவழக்குகள் பேசுவார்

பீடைபிடித்தாற்போல பிதற்றிபிதற்றியெ
பிடிக்கவருந்தூதரை யடித்துதறத்தொணுதோ தே

ஆன்னேபிதாகுருவும் நீயே உயிர்த்துணை
யாதரிப்போனும் நீயே

பின்னைத்துணைவேறில்லை ஐயோ காலதூதர்கள்
பேய்போலத்தாவிவாரா ரையா

என்னையபயங்காப்ப தீராவினைதபாரம்
இணையடிபூசித்தேன் எனக்குன்பாதமேயருள் தே

எமதூதர்சொல்-விருத்தம்

பிட்டுக்குமண்சுமந்து பிரம்படிலடியுங்கொண்டு
பட்டதோர்விரகுகொண்டு பாணனுக்காகவிற்று
திட்டமாயவர்வளர்த்த திரியம்பகனேசெவித்தால்
கட்டளைத்தப்புமென்று கனவிலும்நினைந்திடாதே

வசனம்

அடாவாடா மார்க்கண்டா மதுரைப்பட்டணத்தில் செம்மன் செல்வியென்கிற ஒருபிட்டுவாணிச்சிக்ர மண்ணைச்சுமக்கிறேமென் றுமாறுபாடுசெய்து துதித்து பித்தாய்திரிந்ததைக்கண்ட அரிமர்த்தனபாண்டியமஹாராஜனுலே பிரம்படிபட்டும்ஒருவித்வானுக்காக நாள்தோறும் விறகுசுமக்துவயிர்வளர்த்த அந்தகிழவனைசேவித்துக் கொண்டு நின்றதினுலே எங்கள் தர்மராஜனுடைய ஆக்ஞை தப்பிப் போமென்றும்பதினறுவயதுக்குமேல் பூமியிலிருக்கலாமென்று உன் னுடையசொற்பனத்திற்கூட நினைத்துக்கொள்ளவேண்டாமடா மார்க்கண்டா

வலஜிதேயிந்த சலபியாலராமாயியென்ற

மார்க்கண்டேயர் நூதன ஜாவளித்தருக்கள் வர்ணமெட்டு

பல்லவி

கண்திறந்துபாருமீசாகண்திறந்துபாருமீசா பொல்லாக்
காலன்வராமல்காரு கண்திறந்து

அநுபல்லவி

உன்னைவிடயாரெனக்கு ஒருவரில்லையே

சரணங்கள்

அந்தகன்வராமோ அவதியான்படலாமோ
சந்தேகப்படலாமோ சாமியென்கைவிடலாமோ
பந்தயங்கூறலாமோ பாதம்நம்பிக்கெடலாமோ கண்திறந்து

ஏண்டாதுஷ்டாவென்று இரஞ்சுகிறனேகண்டு
ஆணவமதங்கொண்டு ஆர்பரிக்கிறனென்று
தானேபிகச்சூரனென்று தாண்டுகிறனேனெருண்டு கண்திறந்து

தூர்ச்சிஷகபாதைக்கொண்டு துதித்திறைஞ்சினேனென்று
மரவிவாராமல்யென்றும் வரமருள்வாயேகொண்டு
வந்தடைந்தேனுந்தனடி வன்னஜாவளிபாடி கண்திறந்து

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்

வர்தணுகாதேபோங்கள் மறலியொன்றெருவனுண்டோ
அந்தகன்தூதனென்ற லரனடியாரைதீண்டார்
நிந்தைசொல்வோர்க்குவேண்டாம் நெருப்பினில்மொய்க்காது
பத்தியங்கூறவேண்டாம் பரிவுடனடந்திடீரே.

(வ-ம்) அடா தூதர்களே எமனென்பவனும் ஒருவனுண்டோ அப்படியுண்டானாலும் அவனிடத்தில்சிவபெருமானுடைய அடியார்களுக்குபயமேது சிவனடியாரிடத்தில் அந்தசனுடையாச்சியபார நடக்கமாட்டாதுவீணன அவதூருக்குஉள்ளாகவேண்டாம்என தூதர்களே

எமதூதர்சொல்-விருத்தம்

இட்டதோராக்ஞைகைக்கொண் டெமதூதர்காங்கள்வந்து
விட்டகன்றிடுவதுண்டோ வெறிகொண்டுபிதற்றுமித்த
துட்டனைக்குண்டுகட்டாய் தூரசினிற்கட்டிக்கொண்டு
பொட்டெனப்போவோம்வாரீர் பொற்புறதூதர்காமே

(வ-ம்) அடாவாடாதூதர்களேநம்முடைய எமதர்மராஜாவினுடைய ஆக்ஞைபயத்தினாலே நாம் பூலோகத்துக்குவந்து ஒரு அணுபோலிருக்கிற இவனைவிட்டுவிட்டுபோகத்தகுமோ மலைபோலிருக்கிற ஒவ்வொருஉயிரையும் கவர்ந்துக்கொண்டுபோன நாமல்லவோசில பேய்களுடன் கூத்தாடிய சிவனைநம்பி இவனு மனப்பேய்பிடித்துபிதற்றுகிறன் இந்ததுட்டனை ஒரேகுண்டுகட்டாய்அதிசிக்கிரத்தில்கட்டிக்கொண்டு அதிதுரிதமாய் ஓடிப்போவோம் வாருங்கள் தூதர்களே நாலுபக்கமுஞ் சூழ்ந்துக்கொள்ளுங்க ளண்ணமார்களே

மார்க்கண்டன்சொல்-தரு

இ-ம்-சுருஷ்டி-தாளம்-திரிபுடை

பல்லவி

அமூர்தலிங்கேசா அபிராமிநேசா
அடியேனைக்காத்தருள்வாய் ஜெகதீசா

அநுபல்லவி

எமவாதைக்கேபயந் தேங்கியேமனம்நொந்தேன்
எந்தனைக்காட்டிக்கொடா அந்தனப்பணிந்தேன் அமூர்

சரணங்கள்

ஆலகாலம்போலே அந்தகன்வருகுராளே
அம்புயமலர்கொண்டுன்னடி போற்றிபூசித்தேன்
கோலாகலமாகச் சூலபாசங்கொண்டு
குத்துவேன்வெட்டுவே னென்றுயர்வதைக்கண்டு அமுர்
அண்டருக்கிடர்தரும் ஆலகாலமுண்டாயென்
இறையவனேயுனக்கடி யஞ்சிவந்தண்டினேன்
தொண்டருக்கருள்தரும் தெய்யகடையூராளே
தோதகஞ்செய்யுமெம தூதர்களேயோட்டுவாய் அமுர்
அடியருக்கருளுவோ னமூர்தலிங்கேசனே
யண்டபிண்டங்களும் அறைந்ததரிந்துராண்
கெடியயென்தயரம்நீங்கி நீயேகதியென்றெந்தன்
கெஞ்சமலர்கொண்டு சித்தமும்பூசித்தேன் அமுர்

தூதர்சொல்வஞ்சி-விருத்தம்

கொடிகொடித்திடுமுன் பொடிப்பொடியாக
இடிஇடித்திடுவோம் துடிதுடிப்பானே

வசனம்

அகோவாருங்க ளண்ணமார்களே கொடிமுடுக்கிடு முன்னே நாம்பிடித்தபிடியினுலே பொடிபொடித்துவிடுவோம் அவனும்முடி துடித்துவிடுவான் காலுபுறமுஞ் சூழ்ந்துவாருங்கள் அண்ணமாரே,

தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி

சுத்திவாங்களண்ணமார்களே இவனேயிப்போ
தரத்திப்பிடிப்போம் தம்பிமார்களே

அநுபல்லவி

குத்திகுடலேப்பிடுங்கி கொத்தியொருகையிலேந்தி
கத்தியெமலோகம்போவோம் நாடிமணுவேகமாக சுத்தி

சரணங்கள்.

நீளமாங்கையிலெடுத்து நாடிமணுவேகமாக
வாளையுருவியெறிந்து வலமிடமாகப்பிரிந்து சுத்தி
நாலுலகமும்வளைந்து நட்டநடுவேயுளைந்து
வேலும்சூலும்விட்டெறிந்து வேகமுடனேபிரிந்து சுத்தி

என்னசெய்தாலுமில்லை இவன்தனைவிட்டான்காலனே
சின்னவன்மேற்குற்றமில்லை எமனுலும்பெருந்தொல்லை

தூதர்சொல்-விருத்தம்.

எப்படியண்ணமாரே இவனைநம்மாற்பிடிக்க
இப்படிதனிலேயாது இவன்செய்யும்பூசையாலே
கற்பனைதனைக்கடந்தான் காலனும்வெல்லானையோ
சொற்படிகேழ்ப்பீர்மெத்தச் சுறுக்கினில்கடப்போம்வாரீர்.

வசனம்.

அகோவாருரும் அண்ணமார்களே எந்தவிதத்திலேயும்இத்தப்பூ மண்டலத்திலே இவன்செய்திருக்கிறசிவபூசைமகிமையான தருத்ரா க்கினிஎன்னும் அந்தஸ்வரூபடையநெற்றிக்கண்ணைநோப்பின் சுவா லையானதூரம்மைத்தகிக்கின்றது ஆனபடியினாலே அந்தமிருகண்டே யமுனிவர்செய்ததவத்துக்காகக்கொடுத்த கசு-வயது நிறைந்தபோ திலும் இந்தப்புவியினிடத்திலே இப்போமார்க்கண்டனென்றவன் செய்தபூஜைக்காகவேண்டியவரமும் என்றும் கசு-ஆககொடுத்திருக் கவேண்டும் ஆகையால் இவனைவெல்லுவது மகாஅரிது நாம்எமலோ கத்துக்குப்போய் எமராஜருடன் சொல்லுவோம் வாருங்கள் அண் ணமாரே.

எமதருமராஜனுக்குதூதர்சொல்-விருத்தம்.

எங்களால்முடியாதையா எமதருமராஜாசேளீர்
திங்கள்வெண்சடையோன்பாதந் தினமும்போய்பூசைசெய்வோன்
பாங்கமாய்பிடித்துக்கொள்ளப் பாசத்தைபெறிந்தோம்நாங்கள்
சங்கரன்றணலைத்தூவிச் சகிக்கொணவினைசெய்தானே

வசனம்.

அகோசரணஞ் சரணமையா சுவாமி எமதர்மராஜரே அந்தமா ர்க்கண்டனைப்பிடித்து வருகிறதற்குநங்களால்முடியாது அவன்செய் கிறதித்தியநேமநிஷ்டைக்கும் பூஜாவிதிகளுக்கு மெய்த்து சந்திரசே கரரானவர்எங்களைத்தகிக்கத்தொடங்கினார் ஆனபடியினாலேநீர்போ

ய் அழைத்தாலும் அவன் வரமாட்டான் நீரும் உம்முடைய தேகத் தோடு திரும்பிவருவது அரிதாகும் எமதர்மராஜனே.

எமதருமராஜனுக்கும் தூதர்களுக்கும்-தர்க்கம்-தரு,

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பிழைப்பதருமையென்றுபுகலவந்தீர்களே தேவர்களே
பழித்துப்பகடிசெய்துபங்கங்கொள்வாரேநம்மைத் தூதர்களே

பாரிலுள்ளோர்நம்மைபழிப்பதுசொல்வீர்தர்மதேவா அவனை
சேரப்போவோமென்றுஞ்சென்றணல்வீசுதே தர்மதேவா

சென்றனலுக்கருண்டுதெரிபட்டுவந்தீர்கள்தூதர்களே இனி
எந்தவிதமெந்தனேவல்செய்யப்போரீர் தூதர்களே

ஏவலென்றவன்னதிர்போலுமெதர்மதேவா இப்போ
சாவதுநிச்சயம்தப்பாதவன்சாபந் தர்மதேவா

தப்பாதென்றெந்தன்முன்தயவாய்ச்சொல்லவந்தீர்கள் தூதர்களே
அந்தஅப்பணிசடையோனேபூசித்தால்நமக்கென்ன தூதர்களே

நமக்கென்னவென்றுரையிலவேண்டாமென்றன்தர்மதேவா சிவன்
றமக்குமவரடியார்தாமேபெரியோராம் தர்மதேவா

சிறுவன்செபித்தமந்திரஞ்செய்வதென்னநமைத்தூதர்களே அந்த
மறையவனைப்பிடிக்கவுலவில்லையோவெனக்குத் தூதர்களே

பிடித்துவாரேனென்னும்பெருமையைநீக்கிஷிடும்தர்மதேவா கெஞ்சி
ல்,இடித்தாலும்நஞ்சுண்டாசன்கைவிடான்கண்டீர் தர்மதேவா

காட்டிகொடாவிட்டால்கட்டோதவருமோதூதர்களே அடடா
மேட்டியாகிலும்பிடித்துவாரேன்பாரும் தூதர்களே

எமதர்மராஜன்-தூதர்களுக்குச்சொல்-விருத்தம்.

— பங்கயங்கைக்கமாயன் படிதனையளந்தயீசன்
அங்கவனற்றவத்துக்கிந்த வாயுசும்பதிஞராச்சு
சங்கரித்திடுவதெந்தன் சத்தியைங்காண்பீரென்று
சங்கரனடியார்முன்னே சல்தியிற்செல்வோம்வாரீர்

வசனம்.

அகோவாருங்கள் தூதர்களே பிரமதேவர்படைப்பவர்ஸ்ரீமகா விஷ்ணுவானவர் அவர்களைகார்க்ககர்த்தா பரமசிவனுனவர் எங்களுக்குவரங்கொடுக்கக்கர்த்தா நான்சுகலத்தையும் அந்தகருமமும்முடிந்துவருங்காலத்தில் அந்தகாலத்தில் அந்தகாலமறிந்து அழிக்கக்கர்த்தாவல்லாமல் இந்தப்பூமிஅந்திரசுவர்க்கபாதாளலோகங்களிலும்வேறெயொருவருங்கிடைக்காது அந்தசிவனேநினைத்தபேருக்கெல்லாம் வரங்கொடுக்கப்பட்டவன் அற்பசந்தோஷிஸ்தோத்திரபிரியன் ஆனபடியினாலே தன்னை ஸ்தோத்திரம்புண்ணப்பட்டவர்களுக்கெல்லாம் சிவபதவியளித்துக்கொண்டிருந்தால் நம்முடைய லோகம் பாழாய்போய்விடுமே இப்போதான்போய் அந்தமார்க்கண்டனை வளைத்துபிடித்துக்கொண்டுவருகிறேன் தூதர்களே

நான்காவதுபிரிவு-முற்றிற்று.

ஐந்தாவது பிரிவு

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இடியதுஇடித்தாற்போல எருமையின்கிடாவிலேறி
கொடியதோர்மாசூலங் கோலமாய்கையிலேந்தி
வடிவுகொண்டெவருமஞ்ச மார்க்கண்டன்றன்னைக்கட்ட
கடியதோர்வெருட்டியோங்கக் காலனுந்தோன்றினானே

தரு-இம்-மோகனம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அட்டதிக்கதிரவே கொக்கரித்திட்டதுளி
அந்தகன்றன்னை மூடவே
கட்டியேபோவேனென்று மார்க்கண்டன்முன்னேபெல்ல
காலனுந் தோணிநேரே
வீரகண்டாமணி குமரிடவேசத்தம்
மேதினியோரெவரும்மஞ்சி யோடவே

மாற்றிற்றண்டாயுத
பரிவுடனேவந்து
தூதர்கள்புடைசூழ
துள்ளிகிடாவி
நாதனேபூசைசெய்கிற
நமனுருந்
அண்டாண்டாதிகளும்
பாக்கினிக்கணஞ்
சண்டனும்

சூலமோடேயமனும்
தோணிமேனே
கோபத்துடனெழுந்து
லேறி
மார்க்கண்டனேப்பிடித்து
தோணிமேனே
கண்டொடுங்கிடகோ
திதறத்
யிதோ
தோணிமேனே

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அண்டபிண்டங்களும் அக்கினிபொறிபறக்க
மண்டியகோபங்கண்ணில் வடவைத்தீயெனசொலிக்க
கண்டிடின்விடுவதில்லை கைப்பிடியாய்பிடித்து
கொண்டிடாதேகேனென்று கூத்தனும்வருகின்றானே

வசனம்

இந்தப்பிரகாரமாய் வந்து எமதருமராஜனானவன் அண்டபிண்டபகிரண்டங்களிலும் அக்கினிபொறிகள்பறக்கும்படியாய் கோபங்கொண்டு இருகண்களிலும் ஜடராக்கினிபோல் சுவாலையுண்டாகி ஜொலிக்கவீராதே சத்துடனேவந்து அந்தமார்க்கண்டனைவிடுவதில்லை கைப்பிடியாய் பிடித்துக்கொண்டுபோகாமல் எமலோகத்துக்குப் போகேனென்றுசொல்லிக்கொண்டு வருகிறவிதங்காண்க

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்

கையினில்மழுமானேந்தும் கடவுளேகடையூர்வாழும்
தையலையிடத்தில்வைத்த தற்பராயென்னசெய்வேன்
துய்யமாதகையுஞ்சூல பாசமுங்கொண்டென்னைக்கண்டு
மைஞாகப்பருவதம்போல் மறலியும்வாரானையோ

செவிமனக்கியாலவானி தோனுபொக்துசாலுநேனன்ற

மார்க்கண்டேயர் நூதனஜாவளிவர்னமெட்டு

பல்லவி

அந்தகனுமிதோவாரான் என்முன்னேயீசனே அந்த

அநுபல்லவி

வந்துயென்னைகாருமே வாதனையைத்தீருமே அந்த

சரணங்கள்.

மண்டலம்மேற்கும்படி மறலிவாரானேபோடி
அண்டங்களெல்லாந்தேடி ஆயிரந்தூதர்கூடி (அந்த)

பாசங்கையுங்கொண்டு பாவியெமன்முன்னின்று
ஈசுவரனேன்பாரென்று விரட்டுகிறானேகண்டு (அந்த)

வேளையிதுகாருந்தய்யா வேண்டுந்துணைசிங்கமெய்யா
காளைதிருபாலையையா சாற்றினேன் தய்யாதிருமையா (அந்த)

தரு-புலம்பல்-இம்-வராளி-அடதாளம்.

கண்ணிகள்.

கடையூர்தனிலேகாலனெண்மேலே கடிவேவாரானே-அவனை
கண்டவுடனே கலங்குதென்மனம்
காருங்கருதாரனே

படையுடனேவாரான் சடசடெனமோய்
சடலமெல்லாம் படபடென்ன கடவுளேநா
னென்னசெய்வேன்

இந்தயேமன் வதையைத்தீர்க்க யிதசமயமையா-அவன்
இறைந்துகொண்டெந்தன் மீதினில்வாரா
னென்துயர்தீருமையா (கடை)

மைந்தனெனைக்கண்டு அவன் தண்டனையிற்கொண்டு
கொண்டலைப்போல் கர்ச்சித்து
கண்டனெதிராகவாரான் (கடை)

அடாபயலேவிடுவேனேவென்றவனக்கிரமத்துடனே-அவன்
அதட்டிக்கொண்டெந்தன் மீதினில்வாரா
னண்டம்வெடித்திடுவே (கடை)

ஐயனேயென்னுள்ளம் நையுதேதான்செய்வேன்
தையலைப்பாகம்வைத்த மெய்யாவெனைக்
காக்கவேணும் (கடை)

தரு-இ-ம்-சோகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

காலனிதோவாராதே கடைக்கண்பார்கடையூராதே
ஆலகாலம்போற்சீறி அதட்டிக்கிடாவிலேறி
சூலங்கையினில்கொண்டு தரத்திவாராதேயின்று
பாலனெனேயேகிட்டி பருத்தகண்ணேமிரட்டி(கால)

தரு-இ-ம்-கரகரப்பிரிய-அடதாளம்

கண்ணிகள்.

இந்தயேமனெண்ணே யிறைகொள்வேனென்சிறுனே
ஈசாகடையூர்வாழ்ஜகதீசா நானென்னசெய்வேன்
அந்தகனிதோவாராணிதோசாமி யுந்தண்கண்ணில்பாராயோ
ஐயாமழுகையா யெனதையாயெணையாளும்
பார்க்கபயமாகுதே யேமன்தோர்க்கும்படியெனக்கு
வாருங்லிதீரும்வினைதீரும் யெந்தனைக்காரும்
கார்க்கக்கடனுனக்கே கடையூரிலமர்தலிங்கா
காலனிதாசூலமுடன் ஆலகாலப்போல்வாரான்(இந்த)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அந்தகன்வரலைக்கண்ட அரனடிதொழுமார்க்கண்டன்
சிந்தைதனைத்துருகிமெத்த சிவசிவாவென்றுரைத்து
சந்திவாகனத்திலேறும் நாதனுரடியில்வீழ்ந்து
எந்தனைக்காருமென்று யீசனேதுதிக்கலுற்றார்

வசனம்.

இந்தப்பிரகாரமாய்வருகிற எமதருமராசனைக்கண்ட சுவ்வரனே படுத்தப்பட்ட மார்க்கண்ட மஹாமுனியானவர் மனோவேதனைக் கொண்டு சிவசிவாவென்று அடிக்கடிசொல்லிக்கொண்டு சுந்தியேறி வருகிற அந்த அமுர்தலிங்கேசருடைய பாதாரவிந்தத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து எந்தனைக்காருமென்று இரண்டு கைகளையும் கூப்பிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கத்தொடங்கினார்.

மார்க்கண்டேயர்-நூதனஜாவளி-வர்ணமெட்டு.

போபோபொம்மனே பொம்மனே பாமசோவானியென்ற

பல்லவி.

வாராள்வாராணேமனும் வாதனைசெய்ய (வாரா)

அநுபல்லவி.

தீராதிதீரனென்று சிறுவனைநீக்கண்டு (வாரா)

சரணங்கள்.

சண்டன்கிடாவிலேறி சாடவாரானெண்மீதில்
தொண்டனைநீக்கண்பாரும் தூதர்கள்புடைசூழ (வாரா)

நெஞ்சமெழுகாயுருகி நெக்குநெக்காய்க்கருகி
தஞ்சமெனமீறியிங்குவந்தேன் தயாபரனேயுண்பாரும் (வாரா)

எங்கும்நிறைந்ததுரைச் சிங்கந்தமிழைக்கண்டு
இங்குவாரானேயேமன் யென்னசெய்வேமுபீச (வாரா)

கரு-இ-ம்-ஜம்பை-தாளம்.

கண்ணிகள்.

ஐயையோவிமலனுரே அந்தகன்கிடாவிலேறி
கைதனிலேபாசசூலம் கட்டிக்கொண்டுவாரா ஹையோ

மெய்யெலாம்நடுங்குதிப்போ
மெத்தநான்பயந்தேத ஹையோ

துய்யதிருகடையூரானே
தொண்டனைநீக்காப்பீ ஸையா

ஆருத்துணைக்காணேனையா
அரியதிருக்கடையூ ரானே

காருலாவுங்கடையூரானே
கழலிணைப்பூசிப்பே ஹையா

கண்களென்னுஞ்செந்தனல்போல் கண்ணொன்பயந்தே — னையா

மண்ணும்விண்ணுமதிரயிப்போ மாலிவரும்வகைகண் — டேனே

அங்கமெங்குந்துடிக்குதையோ அந்தகனைக்கண்ட — போதே

சங்காரச்சிதானந்தா சரணமென்னைக்காரு — மையா

மங்கையேதாயேயுன் மலரடிசரண — மம்மா

பங்கயப்பதத்தினாலே பாலனைக்காத்தருள் — வாய்

எருமைக்கிடாதன்னிலேறி என்முன்வந்தகால — னுரை

வருமைசெய்தனுப்புமம்மா வையகத்தில் — வாராமலே

திருக்கடையூரில்வாழ்வே தேவனேசரண — மையா

உருக்கமாயெந்தனைக்காத்து உள்ளத்தில்மகிழ்வீ — சையா

அமிர்தலிங்கேசர்சொல்-விருத்தம்.

மைந்தனேபயப்படாதே மறலிதான்வந்தாலென்ன
சந்ததமுரைக்கக்கேளாய் தந்திரமாமுகவன்சாட்சி
உந்தனைக்காலன்கையில் ஒப்பியேகொடுக்கமாட்டேன்
பந்தமாயவனைக்கிட்டி பரிவுடன்போர்செய்வாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா அந்தயமன்உன்னைப்பிடி-க்கவந்தாலென்ன என்னுடையமூத்தகுமாரனை கணபதிசாட்சியா-காணுன்னைக் கைவிடுகிறதில்லை நீயொன்றுக்கும் பயப்படவேண்டிய-தில்லை ஆனபடியால்நீஉன்னுடைய மனைதரியம்விடாமல் அவனுட-னேஎதிர்த்து வார்த்தைசொல்லியோட்டிவிடும் மார்க்கண்டா.

மார்க்கண்டன்-தரு-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

இதோவாராவேகாலனும் இதுக்குநானென்னசெய்வேன்
இதோவாராவேகாலனும்

அநுபல்லவி.

இந்திரனிரையைப்போல் கதையையேந்திமாடேறியிரங்கியோடிவருங்கி

சரணங்கள்.

அக்கினிப்பொறிதெறக்கண்ணேமிரட்டி சுழற்றி-எத்தன்
ஆவியைக்கொல்லத்துடித்து அதட்டி
திக்கெல்லாம்நடுங்கச் சீறி
சிறுவன்மேற்கோபங்கொண்டு மீறி-இதோ
மேகமண்டலத்திலிடிகள் போலவேசத்தங்கொண்டி
மின்னல்போலவே சூலந்துள்ளவே
நாகலோகத்துச்சேட ஞெகிங்க
கைத்துப்பகைத்தாலும் நடுங்க-இதோ
தூதர்கள்புடைசூழ முன்னேயேபொல்லாதகால
தண்டோபிடிக்க யென்னேயே
ஆதரிக்கவேறில்லைஅபயமீக்தென்னைக் காரும்
ஐயாகடாவிறங்கி அமுர்தலிங் கேசா-இதோ

எமதர்மராஜன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

ஏதுமார்க்கண்டாநீதான் எண்ணிடதூதர்வந்தால்
வாதுசெய்தாவதேது வயதுமேமுழுதுமாச்சு
சாதுபோல்நீயுமந்தச் சதாசிவனருள்பெற்றாலும்
நீதருமுண்ணைக்கண்டு நிடமுடனேகுவேனே.

வசனம்.

வாரும்பிள்ளாய் மார்க்கண்டாஎன்னுடையதூதர்வந்தால் அவர்களைவாதுசெய்துவோட்டியடித்தாய் அதைலேஉனக்கும்பலிதமென்ன உனக்குக் கொடுத்த பதினாவயதும் முடிந்துபோய்விட்டது

அருந்தவரைப்போல் அந்தமுக்கண்ணருடைய கிருபையைப் பெற்றாலும் உன்னைவிட்டுப்போவதில்லை எப்படிப்பட்ட பொல்லாங்கு வினைத்தாலும் உன்னைக்கொண்டுபோகாமல் விடுவதில்லையடாமார்க்கண்டா.

மார்க்கண்டேயர்-தாதனஜாவளி-வர்ணமெட்டு

போவேசெலியா போவேசெலியா என்ற

பல்லவி.

பூசையான்செய்தேனே பூசையான்செய்தேனே

அநுபல்லவி.

சரவுன்னை பூசையான்

சரணங்கள்.

மாசிலாவுன்னை மலர்களாற்பூசித்தேன்
மோசமேசெய்யாதே மோசமேசெய்யாதே
மோசமேசெய்யாதே ஏமன்வாரான்
மோசமேசெய்யாதே (பூசை)

சண்டன்கிடாவிலேறி சாடவாரானேசீறி
அண்டினேன்யுன்னையே அண்டினேன்யுன்னையே
அண்டினேன்யுன்னையே தேவாயுன்னையே
அண்டினேன்யுன்னையே (பூசை)

ஏமன்வாரானேயோடி யிங்குமேனன்னைத்தேடி
என்னசெய்குவேன்யினி யென்னசெய்குவேன்
யினியென்னசெய்குவேன் வாரானிதோ
யினியென்னசெய்குவேன் (பூசை)

சிரகிரியென்றபுரி அருள்துரைசிங்கன்கவியால்
ஜெபித்தேனுன்னையே ஜெபித்தேனுன்னையே
ஜெபித்தேனுன்னையே செந்தமிழால்
ஜெபித்தேனுன்னையே (பூசை)

மூத்தவீராயிவர்ணமெட்டு-பின்முடுகு

திருமறையும்புகழுந்திருக் கடையூர்வாழும்
பொருளேயுனையிப்போ போற்றி செய்தேன்

வருமாவல்வினை யிடறுந்தவிர் சிறுபையனென்றுபாரம்
இதுதருமமல்ல வுனக்கு கடையூரானே

எண்ணுதவெண்ணங்க ளெண்ணியெண்ணிமனம்
புண்ணுய்க்கசிந்திப்போ உருதுதையோ
விண்ணவரொடுமெண்ணுற்றவர் சென்னிக்கொடுபன்னித்தநி
வண்ணப்பெயர்பெற்றக் கடையூரானே

நடுகொள்ளைக்காரன்போல் நெடியநமனிப்போ
திடுதிடென்றேடிவருவானே
அடுமைத்திறம்பெறவுன்னடி வடிவைக்காண்பித்தப்படி
விடுவிக்காதே கடையூரானே

கெஞ்சிகெஞ்சிஈருங் கொஞ்சிகொஞ்சியுனை
தஞ்சந்தஞ்சமென்றே இறைஞ்சினேனே
அஞ்சாதெமனைஞ்சைகட்டு பஞ்சாக்கிடவிஞ்சிக்கொடு
எஞ்சாதருண்மஞ்சுக்கடையூரானே

பொரியுங்கலங்குதே மதியமுந்தியங்குதே
வெறியாமரலியை மிகவினைந்தால்
அறியாதவனென்று தெறியாவிதுசரியென்றெருரு
குறியாகிலுங்கூராய் கடையூரானே

அண்டர்கள்போற்றிடு மாண்டவனேபெரு
சண்டாள சண்டனின் மண்டைரெண்டாய்
துண்டுப்படசண்டைக்கிட தண்டுபெறத்தொண்டற்கொரு
வண்டுத்தா வாதா கடையூரானே

இட்டமுடன்பூசை நட்டப்படாமலே
சட்டதிட்டப்படிசெய்திருக்க
கட்டப்பெருபாசத்தொடு மட்டப்பெருகத்திக்கொடு
வெட்டப்புறப்பான் கடையூரானே

நடுங்குதுஉள்ளமுமொடுங்குதுதேகமும்
படுபாவியானகாலனைக்கண்டால்
கடுகன்றிவன்மூடுகித்தெருள் கொடுவெந்தனே பருகப்பொருள்
இடுவென்றுனைத் துதித்தேன் கடையூரானே

தேவாரம்

அடைவோதலங்களெல்லா மன்புடன்பூசைசெய்து
கடைதியாய்வந்தேனிங்கே கடையூரானேயேமனிதோ
தடையின்றிவந்துவிட்டான் தந்தையேபோன்னையன்றி
விடைகொடுப்பாருமில்லை விதிதகையேமுற்றலிலை

மார்க்கண்டேயர்-நாதனைநாவளிவள்ளலைபெட்டி

இன்னுன்வலகாதே வானிகுணனின்ற

பல்லவி

என்னுசெய்வேன்சிவனே அடாயிந்த
ஏமன்பொல்லாதவனே

அநுபல்லவி

உன்னையல்லாமல்வேறே லொருவரில்லையே
ஊழியனென்மேலுமக்கு யிரக்கமுமில்லையே
என்னசெய் வேன்நான் ஏதுசெய்வேன்நான்
ஏதுசெய்வேநான் யிவ்விதிக்கிலசமானேன் இன்னு

சரணங்கள்

அந்தகன்வருகிறான் அதட்டியேகெருக்கிறான்
வந்தெனைக்கிட்டுகிறான் வாவென்றேயட்டோன்
வந்துகாருமென்துயர் தீரும்சுவாமிதுயர்தீரும்
சிவனேதுயர்தீரும் நான்வாதனைப்படலாமோ
தேவாதிதேவன் கெடலாமோ இன்னு

மறலியும்வருகிறான் மலையைப்பிடுங்குறான்
என்மேல்போடுவேனென்றுளன்மூன்சேருகிறான்
என்னைக்காரும் கண்ணுலேபாரும்
கலிதீரும்பாவியென்னைத் தொடலாமோ
பரமனேயென்னை கைவிடலாமோ இன்னு

சீலஞ்தரைசிங்கம்பாலனுயதண்டம்
சிறுவனைக்காருமே சிந்தைதனில்வாருமே
ஜெனமமெடுத்தேன்நான் உன்னைபடித்தேன்
சிவனேயுன்னையடித்தேன் பரனேயுன்னைபடித்தேன்
காலுன்வாராமல்போக்கு வந்துமெல்லமிதிக்கும் இன்னு

புலம்பல்-தரு-இ-ம்-லோம்புரி-ரூபகம்.

ஐயையோநான் என்னசெய்வேன்
மெய்யாஎமன் செய்யாதெல்லாம்
செய்கிறனே கடையூரீசனே
கொஞ்சிஎமன் மிஞ்சிவாரான்
அஞ்சியுன்னை தஞ்சமென்று
கெஞ்சினேனென் தஞ்சமென்று
வாடாபோடா வென்றுசொல்லக்
கூடாதெல்லாம் கூறுமன்
நாடாதருள் கடையூரீசனே
வெட்டுகட்டு ஞுத்துஎன்று
இட்டவந்து காலனிப்போ
திட்டாரானே கடையூரீசனே
கண்டேனுன்னை கடையாய்காலன்
தண்டுகொண்டு வந்துவிட்டான்
தொண்டன்வயதும் பதிணராச்சுதே
உன்னைவிட்டால் உதவியில்லை
அன்னைதந்தை அன்னைத்தும்நீயே
என்னைக்கண்பார் கடையூரீசனே

எமதருமராஜன்சொல்-விருத்தம்.

பூசைதான்செய்தாலென்ன போதகஞ்செய்தாலென்ன
தேசமேதிரிந்தாலென்ன சிவனடிதொழுதாலென்ன
ரீசனருளைக்களித்த ரீசெட்டுவயதுமாச்சு
பாசத்தால்வீசியங்கம் பதறிடக்கட்டுவேனே.

வசனம்.

அடாவாடா மார்க்கண்டாநீ அனேகவிதமாய்பூசைசெய்தாலென்ன உபதேசம்கொண்டாலென்ன விபூதிருத்திராட்சமாலை சுமந்தாலென்ன சிவன்பாதத்தில்வீழ்ந்து நமஸ்கரித்து பூசைசெய்தாலென்ன அன்றுனக்குதந்த வயது(கசு)முடிந்துபோய்விட்டது ஆகையினாலடித்து இழுத்துக்கொண்டுபோகிறேன் பாரடா.

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

வரிசையாயறுகுதும்பை மதியொடுபுனலுஞ்சூடும்
அரியயன்தேடிக்காணு அண்ணலினடியார்தம்மைப்
பரிசுடனழைக்கவந்தால் பயப்படேனினிபோபோ
தரிசினிற்போகாவிட்டால் தண்டமுமுனக்குண்டாமே.

வசனம்.

அகோவாராய்ஏமனே அறுகையும்தும்பைமலரையும்சந்திரனையும்கங்காதேவியையும்சடாபாரத்தில்தரித்திருக்கப்பட்டவனுயும்முன்காலத்திலே பிரமாவினுலேயும்மகாவிஷ்ணுவினுலேயும்தேடிதற்கரிய அடிமுடியுள்ள ஈஸ்வரனுடைய அடியார்களை அழைக்கவந்தாய் சீசீ பயப்படமாட்டேன் அதிசீக்கிரத்தில்போபோ-இங்கிருந்தோடிப்போகாவிட்டால் உனக்குமகத்தாகிய உபத்திரவம்நேரிடும் மரியாதையுடனே போய்விடடா ஏமா.

மார்க்கண்டேயர்-நாதனுடாவளிவர்ணமெட்டு.

சாமிவேளகாதூரா சாமிவேளகாதூரா என்ற

பல்லவி.

காலனிதோவோடிவாராணே காலனிதோஓடிவாராணே

அநுபல்லவி.

கடைக்கண்பார் கடையூராணே

சரணங்கள்.

பாலனைக்காருமையனே பார்க்கபயமாகுதையனே காலனி
திங்களைத்தரித்தவனே திரிபுரமெரித்தவனே காலனி
பொங்கரவணிந்தவனே சங்காராயிங்குவந்தேனே காலனி
என்னசெய்வேன்ஈஸ்பரனே எருமைக்கிடாமீதினில் காலனி
தூசைச்சிங்கன்தமிழ்க்கிசைந்தவர் தூணையாருமில்லைகாக்கவர

மார்க்கண்டனுக்கும் எமனுக்கும் தர்க்கம்:

தரு-இ-ம்-ஆசபி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஏமன் -ஆடாவுனக்கிந்த ஆண்மைதந்தபயலே
பாடாவுன்சவுரியம் பதைபதைக்கக்கட்டுகிறேன் (ஆடா)

மார்க்-தாண்டிப்பேசாதேமா சௌரியம்வீணைப்போமடா
தீண்டிப்பார்த்தாலென் சேதிதெரியுமடாயுனக்கு (தாண்டி)

ஏமன்-பின்னேத்தெரியுமென்று பிதற்றுகிறாய்படலே
உன்னேக்கட்டியடித் துதைத்திழுக்கிறேன்பாராய் (ஆடா)

மார்க்-இழுத்துப்பார்ப்பாயோமா யீசனுத்தனேக்கண்டால்
அழுத்தமாயுதைத்திந்த அவனிமீதில்வீழ்த்துவார் (தாண்டி)

ஏமன்-வீழ்ந்துவாரென்று மெத்தப்பிதற்றுகிறாய்பயலே
சூழ்ந்துங்கோடாலிகொண்டு சுழட்டிமாசைப்பிளப்பேன் (ஆ)

மார்க்-மாசைப்பிளப்பேனென்று வலுவாய்ப்பேசாதே
தூசத்திலோடிப்போடா துஷ்டாஎன்மூஞ்சிற்காதே (தாண்டி)

ஏமன்-துஷ்டனிடஉடத்தை துடிக்காகச்செய்கிறேன்பார்
கட்டிபெருமைக்கிடா காலுக்கிறையிடுவேன் (ஆடா)

மார்க்-எருமைகிடாவும்நீயும் எறியும்ஆயுதமும்போய்
அருமைகுலைவாயிந்த அவனியிலினிசொன்னேன் (தாண்டி)

மார்க்கண்டேயர்செல்விருத்தம்:

ஏமனுக்கிதரைத்து யீசனுர்தம்மைநோக்கி
காமனைஎரித்தகண்ணு காலனையுதைத்தாயென்னும்
காமத்தைநிர்வகிக்க கண்மையாய்யெனையாட்கொண்டாய்
தாமதமினிசெய்யாதே தற்பராமயக்கந்தீர்ப்பாய்

மார்க்கண்டேயர்சொல்-தரு.

என்னசெய்வேன்சிவனே எமவாதைக்கு
என்னசெய்வேன்சிவனே

அநுபல்லவி.

சொன்னலாறுமோவுந்தன் துயரந்தணியிப்போ
உன்னிப்பார்கடை யூரமூர்தலிங்கா(என்ன)

சரணங்கள்.

கொல்லுவேனென்றெனைக் கிட்டியேபாசத்தால்
கொக்கரித்து வெருட்டியே
நில்லடாவென்று அதட்டிகெதைக்கொண்டு
நிறைந்தவிழி மிரட்டியே
நல்லதிருக்கட்டுமென்று நாற்றிசைநடுங்கின்று
பல்லியுங்கடித்துக்கொண்டு பரவிவாக்கண்டுயின்று (என்ன)

படபடென்றுமீசை துடிக்கநெர்ச்சித்துஅண்ட
பகிரண்டங்களும் வெடிக்க
கடகடென்றுபல்லைக் கடிக்கசராசரங்கள்
கலங்கிமயங்கி பிடிக்க
கடுகவென்றுயிர்தின்று முடிகவேமுடிப்பேனென்று
இடியெனகதையுங்கொண்டு படையுடன்வாராநின்று(என்ன)

அந்திபிறைசூடுஞ் சடையாபூதங்களென்ன
அந்தமுள்ளபெரும் படையா
தந்தியுரிபோர்த்த யுடையாலலங்கிர்தங்கள்
தங்குகின்றவெள்ளை விடையா
விந்தையின்மால்தேடி விளங்கும்பாதவிணைதா
சிந்தையில்நிணைந்தபோதா திருக்கடையூரிணுதா (என்ன)

எமதர்மராஜன்-சொல்-விருத்தம்.

எந்தனையிகழ்ந்துபேசி ஈசன்றனைப்பூசித்து
வந்தனீகர்வங்கொண்டு வாய்மதம்பேசலுற்றாய்
உந்தனல்லயிரைக்கொண்டு உளமகிழ்ந்தேகாவிட்டால்
அந்தகனென்றபேரை அகற்றுவேனகற்றுவேனே.

அடாவாடா மார்க்கண்டா மிகுந்த ஆணவங்கொண்டு என்னை இலேசாக வெண்ணி இழிவாய்பேசி திக்குப்பாலகராகிய எங்களிலொருவராகிய அந்த யீசனை பூசித்து எந்தன் முன்னே மகா

கர்வங்கொண்டுவாயில்வந்ததெல்லாம் சொல்லிவந்தாய் உன்னுடையவெல்லம்போன்றுயிரைக் கவர்ந்துகொண்டு மகாசக்தோஷத்தோடே என்னுடையமபுரஞ்சேருகிறேன்பார் மார்க்கண்டா.

மார்க்கண்டேயர்-நாதனஜாவளி-வர்ணமெட்டு.

அந்தலோனேதெல்லவாரே அய்யோயேமிஸைதனே என்ற.

பல்லவி.

அந்தகனும்இதோவாரான் ஆதரிப்பான் கடையூரான்

அநுபல்லவி.

தந்திரமானகதைசூலங்கொண்டு-தாவிதாவிலேறி அந்த

சரணங்கள்.

அண்டபுவனமெங்கும்நடுங்க அதட்டிதூதரைகூட்டியே
வண்டத்தனமாய்வார்த்தைபேசி சண்டனென்றபாவிதான் அந்த

இனியாரெனக்கில்லைஅய்யா யீசனேஉன்னையன்றிச்
சனியனுடன்பிறந்த சண்டன்மாடேறியே அந்த

சங்காரவுன்னைபூசைசெய்து சரணமென்றுவந்தேன்
எங்கும்புகழ்த்துறைசிங்கன்கவியுமிங்குயானும்பாடிமுன் அந்த

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

கண்ணிகள்.

சம்போசிவசங்கர
அம்புவியோர்களும்
அருளானந்தபோதமே
பெருவாழ்வுடைநாதமே
திரிபுரதகனனே
பரிபூரணானந்தனே
வாரான்வாராமனேமன்
கருமலைபோல்பூதங்களுட்னே

தயைசெய்கிருபாகர
அகிலமுநடுங்குதே-அரக
அருமாமறைவேதமே
பிறகாதவிணைதமே-அரக
தேவாதிதேவனே
பராபரிபங்காளனே-அரக
வாதைகள்செய்திட
ஐயோசம்போ-அரக

எங்குமுனைத்தேடியே இங்குவந்தேஞெடியே
பொங்கெமன்கூடியே புலிபோல்வாராஞெடியே-அரக
மங்கையிடப்பாகமாகிய பொருளே
அங்கம்பதருது அருள்தருவ யிசிவசம்போ-அரக

மார்க்கண்டேயர்சொல்தங்கம்பாட்டு-முத்துவிராயிமெட்டுகள்.

முத் நனைவளருஞ்சோலைசூழ்த் திருக்கடையூர்
நாதாகடைக்கண்ணுல் பாராயோ
உனைநம்பினேனெனையுந்திகழ் பெருவர்தகன்விழிசிந்திட
உன்னருள் தந்தெனையாளாயோ

தங்க ஆதியனுதி அருமைநீதி
சோதிபரம்பொருளே கடையூரான்
துயர்தனைத்தீருமையா கடையூரான்

முத் கோடையிடிபோல சத்தமிட்டுயேமன்
கூக்குரலிட்டிதோ வாராளே
மாடமிரங்கியருள்புரிவாய்திரு
வள்ளல்திருக்கடையூராளே

தங்க மூர்க்கன்கிடாவிலேறி முன்னுலேவாராளே
பார்க்கபயமாகுதையோ கடையூரான்
பகுமைவைத்துக் காருமையா

முத் பள்ளமேடென்றறியாமலேபாவி
துள்ளியகன்றுபோல் வாராளே
சள்ளைதவிர்த்தெனை மெள்ளவேயாண்டருள்
வள்ளல்திருக்கடையூராளே

தங்க சண்டன்கிடாவிலேறி யெண்டிசைதானதிர
தண்டத்தனஞ்செய்பவாரான் கடையூராளே
தரத்தியெனைக் காருமையா

முத் ஐயோராளென்னசெய்வேன் வையகமீதில்
செய்யாவினையென்னை செய்தேஞே
கையில்கதைகொண்டு காலனிதோவாரான்
துய்யகடையூராளே

தங்க கரியவலிபோலிதோ காலன்கிடாவிலேறி
வருகிறானெண்ணைக்கண்டு கடையூரான்
வாதைகள்செய்திடவே

இம்-கியால்மெட்டு-ஜாவளி-ஏகதாளம்.

தேவா தேவா தேவா சாயாமணேஹரா
பூவார்திகந்திருக்கடையூரானே மஹாதேவா

எமதருமராஜன்சொல்-விருத்தம்.

கல்லினுலடியும்பட்டு வேடன்காலிலுதையும்பட்டு
வில்லினுலடியும்பட்டே வேலினிலொளித்தபீசன்
சொல்லியேதிரிந்தாலென்ன சூலத்தினுலேகுத்தி
கொல்லுவேன்கொல்லாவிட்டால் கூத்துவனல்லகண்டாய்

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா நீபூஜிக்கப்பட்டபரமசிவ னுனவ சாக்கியனுயனுரிடத்தில் கல்லினுலடியும்பட்டுவேடன்காலினு லுதையும்பட்டு பத்ம! சூரனுக்காகப் பயந்து வோடிஒளித்துக்கொ ண்டு நிர்வாகமில்லாமல் ஐவேலிக்காயில்புகுந்து ஒளித்துக்கொண்ட பரமசிவனீ நீநிங்காமல்பூசைபண்ணுகிறதினுல் எனக்காகவேண்டிய தென்னகல்லகுணத்துடனே யென்பின்னுலேவந்தாலாச்சுது வராவி ட்டால்இதோபாசத்தினுலேகட்டி சூலத்தினுலேகுத்தி நான்யெமபு ரம் கொண்டுபோகாவிட்டால் நான் யெமதர்மராஜனல்லடா மார்க்க ண்டா:

மார்க்கண்டேயர்-நூதனஜாவளி-வர்ணமெட்டு:

மாணுபிமானமு மானுபிமானமு னன்ற

பல்லவி.

அந்தகன்வாருனே அந்தகன்வாருனே
அரனே அரனே அரனே (அந்தக)

சரணங்கள்.

இந்தவேளையிலென்னை யேமன் கையில்தாராதே
சகர சகர சகர (அந்தக)

பலபலவிதமாய்த்துன்பம் பத்தனும்படலாமோ
பரனே பரனே பரனே (அந்தக)

உன்னையேநம்பினேன் உற்றார்துணையுங்காணேன்
யென்னையாள்யென்னையாள் (அந்தக)

துரைசிங்கன்தமிழால் துதித்துசரணமடைந்தேன்
துரையே துரையே துரையே (அந்தக)

மார்க்கண்டன்-யமனுக்குச்சொல்-தரு.

இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரென்றுநினைத்தாயடா யேமாளங்க
ளாமூர்தகண்டீசரான ஆண்டவரருகிருக்க (ஆரென்று)

அநுபல்லவி.

போடாயேன்வாதாடுகிறாய்
போடாயேன்வாதாடுகிறாய்
ஓடிவோடியுளராதேயடா

சரணங்கள்.

மார்க் காரணங்கடந்தபரிபூரணமதாய்நிறைந்த
ஆரணமானபொருளேச்சாறுமடியார்களுடன்
கோரரூபமாகவந்துசீறும்புலிபோலின்று
வீரியவார்த்தைசொன்ன சூரியன்மகனேபோடா (ஆ)

யமன் ஆரெனக்கெதிராளியானவரே அந்தசூராசூரர்களில்
ஆரெனக்கெதிராளியானவரே
பாரினில்வகையானவர்-வேரில்லே
சூரத்துடன்யிப்புவியில் (ஆரெனக்கெதி)

மார். அண்டபுவனங்களெல்லாங்கண்டிடும்பேர்களொடுங்க
வண்டனைப்போல்வார்த்தைபேசுண்டாகீவந்தாயுந்தனை
கண்டஞ்சுவேனேபோடாகீகண்டுமுண்டமாய்ப்பேசாதே
பண்டுமுப்புரமெரித்தார்தொண்டனென்றறியாமலே ஆரென

ஏம. பூமியந்திரசுவர்க்கமேறுமலைமூன்றுலோகஅண்டரண்ட
பகிரண்டமென்னுதாச்சுதேதாமதமின்னமுண்டோடா
சிவனொருவனென்றுசாற்றிபோற்றிணுன்வாயைபேர்த்து
தூர்த்துமாக்கிடுவேன் ஆரென

மார். திக்குகள்கிடுகிடெனசிக்கெனக்கிடாவிலேறி
வக்கிறதந்தங்களைக்காட்டிவுக்கிரமுடன்கையைமீட்டி
கெக்கலிக்கிறுய்யேயுந்தக்கசடைபோனறிந்தால்
இக்கணமுதைப்பாருன்னைநிற்காதேபோடாயென்னை ஆரென

ஏம. சந்ததமும்ஞானக்குவிந்தையாகபுத்தியெந்த
யெந்தவிதமுமாகிசொந்தமுடனேசிவன்பேர்சொன்னு
னுண்ணக்கண்டதுண்டமாகவெட்டிதுண்டுதுண்டாக
யிப்போதெண்டக்கிறையிடுவேன் ஆரென

மார். நித்தியங்கமாசுபாடிசித்தமதருகிவாடி
பக்தருடனுருங்கூடிமுத்திவழியதுதேடி
பக்தருடன்வாதுசொண்ணுல்தன்பாதத்தாணைப்பார்
செத்திறந்துபோவாய்சொன்னேன்னத்தாதேபோடாகீ

எமதருமராஜன்சொல்-விருத்தம்.

என்னுடன்வீரந்தன்னைவதடானிகழ்ந்தாயீசன்
தன்னுடவுமைதானேசவுரியம்பேசுகின்றுய்
தன்னிகரில்லாவெள்ளித்தடவரையதனைச்சேர்த்து
என்னுடன்கட்டுவேனின்னுறமதுகண்டிடாயே.

வசனம்.

அடாவாடாமார்க்கண்டா அதிகபலபராக்கிரமசாலியாய் ஈரே
முபதினுலோகத்திலும் எனக்கெதிரில்லையென்று இராச்சியபரிபால
னம்பண்ணிக்கொண்டுவந்தேன் அப்படியிருக்கொஞ்சமாவது பய

மில்லாமல் என்னை உதாசினத்துப்பேசுகிறாய் இது உன்னுடைய ஆணவமோ ஆருடையவலுமையோ தனக்குஇணையில்லாத அந்தவெள்ளிமலை அரசனுகிய பரமசிவனிருக்கப்பட்டஅத்தகைலாயகிரியைக் கூட உன்னுடன்சேர்த்து குண்டுகட்டாய் கட்டிக்கொண்டு போகுறேன் பாரடா.

மார்க்கண்டனுக்கும்-எமதருமராசனுக்கும்-தர்க்கம்.

எமதருமராஜன்சொல்-தரு.

கண்ணிகள்.

துஷ்டப்பயலேமார்க்கண்டா உன்னைத்துரத்திப்பிடித்திழுத்து
தொழுமரத்தில் கட்டியடிப்பேனடா

மார்கண்டன்சொல்-தரு.

கட்டியடிக்கக்கூடுமோ இங்கேயில்லாதேசம்மா
கண்டாலெரிப்பாரீசன் சம்மதமா

எமதர்மராஜன்சொல்-தரு

ஈசனெறிப்பாரென்ற வாய்தனைக்கிழித்து
தாங்கியெடுத்தேகுவே னெந்தனுலகுக்கிப்போ

மார்க்கண்டன்சொல்-தரு.

பார்ப்பதென்னைனக்குப் பரமேசர்துணையுண்டு
பல்லைக்கடித்துமிரட்டாதே போயின்று

எமதர்மராசன்சொல்-தரு.

நின்றநிலையில்சூலத்தால்குத்தி எந்தன்கையிற்பற்றி
நிமிஷத்தன்னிலேகுவேன் நில்லாதேதத்தி

மார்க்கண்டன்சொல்-தரு.

புத்தியல்லடாபேயா போடாஅடாமூடா
பூதநாதன்பல மெனக்குண்டுபாரடா

மார்க்கண்டன்சொல்-வ-ம்.

அடாவாடாவுமாஅகண்டபரிபூரணசச்சிதானந்தராகியும்சர்வலோகரான்யும் சாலோகசாமீபசாயுச்யமென்கிறநாலுபதவிக்கும்மேலாகிய

பதவியைத் தந்தாப்படி ஈஸ்வரருடைய தொண்டனை என்னைப் பிடிக்கிறேனென்றும்கடிக்கிறேனென்றும் கட்டுகிறேனென்றும் வெட்டுகிறேனென்றும் குத்துகிறேனென்றும் கூண்டைவிட்டு உயிரைக் கொண்டுபோகிறேனென்றும்பேய்ப்பிடித்தலுகிற பெண்கள்போலே அலுகின்றாய் அந்தாளிலே திரிபுராதிகளை நகைத்தெரித்ததை மீயறியாதவனே மன்மதனே நெற்றிக்கண்ணெருப்பிலேதகித்ததை யறியாயோ இன்னைருதாம்நெற்றிக்கண்ணைத்திறந்து உன்னைக்காணுகிறதற்குமுன்னே தப்பிப்பிழைத்து சிங்கத்தைக்கண்ட மதயானைப் போலே எமபட்டணத்துக்கு ஓடிப்போடா ஏமா.

எமதர்மராஜன்சொல்-விருத்தம்.

மங்கையைப்பாகம்வைத்துமதிபுனல்சடையில்வைத்து
செங்கையில்மழுமானேந்தும்சிவனடிதொழுதாலென்ன
அங்கவருனக்களித்தவாயுசுமுழுதுமாச்சு
பங்கத்துக்கேற்படாதேபாங்குடன்கட்டுவேனே.

வசனம்.

அடாவாடாமார்க்கண்டா அந்தபரமசிவன்கொடுத்தவயது கசுமாச்சுது இனிமேல் நீபூமியிலிருப்பது தேவதைகளுக்கு சகிக்காது பங்கப்பட்டு போகிறாய் நானும் உன்னை என்னுடையபாசத்தினலே கட்டிக்கொண்டுபோகிறேன்பாரடா மார்க்கண்டா.

மார்க்கண்டேயர்-நூதனஜாவளி-வர்ணமெட்டு.

போவேவானிடுவேகதியாவேசகிஎன்றவர்ணமெட்டு.

பல்லவி.

அடிமையைக்காப்பதுன் பாரம்பொல்லா
அந்தகனிடர்தீரும் அரனேயின்னேரம் (அடி)

அநுபல்லவி.

விடுவேனேபார்என்றுவிறட்டுறுன்நமனென்னை
நடுங்குதேயென்னெஞ்சம்நம்பினேனுன்னை (அடி)

சரணங்கள்.

துரிதமாய்முன்னேதூதர்களுடனேகூடி
கரியமலைபோலகாலன்கடிகிவாரானேதேடி (அடி)

ஆத்திமலரைச்சூடும் அருமறைப்பொருளே
தோத்திரஞ்செய்துவந்தேன் தொல்லைத்தீர்த்தருளே (அடி

முனிவர்சகாயனேமோகூவுபாயனே
சனியனுடன்பிறந்தசண்டன்வாரானே (அடி)

குறைகளுமக்குநான்கோடிசெய்திருந்தாலும்
துணைசிங்கதாசன்பணிதுரையேவங்கெனையாளும் (அடி)

மார்க்கண்டன்-சொல்-தரு.

இ-ம்-குறிஞ்சி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அருளானந்தபரமேவுல — கனைத்தும்பெறிக்கத்தரமாய்
சருவபரிபூரணனே — சம்போசதாசிவனே
பார்க்கப்பயங்கரமாகுதே — மூர்க்கவெமன்கதையாலென்னை
ஆக்கிரமித்துஅடிக்கவாரான் — அமுர்தலிங்கேஸ்வரனே
பஞ்சவுயிர்நடுங்குதையா — தஞ்சமென்றெனைக்காக்கவே
சஞ்சலத்துக்கிடமாகுதே — சண்டனைமூனைந்திடுமே
ஆதாமில்லாதபரனே — நீதாகெதியுனைநம்பினேன்
மாதாபிதாகுருதெய்வமே — மறலியைத்துரத்திடுமே
தெய்வமேஎன்னசெய்வேன் — கைகால்மெய்நடுங்குதிப்போ
ஐயாதிருக்கடையூரானே — அருள்குறிஞ்சிபாடினேன்

எமதர்மராஜன்சொல்-விருத்தம்.

கச்சணிவேடன்பெச்சில்காய்கனிகளெல்லாம்பொசித்து
யிச்சையாய்பிச்சைவாங்குமீமத்திலாடும்பித்தன்
நச்சனியும்மீசன்நற்பதம்பணிந்தாலென்ன
இட்சணம்உன்னைக்கொண்டுபோகுவேன்பாராயிப்போ.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய்மார்க்கண்டா நீபூசிக்கப்பட்ட பரமசிவ னனவன் மசானத்தில் நீலவர்ணமாய் நின்றுகொண்டு பிணம் சுடுகிற

சாம்பலிவாரி திரேகங்களெல்லாம் பூசிக்கொண்டு இந்தவூர்தோறும் திருவோடு எடுத்துக்கொண்டு பிச்சைவாங்கிசாப்பிட்டுக்காலம்போக்கப்பட்ட இச்சையாகிய பரமேஸ்வரனே நீநிங்காமல்பூசைபண்ணிக்கொண்டிருந்தால் யெனக்காகவேண்டியதென்ன நல்லகுணத்திலே பின்னலைவந்தாலாச்சுது இல்லாவிட்டால் யென்னுடையயெருமைக்கிடாபெருவிரலில்கட்டிபிடித்துக்கொண்டு போகாமற்போனல் சண்டைகல்லடா மார்க்கண்டா.

ஆரியா.

எரிதனல்மெழுகாயுருகியேவாடி இருக்குதெநெஞ்சம்
திரிபுரமெரித்தகிருக்கடையூரான் திருவடியேதஞ்சம்
தஞ்சமல்லவோகொடுங்கனற்பறக்குது என்செய்வேன்ஐயா
நெஞ்சம்வீசுதேயழையிலு மதிகூரால்நிமலனென்செய்குவேன்

மார்க்கண்டேயர்-நூதனஜாவளி-வர்ணமெட்டு.

செலியசாலுனே செலியசாலுனே என்ற

பல்லவி.

ஏமனும்வாரானே ஏமனும்வாரானே

அநுபல்லவி.

என்னநான்செய்குவேன் என்முன்னே ஏமனு

சரணங்கள்.

காமனை யெரித்தகருணைப்ரகாசா
நேமமாய்நம்பினேன்நின்னருளீசா ஏமனு

கெக்கலிக்கொட்டிகிடாவின்மேலேறியே
திக்கெல்லாம்நடுங்குதேசிவன்மூன்குடி ஏமனு

பார்க்கபார்க்கநெஞ்சம்பதறுதேஅரனே
கார்க்கயிதுசடயம்கருணைசெய்பரனே ஏமனு

துரைசிங்கன்தமிழ்க்கருள்புரியும்சர்வேசன்
ஒருவர்துணையுங்காணேன்ஒஜகதீசா ஏமனு

தரு-இ-ம்-பைரவி-அடதாளம்.

பாவிதானென்னுயிர்கொண்டு போறேனென்கிறானே
சிவனே பரமசிவனே

பாடுபடுத்துவானே பாசத்திலுல்வீசுவானே
சிவனே பரமசிவனே

வாடுதையோயெந்தன்மனம் வல்வினைதீர்ப்பாய்பரம
சிவனே பரமசிவனே

நாடியேமன்தன்னைக்கண்டு நடுங்குதையோஎன்நிரேகம்
சிவனே பரமசிவனே

உன்னடியரென்றவர்க்கு உபத்திரமுண்டோசாம்ப
சிவனே பரமசிவனே

என்னடியைப்பார்த்துபார்த்து ஏமன்வருகிறானே
சிவனே பரமசிவனே

பாம்பணியும்மார்பாயெந்தன் பரிதாபம்பார்க்கொணுதோ
சிவனே பரமசிவனே

தீம்பர்களுடனேயேமன் சேர்ப்பனென்றுசீறுறானே
சிவனே பரமசிவனே

பூசைக்குப்பத்திரமெடுக்கப் போகவொட்டேனென்கிறானே
சிவனே பரமசிவனே

சசனருணையல்லாமல் நீலித்தாருசைப்பார்
சிவனே பரமசிவனே

நெஞ்சுதடுமாறுதையோ நீதியோவுந்தனக்கிது
சிவனே பரமசிவனே

அஞ்சுதேயென்பஞ்சபூதம் சிவனே
அரியயனுங்காணவொண்ணு பரமசிவனே

செப்புமுப்புராதியரை சிவனே
சிரித்தெரித்ததேவதேவா பரமசிவனே

இப்புவியில்வேளைகெற்றி சிவனே
யெரியிலெரித்தசாம்ப பரமசிவனே

தண்டீகஞ்செய்யுமித்தத் சிவனே
துஷ்டனைத்தொலைத்திடாயே பரமசிவனே

தொண்டனெனையாண்டருளில் சிவனே
தொல்லுலகில்புகழுறுதோ பரமசிவனே

கோபமுடன்பாசசூலம் சிவனே
கொண்டெரியவருகிறனே பரமசிவனே

கோபாக்கினியால்தகித்துப் சிவனே
பாசத்திலல்வீசரானே பரமசிவனே

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

ஊழியகாலத்தின்பஞ்சம் ஓரிடத்திருப்பதுண்டோ
ஆழிதானுடைந்தாலென்ன அற்பமாமணலேதாக்கும்
பாறிலேதிரியவேண்டாம் பரமனர்கோபங்கொள்வார்
வாழியின்றடைந்தோமென்றுன் வானகர்போவாய்நீயே.

வசனம்.

அடாவாடாஎமா பிரசண்டமான வாயுவாக்கினி வீசுங்காலத்திலே கேவலமாயிருக்கிறபஞ்சபறக்காமலிருக்கு'மாசமுத்திரங்களை புரண்டால் நட்பமாயிருக்கிற மணலாலே அணைபோடுவாருண்டா அதுபோலமுப்புராதிகளோகைத்தெரித்தும் மன்மதனைநெற்றிக்கண்ணினல் தகித்தும் தேவாதிகளைக்காத்த அந்தநிராயுதனுடைய கிருபையைப்படைத்த எண்ணைஉன்னல் அணுப்பிரமாணமாவது அசைக்கக்கூடுமாவீணிலேதிரியவேண்டாம் ருத்திராக்கினிசொளத்தாகாமாய்க் கிளம்பிவிட்டால் அதினுடைய தீட்சணம் பொருப்பதற்குவுண்ணுமாகாது உன்னைப்போல் ஒன்பதினுயிரம்பேர்வந்தாலும்ஆகாதுஎனபடியினுலே இப்போதே கேடுமமடைந்தோமென்று நீ இருக்கப்பட்ட எமபுரத்துக்கு ஓடிப்போம்பிள்ளாய்ஏமா வெழ்க்கம்கெட்டுப்போய்விடாதே நடநட போடா அந்தகா.

எமதருமராஜனுக்கும்-மார்க்கண்டனுக்கும்தர்க்கம்.

தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்-கண்ணிகள்.

ஏ - வெழக்கங்கெடுவாயென்று விருதுகள்பேசுகிறாய்
இக்கணமுனைக்கொண்டு யேகுவேன்பாராய்

மா - பாராய்யெனக்குநாரி பாகர்துணையுமுண்டு
வீராப்புப்பேசாதே வேகமாயேசாதே

ஏ - போடாவாடாவென்று புத்திசொல்லாதே
மூடாதேவருமஞ்சி மூடுதிடுக்கிடுவார்

மா - திடுக்கிடுவார்சிவ பூசைசெய்யாதவர்
துடுக்கமாயின்னுருதாம் சொல்லாதேயோமா

ஏ - ஏமாஏமாவென்று எதிர்த்துப்பேசுறாய்நீ
ஈமத்தாடியான் இருந்தாலும்பயமோசெல்

மா - சொல்லுவதேதுயிர் தூணையானசிவனுண்டு
வெல்லமாட்டாய்போடா வெறிகொண்டகாலா

ஏ - காலத்தில்பத்மாசூரன் தேடயிற்சிவன்
ஞாலத்திலில்லாமல் நடக்கபார்த்தாயே

மா - பார்த்தமாறன்றண்ணீப் பரமனுதற்கண்ணுலே
எத்தரோகவே யெரியக்காணுயோ

ஏ - எறிபட்டுக்காலா லுலகத்திட்டவேடன்
குறியாயெச்சல்தின்ற கொன்றைசூடியெதிரோ

மா - எதிரானமுப்புரத்தோரை யெரித்தசிவன்
சதுரிலாதணுவு மசையாதுபோடா

ஏ - அசையாமரப்பாவை கோலவித்தையாட்டும்
அதிசயமரியாயோ அதுதெரியாயோ

மா - தெரியுதுபார்த்தலே தெரிக்கவிழுவேபோராய்
திருக்கடையூரீசன் திருவடியுதைப்பட்டு

ஏ - உதைப்பட்டுபோவேனென் றுறுமாகபேசாய்
திதைக்குமென்கதையினல் சிதாவடிப்பேன்பார்

மா - அடிக்கிறேன்பாரென்று அதட்டிமிரட்டுகிறாய்
கொடிக்குரூன்றலீழும் நோகாமலோடடா

ஏ - ஓடிவாராவிட்டா லுன்னையுஞ்சிவனையும்
நாடியபாசத்தில் நான்கட்டுவேனே

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

ஐயனேயென்னசெய்வேன் அரகராயென்னசெய்வேன்
வையகமெல்லாம்யேமன் வாதையால்நடுங்குதிப்போ

உய்யதோர்வழியுங்காணேன் உமையவள்பாகனை
மெய்யரேயேமன்செய்யும் தீவினைக்கென்னசெய்வேன்

வசனம்.

ஐயனே ஈஸ்வரா ஜகதீசா அனந்தகோடிவாசனாயனே என்னசெய்வேன் இந்தப்பூமியெங்குமடங்கி இடுகிடுகின்றதே இதைவிலக்குகிறதற்கு வேறொருவழியுங்காணேமே உமாபாகத்தமர்த்தனே இந்தஏமன்செய்யப்பட்ட இம்சையைத்தவிர்க்கவில்லையோ என்னசெய்வேன் சுவாமி.

தானலோராகூடாரா சாமிவேகமே-என்ற

பல்லவி.

காலனிதோவாராவென்முன்னே தாவியீசனே

அநுபல்லவி.

பாலன்முகம்பாருமய்யா பரமனேமெய்யா

சரணங்கள்.

பத்தன்மீதி லினிதுவந்துமே மூத்திகாருமே
எத்தனையான்பூசைசெய்தால் சித்தமில்லையே
உற்றதுணையாருமி லை உன்னைவிடவே கா
எங்குந்திரிந்துதேடியானும் யிங்குவந்தேனே
பங்கஞ்செய்யமேனிதோ பொங்கிவாராவனே
சங்கராவந்துகாருஞ் சண்டன்முன்னே கா
எண்ணிவந்தாளவேணும் யித்தவேளையில்
ஏமன்வாராவினிதோபாரும் யென்னசெய்குவேன்
ஆளையாண்டுகொள்வா யமூர்தலிங்கமே கா
திரிசிரகிரியில்வாழும் சிலகல்லவோ
அருள்பெறவேணுமென்று அண்டினேனையா
பத்தன்துரைசிங்கமொந்து பாடினேன்சிந்து கா

மார்க்கண்டன் புலம்பும்போது திருக்கடையூரீசனர்

அசரீரிவாக்களித்தல்.

கண்ணிகள்.

மாமுனிமகனே பாலா
பாலமார்க் கண்டா
பயம்வேண்டாந் தொண்டா
அபயந்தந்தேன் பாலா
அண்டையில்வா மகனே
அழுகுசுந்தர முகனே

அஞ்சாதேஅப்பா பாலா
வந்தேனிதோ வந்தேன்
வந்தேன்வரக் தந்தேன்

மார்க்கண்டன்சொல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

என்னசெய்வேன்திருக்கடையூ ரீசனரே-இதுக்
கேதுசெய்வேன்கடையூ ரீசனரே
சின்னஞ்சிறுபாலன் ஈசனரே-சேவை
செய்யவந்தேன்கடையூ ரீசனரே
காலபாசங்கொண்டு ஈசனரே-என்னை
காக்கொணாதேதாகடையூ ரீசனரே
சிவனேயானிதுக்கென்ன செய்வேன்-பெருஞ்
செல்வனைகடையூ ரீசனரே
சுத்திவந்தமுனை முனைக்குராவேன்-ஜெக
சோதிமயமானகடையூ ரீசனரே
சத்திகொண்டகையால் வீசுறனே-என்ன
காலனிதோகடையூ ரீசனரே
கரியைக்கண்டசிங்கம் கொதித்தாற்போல்-காலன்
கெர்ச்சிக்கிறான்கடையூ ரீசனரே
அரியயனுங்காணு ஆதிமூடியே-எந்தன்
ஐயாதிருக்கடையூ ரீசனரே

அமிர்தலிங்கேசர்சொல்-விருத்தம்.

சிந்தைகைந்துருகவேதுஞ் செல்வனேயஞ்சவேண்டாம்
அந்தகன்றன்னையின்ன மறைகொடிக்குள்ளேவீழ்த்தி
சிந்தமே மாற்றிமெத்த சிருடனைழப்பேனியும்
அந்தகாட்செய்தபாவ மனுபவமிதுவேகண்டாய்

வசனம்.

அகோவாரும் பக்தசிரோமணியாகியமார்க்கண்டாநீயாதொன்
றுக்கும்பயப்படவேண்டாம்அந்தஎமனை இன்னம் அரைகொடிப்போ
திலேபூமியிலே அவன்சிரசுவிழும்படியாகச்செய்து உன்னுடைய ம
னைதுக்கநிவாரணம்பண்ணினன்னுடைய சிவலோகத்துக்குகொண்டு
போகிறேன் நீமுற்பவத்திலேசெய்த பாபகர்மதுவேஷங்கள் ஒழியும்
வரையிலும் பொறுத்திரும்பிள்ளாய் மார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்-தரு.

இம்-பூபாளம்-ஜம்பை-தாளம்.

அண்ணலேஅபயமையா ஆதியேயபயமையா
எண்ணரும்பவமொழிப்பாய் யீசனேயபயமையா
கண்ணிலுல்லமணிக்கண்டேன் காயமுருங்குதையா
பண்ணியப வங்கள்போக்கும் பரமனேஅபயமையா
மன்னவர்போற்றுமுந்தன் மலரடிக்கபயமையா
சின்னஞ்சிறுவன்மேற்கிருபை செய்யவேஅபயமையா
யென்றுமுந்தன்பாதார மீசனேஅபயமையா
அண்டிவந்துபூசித்தேன் அண்ணலேஅபயமையா
உன்னையல்லாலவேறுதுணையார் ஒருவனேஅபயமையா
என்னைச்சிவந்தனிற்சேர்ப்பாய் ஈசனேஅபயமையா
சங்காரசதாசிவனே சர்வேசாஅபயமையா
பொங்கரவணிந்தயீசா புலியூராஅபயமையா
பாதிமதியணிந்த பரமனேஅபயமையா
சோதிசுடராய்விளங்கும் சூலியேஅபயமையா
காலனைத்துரத்தியுந்தன் கழல்தராஅபயமையா

மார்க்கண்டேயர் நூதனஜாவளிவர்ணமெட்டு;

சாமிராடேமந்தினே சங்கரோடித்தியாவே

பல்லவி.

ஆசையாய்பூசைசெய்தேன் ஐயனேயான்மறவேன்

அநுபல்லவி.

பாசத்தைவீசவாரானே பரனே வீசவாரானே சிவனே
வீசவாரானே யென்னை விரட்டவாரானே யுன்னை
வேண்டிவந்தேனே ஆசை

சாணங்கள்.

சந்ததமுந்தனைநான் வந்துநாடினேன் பரமனே
வந்துநாடினேன் சிவனேவந்துநாடினேன்
அந்தகன் வாராமல்கூடினேன் பைந்தன்
யான்கொந்துவாடினேன் ஆசை
கொன்றைதும்பை மலருங்கொய்துகோரிவந்தேனே
சிவனே கோரிவந்தேனே பரனேகோரிவந்தேனே
மலரை கொய்துவந்தேனே
நித்தியமுன்னீ றணிந்தேனே ஆசை
பத்தன்மார்க்கண்டன் பாவம்போக்குவல்லவா
பரனேபோக்கும்வல்லவாசிவனே
மறலியைபோக்கும் வல்லவா
மார்க்கண்டன் போற்றும்வல்லவா ஆசை

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

மூடுகியகிடாவிலேறி மூன்னவரெவருங்கண்டு
கிடுகிடத்திடவேசீறி கிட்டியேகொக்கரிக்க
கடுமையாய்ப்பேசியேசி கடவுளின்மேலும்பாசம்
விடுவதேகருமமென்று வேந்தனும்வீசினானே.

வசனம்.

அகோகேளுங்கள் எமபாதையற்ற மகத்துக்களே அதிவேகமா கநடத்தப்பட்ட எருமைக்கிடாவிலேறி அந்தகனவன் மூப்பத்து மூக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் இன்னசிம் புருடர்களும்நடுங்க அதலசுதலபாதாள ஈரேழுபதினாலுலோகங் களும்கிடுகிடுத்திட ஆயிரம்சிரசுடைய ஆதிசேஷன்சீறிவருவதுபோல கிட்டவந்துகொக்கரித்துவிசேஷமானவார்த்தைகளேப்பேசி இனிநா ம்பாசத்தையெறிவது கருமமென்றுகையிலிருந்தபாசத்தினாலே ஈஸ் வரனையும் மார்க்கண்டனையும் சேர்த்து எமதருமராசனவன் எறிந் தான்.

எமதர்மராஜன்சொல்-ராகு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்:

பல்லவி.

வீசினேன்பாராய்-என்பாசத்தால்-வீசினேன்பாராய்

அநுபல்லவி.

வீசினேன்மெத்த ரோஷமாயுந்தன்
நேசவழூர்தலில் கேசனைக்கூடநான்-வீசி

சரணங்கள்.

சிங்கத்தினைக்கண்ட துங்கமதகரிபோல்
பங்கப்படகட்டி செங்கையின்பாசத்தால்-வீசி

அடித்துகெதையிழு விடித்திருப்புலக்கையால்
பிடித்துந்தனுயிர்தனை இடித்தென்தன்பாசத்தால்-வீசி

தொண்டனென்றுந்தனை கொண்டமுக்கண்ணனும்
கண்டபின்னெந்தனை அண்டவாராமலே-வீசி

ஐந்தாவது-நாதனபிரிவு-முற்றிற்று.

ஆருவது நாதனபிரி வு,

மார்க்கண்டேயர்சொல்.

திருக்கடையூர் தேவாரம்

பண்பழம்பஞ்சுரம்

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்

மருவார்கொன்றைமதிசூடி மாணிக்கத்தின்மலிபோலே
வருவார்விடைமேன்மாதோடு மகிழ்ந்தபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரர்க்குந் தேவர்நாகர்தானவற்குஞ்
பெருமான்கடையூர்மயானத்துப் பெரியதிருமானடிகளே. க

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன் மார்பாவேதக்கீதத்தார்
சண்ணோர்நுதலர்குதலையர் காலகாலர்கடையூரர
ரெண்ணூர்புரமூன்றெரிசெய்த விரைவரிமையோரொருபாகம்
பெண்ணுணைவர்மயானத்துப் பெரியதிருமானடிகளே. உ

காயம்புலியம்தாளுடையவர் கண்டரெண்டோட்கடையூர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந் தாமேயாயதலைவனர்
பாயும்விடையொன்றதுவேறிப் பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப் பெரியதிருமானடிகளே; ங

நரைசேர்மலரைங்கணையானை நயனத்தீயாற்பொடிசெய்த
விரையுங்காவலெல்லார்க்கு மில்லையென்னுதருள்செய்வார்
பறையார்முழவம்பட்டோடு பயிலுந்தொண்டர்நவில்கடையூர்
பிறையார்சடையார்மயானத்துப் பெரியதிருமானடிகளே. ச

கொத்தார்கொன்றைமதிசூடிக் கோளுகங்கள்பூணுக
மத்தயானையுரிபோர்த்து மருப்புமாலைதானியார்
பத்திசெய்துபாரிடங்கள் பாடியாடப்பலிகொள்ளும்
பித்தாகடையூர்மயானத்துப் பெரியதிருமானடிகளே. ஞ

துணிவார்குழுங்கோவணமூன் றுடைதுகூடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர் பஞ்சவடிமார்பினங்கவூர்த்
திணிவார்குழையார்புரமூன் றுந் தீவாய்ப்படித்தசேவகனூர்
பிணிவாரடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ச

காராக்கடலினஞ்சுண்ட கண்டர்கவுணாரிறைவாணர்
தேராராசக்கன்போய்விழுந்து சிதையவிசலாலூன்றினை
ரூர்தானலதுவுலகேழு முடையார்க்கொற்றியூராரூர்
போராயிரவாமயானத்துப் பெரியபெருமானடிகளே. எ

வாடாமுலையாடன்னெடு மகிழ்ந்துகானில்வடிவலனுய்க்
கோடாற்கோழற்பின்சென்று குறுகிவிசையன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்து சாவநாருநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. அ

வேழமுறிப்பார்மழுவெடுப்பார் வேள்வியழிப்பார்சிரமறுப்பார்
ஆழியளிப்பாரிதனைக்கன் றுணைச்சுமப்பாரறமுரைப்பா
ரேழைதலைவர்கடையூரி னிறைவாசிறுமான்மழுக்கையர்
பேழைச்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. சு

மாடமல்குகடவீரின் மாலயோரேத்துமாய்த்துப்
பீடைதீரவடியாருக் கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலரூர னம்பிசொன்னதமிழ்கள்
பாடுமடியார்கேட்போர்மேற் பாவமானவைமறையுமே. ஏ

அமர்தலிங்கேசர்சொல்-விருத்தம்.

தொடர்ந்துவந்தெனைப்பூசிக்குந் தொண்டனையஞ்சச்செய்து
உந்தையாய்ப்பாகங்கொண்ட உமையவளும்நடுங்க
படந்தனின்பதவேழத்தின் பதம்படபடப்பாய்சீறி
கடந்தென்மேல்பாசங்கொண்டாய் காலனேயுழிந்திடாயே.

வசனம்.

அடாவாடா ஆஆ ஈமா அதிகொடிய பொல்லாங்கான தீவினை யொழித்து யென்னைத்தேடிவந்துபூசிக்கப்பட்ட எனதுதொண்டரை

கிய மார்க்கண்டனுள்ளம்நடுங்கியவும் எனது இடப்பாகத்தில் இடைவி டாமல்வற்றிருக்கிற உமையவளுடைய அங்கம்பதறவும்மதங்கொண் டயானையின்காலிலேமிதிப்பட்டசற்பம்போலேசீறிவந்து என்னுடை யருத்தராட்சத்தையும் மன நிலேயெண்ணுமல் பாசத்தினுலெறிந்தர் ய்ீ இனிமேலொருநாளும் தொண்டர்களேயழித்துக்கொண்டிருப்பா யாஞல் உன்னுடையபயமே உள்ளமட்டும் மெத்ததொல்லேயாயிருக் கும் உன்னேயினிமேல் உயிருடனே வைக்கவொண்ணுது இதோஎன் னுடையதிருவடியினுலே உன்னேயுதைத்து இன்றுமுதல்காலகாலன் அந்தகாந்தகன் ஏமாரிபென்கிற பெயரைவஹித்தேன் நீ இத்தூடன் ஒழிந்துபோடாஎமர.

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-புங்காகவராளி.

போற்றி சங்கரா போற்றி அரகரா
போற்றி சிவசிவா போற்றினேன்
போற்றி மாமதி புனேந்தவேணியா
போற்றி அரகரா போற்றினேன்
போற்றி கடையூரில் வாழுமீசனே
போற்றி அரகரா போற்றினேன்
போற்றி பாபவி நாசனு தினம்
போற்றி அரகரா போற்றினேன்.

சிவன் மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

மனதிடங்கலங்கியெந்தன் மைந்தனேமார்க்கண்டாகேள்
எனதிடமறியவந்த யேமனேவிழுவுதைத்தேன்
உனதிடமதியைத்தேற்றி யுருதியாயினிமேலப்பா
இத்தூடன்பூசைசெய் திருவென்றும்பதினராக:

வசனம்.

அகோகேளும் மதிகலங்கிநின்ற மார்க்கண்டாஎன்னுலேவந்த எமனேவிழுவுதைத்தேன் இனிஉனக்கொருபயமுமில்லே நிடசித்தமாய் என்னுளும் பதினருகம்மையே பூசைசெய்துக்கொண்டு சுகமாயிரு ப்பாய் மார்க்கண்டா.

கட்டியக்காரன்-விருத்தம்.

சீறியதருமன்றன்னைச் சிதறிடவெல்வேனென்று
கூறியவமூர்தலிங்கர் குமரியேகோலத்தோடு
மீறியகாலன்றன்னை மேதினிமீதில்வீழ்த்தி
தேறியமார்க்கண்டற்குத் திருவருள்புரிந்திட்டாரே.

வ-ம். அகோகேளும் புண்ணியவாசிகளே இந்தப்பிரகாரமாகதோ பாக்கினியாலே பாசத்தையெறிந்த எமதருமராசனை சிதறவடிப்பே னென்று முன்னாளிலே திரிபுராதிகளையும் எரித்த அக்கினியோடு வடவாக்கினியும்எழுந்ததுபோல் அந்தஅமூர்தலிங்கத்துக்குள்ளே இருந்து அண்டகடாகங்களும் வெடித்ததுபோல் வெடிபடச்செய்து எழுந்தருளியபரமசிவனுனவர். சிவாக்ஞையை விராகரித்த எமதருமராஜனை பூமியிலே அவன் சிரீடம் விழும்படி கருணைமிகுந்த திருவடியினாலே உதைத்துக்கையிலிருந்த சூலாயுதத்தினாலே குத்தி தள்ளிப்பக்தசிரோன்மணிக்கும் எமபாதையை ஒழித்தார்.

கட்டியக்காரன்சொல்-தரு.

பல்லவி.

எமனைப்பூமியில் வீழ்த்தினானே பொல்லா
எமனைப்பூமியில் வீழ்த்தினானே.

அநுபல்லவி.

எமனைப்பூமியில்வீழ்த்தி எழையைவாழ்த்தி
சனன்கோபங்கொண்டு ரோஷமதாயுதைத்து (எமனை)

சரணங்கள்.

மார்க்கண்டனுக்கருள்
மண்ணிலெமவாதைதன்னை
காக்கவேகடையூரி
கருதுவோர்களிடர்தீராகால்தனை

கொடுத்து-இந்த
விடுத்து
லடித்து-தன்னை
எடுத்து-எமனை

அண்டபகிரண்டமும் நடுங்கபெரும்
ஆதிசேடன்முடி அருண்டெழுந் தொடுங்க
கொண்டகோலங்களரு மடங்கதேவர்
குறியாசினக்குறியான ரடங்க ஏமனே
பூவுலகோரெவ ரேனும்-சிவ
பூசைசெய்வோர்க்கருள்புகலவே நானும்
யாவுமென்னடக்கலந் தானும்-எமக்
காளாவாரென்றுகடைபூர்வாழ் கோனும்-ஏமனே

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அந்தகனண்டபிண்ட மதிர்ந்திடவீழ்ந்தபோது
நொந்தருண்டவனிமாதும் நொடிதனிலெழுந்துவந்து
கந்தனேயின்றமுக்கட் கடவுளேகருணைவாழ்வே
எந்தனைக்காப்பாயென்று இயல்புடன்வருகின்றாளே.

வ-ம். இந்தப்பிரகாரமாய் உதைப்பட்ட எமனவன் அண்டரண்டங்களும் அதிரவீழ்ந்தபோது எமலோகம் பாழாய்ப்போய் விட்ட படியால் உலகத்திலே விருத்தியடைந்தசெந்துக்களும் நாசமில்லாத படியினாலே பாரம் சுமக்கப்பட்ட பூமாதேவியானவள் சர்வசனத் தியானஞ்செய்து புலம்புகிறவிதங்காண்க.

பூமாதேவி-வருஷ-தரு.

இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

பூமாதேவிவந்தாளே பூதநாதன்முன்
பூமாதேவிவந்தாளே

அநுபல்லவி.

நேமிநாதாவுந்தன் நெறியறியாவுந்தகன்
நேரம்பொறுப்பாய்பூமி பாரம்பொறுக்கேனென்று-பூமி

சரணங்கள்.

ஐயனேயென்றுபோற்றி அந்திவண்ணன்றன்
அடிமலர்தொழுதேற்றி

வையகத்தின்மேல் வாழுமாந்தர்களே
தய்யவதைசெய்தாயென்று துதித்துப்புகழ்ந்து-பூமா
அங்கம்பெட்டிப்பாம்பா ஒடுங்கிஅவனிமாது
அகமிகநடு நடுங்கி
செங்கமலத்தவனும் செய்யநான்முகனுமின்று
எங்கமர்ந்திட்டீர்பாரம் ஏழைபொறுக்கெனென்றும்-பூமா
எமலோகம்பாழாய் போச்சேசதாசிவனே
எடுக்கொணச்சுமை யாச்சே
ஏமனில்லாகொடிப்போதில் சதுர்யுகமாச்சுதென்று
அமலனேசரணின்று அஞ்சிக்கைதீர்ப்பாயென்று-பூமா

பூமாதேவி-பரமசிவனை-நோக்கிச்சொல்-விருத்தம்.

அரகராசிவனேமிக்க வடியார்கள்கருணைவாழ்வே
புரகராயேமன்றண்ணைப் பூமியிலுதைத்துவீழ்த்தி
வரமிகவளித்தாய்வேத மார்க்கண்டனுக்காயிப்போ
நிரந்தராயிந்தபாரம் நேரிழைசுமக்கிலேனே.

பூமாதேவி-புலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-அடதாளம்.

பல்லவி.

பாரஞ்சுமக்கவசமோ-பொல்லாப்
பாவியானதுனிஜமோ



வேலைநடுவினின்று ஆலிலைமேற்றுயின்று
மாலையிட்டாலோக்காக்க மாயாவதாரனை-ஆதி
வாரிதியைமுகந்து வல்லரக்கன்றனைவென்ற
காரணனைவணங்க நமனுக்குளவென்று-ஆதி

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அரனதுசபையைநோக்கி அரியயன்முதலோர்ந்த
பரிணையறிந்துநின்ற பரிமளமாதுமெத்த
உருகியேமனதுவேறாய் ஓலமிட்டடிதிரேவந்து
பெருகியேகண்ணீர்சிந்தப் பேதையும்புலம்புவாளே.

மகாவிஷ்ணுமுன்-பூமாதேவி-புலம்பல்-தரு.

இ-ம்-பூபாளம்-ஜம்பைதாளம்.

ஐயனேஅபயமையா ஆதியேஅபயமையா
லையகமளந்தமாலே மாயவாஅபயமையா
நீலவண்ணமேனியனே நெடியோனேஅபயமையா
கோலமணவாளனரே கொழுநனேஅபயமையா
அடியாளிச்சுமைபொறுக்கேன் ஆதியேஅபயமையா
நொடிதனிலமறலிதன்னை நோகாமலெழுப்புமையா
எந்தனுல்முடியாதையா நசனேசரணமையா
அந்தகன்றனையெழுப்பி அடியாள்தனைக்காருமையா

மகாவிஷ்ணுசொல்-விருத்தம்.

பூதலமாதேகேளாய் பண்புடனெனைநினைந்து
ஏதுநீவந்ததிங்கே இத்தனைதுயரத்தோடே
மாதுநல்லாளேயுந்தன் மனதுளகுறைகள்சொல்லி
நீதுறும்வகையேதிந்தத் திறமையையுரைசெய்வாயே.

வசனம்.

ஆகோவாரும் பெண்ணே பூமாதேவி உன்னுடைய தேகமெல்லாம் நலிந்தபோய்மகாதுக்கத்தோடு இங்கே என்னகாரணமாய்வந்தாய் அந்தவகையைச் சொல்லி உன்னுடைய குறைகள் யாவையுமாற்றி நீயுன்னிருப்பிடம்போய்ச் சேரும்பெண்ணே பூமாதேவி.

பூமாதேவிசொல்-விருத்தம்.

மாயவாதுளசித்தாமா மாதவாசேளீர்நீர்தான்
ஆனதோர்பூமிபாரத்தை யடியாள்சுமக்கொணாதே
நேயமாயானைவேண்டி நிருபனும்தருமன்றன்னை
காயத்தோடெழுப்பிவிட்டுக் கருணைகூர்ந்தனுப்புவாயே

மகாவிஷ்ணுசொல்-விருத்தம்.

கன்னியேசொல்லக்கேளாய் கண்ணுதலோர்முன்சென்று
மன்னியேவந்தனுக்காய் மலரடிதொழுதுபோற்றி
பன்னியமுறைப்படிக்குப் பணிவிடையாவுஞ்செய்து
தன்னியகாலற்காவி தகமையாய்தருவோம்வாராய்.

வசனம்

அகோவாரும் பூமாதேவி உனக்காகநாமும் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும்வந்து அந்தகனையழைப்பித்தருஷிரும் நீதியரப்படவேண்டாம் வாரும்பெண்ணே பூமாதேவி.

பூமாதேவிசொல்-வசனம்.

ஆனல் அப்படியே வருகிறேனையா சுவாமி.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இந்திரன்மால்தேவர்களுங் கூடிக்கொண்டு
சுந்தாபூமிதேவி சுமக்கொணாபாரத்தாங்க
சிந்தியகாலன்றன்னைச் சிக்கிரமெழுப்பவேண்டும்
தந்திரஞ்செய்யவே தான்சிவன்சபைக்குவந்தார்.

வசனம்.

அகோகேளும் சபாரஞ்சன சிரோன்மணிகளே இந்தப்பிரகாரமாய்வந்த முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் பூமாதேவியை அழைத்துக்கொண்டு திருநேத்திரானமிருத்தியஞ்சநாதரை ஸ்தோத்தரிப்பது காண்க.

தேவர்கள்-மிருத்தியஞ்சயர்க்கு-சரணஞ்செய்தல்.

தரு-இ-ம்-அடாணை-அடதாளசாப்பு.

பல்லவி.

சரணஞ்சரணமை-காலகாலனே
சரணஞ்சரணமையா

அநுபல்லவி.

சரணஞ்சரணஞ்சாம்ப சதாசிவனேசரணம்
சரணம்உமைபாகனே சங்கரனேசரணம்சரணம்

சரணங்கள்.

ஆலமுண்டவாசரணம் அந்திவண்ணாசரணம்
கோலமான்மழுவேந்தும் கொன்னறசூடியேசரணம்
கிராயுதனேசரணம் நீலகண்டாசரணம்
பராபரனேசரணம் பரமனேசரணம்சரணம்
மாரனைரிசரணம் மாதவனேசரணம்
நீரணிந்தாய்சரணம் நிறைந்தவனேசரணம்சரணம்

தேவர்கள்சொல்-விருத்தம்.

மதியணிசடையாகேளீர் மண்மீதிலேமன்வீழ்ந்து
விதியினுல்சனனமிஞ்சி விளங்கிடும்பாரந்தன்னை
அதிகமாய்சுமக்கேனென்று அவனியில்புலம்பிக்கொண்டு
சதுரினில்வந்தாளத்தச் சண்டனையெழுப்புவீரே.

வ-ம். சரணஞ் சரணமையா அமூர்தலிங்கேஸ்வரரே உம்முடைய கோபத்தினுலே எமன் வீழ்ந்துவிட்டான் உலகத்தில்மரணமில்லாத தினுல் சனனம் அதிகமாய்விட்டது ஆகையினுல் அவ்வளவுபாரம் பொருக்கச்சகிக்காமல் பூமாதேவியானவள் புலம்புகிறதுகண்டு வந் தோமையா ஏமனை எழுப்பிடவேணுமையா சுவாமி.

அமூர்தலிங்கேசர்சொல்-விருத்தம்.

அண்டரேயனேமாலே அன்புள்ளமுனிவர்மாரே
தொண்டர்கள்வாழுமிந்தத் தொல்லுலகிற்பிறந்தோர்
மண்டலத்தன்னில்வாழ்ந்தால் மாதவம்விளம்புங்கண்டீர்
சண்டனையினிமேலந்த ஜகத்தினிலிருத்தொணுதே.

வ-ம். அகோகேளீர்தேவர்களே நமதடியார்கள் வாழப்பட்ட இந் தப்பூமியிற்பிறந்தோர்கள் யாவரும் பூவுலகின்கண்ணே வசிப்பார்க ளாகில் நமக்குள் அடியார்களேசகமாயிருப்பார்கள் அருந்தவம்மிகு தியாகும் இந்தகாலனை இச்சகத்திலில்லாமல்அழித்துவிடவேணும் தேவர்களே.

தேவர்கள்சொல்-விருத்தம்.

நஞ்சணிகண்டத்தானே நற்றவன்றனக்கன்றீய்ந்த
கொஞ்சமாம்வயதேரெட்டுங் கொடுத்ததுநீயோதும்

நெஞ்சகந் துணிந்தகாலன் நேமதறிந்துவந்தால்
அஞ்சவேஉதைத்துமிந்த அவனியிற்றள்ளலாமோ.

வ-ம். அகோவாரும் அமுர்தலிங்கேஸ்வரனே உமது தொண்டனு மார்க்கண்டேயருக்குநீர்கொடுத்தவயது கசு ஆச்சுதென்றுஅந்த யேமன் தன்னுடைய யமலோகத்துக்கு அழைக்கவந்தால்அவனை அ லறிவிழும்படி உதைத்துப்பூமியிலே தள்ளிவிடுவது உமக்கு தருமந் தானே அமுர்தலிங்கேஸ்வரரே.

அமுர்தலிங்கேஸ்வரர்சொல்-விருத்தம்.

அன்றுமார்க்கண்டேயர்க்கா யளித்ததோர்வயதிரெட்டும்
சென்றுதென்றெண்ணூத்தேடிச் சேவடிபோற்றும்போது
என்றுமேபதினாராக வென்னுளமகிழ்ந்துயிய்ந்த
தொன்றுமிக்காலன்காண துளதெனினுதைத்திட்டேனே.

வ-ம். அகோவாரும் தேவர்களே அந்தகாளிலேமிருகண்டேயமகா முனிவனுடைய கலத்திற்குமகிழ்ந்து இந்தமார்க்கண்டேயனுக்கும் கசு-வயது கொடுத்தேன் அந்தகாளானபின்பு காளுள்ளசிவஸ்தலங் களோறும்போய் அங்குள்ளதத்தவனங்களில்சென்று பூஜாமார்க்கமா யிருக்கிற புஷ்பங்களோக்கொண்டுவந்துபூசைசெய்து சிவபூஜாதுரந்த ரனுவதறிந்து அவனுக்கு எண்ணூம் கசு-வாழ்வாயென்றுநான்வாங் கொடுத்தவை இந்தகாலனறிந்திடாரே நீங்களறிந்துசொல்லுங்கள் தேவர்களே.

தேவர்கள்சொல்-விருத்தம்.

எண்டிசைதன்னில்வாழும் எப்பொருட்கிறையுஞ்சிக்கை
கண்டிடவரிதாமிந்த காலன்செய்பிழையீதென்று
உண்டிமைதனம்பொறுத்து உமையொருபாகாயிப்போ
தண்டியதெழுப்பிதந்தால் தலத்தினிற்போற்றுவோமே.

வ-ம். இந்தயெட்டுத்திக்கிலும் சிவிக்கப்பட்ட சர்வராசிகளுக்கும் அண்டபிண்ட சராசரங்களுக்கும் அதிபதியாயிருக்கிறஉம்முடைய மனைவிஷ்டத்தை யாவராலறியக்கூடும் இந்தயேமன்இப்போசெய்த தப்பிதத்தை மனமொறுத்து அவனை யாதொரு இம்சையுஞ் செய் யாமல் எழுப்பிவிட்டால் இந்த மூப்பத்துமூக்கோடி தேவர்களும் விஷ்ணு பக்தர்களும் உம்மை யென்றும் பூசித்துப்போற்றுவோம் அமுர்தலிங்கேஸ்வரனே.

அமுர்தலிங்கேஸ்வரர்சொல்-விருத்தம்

பத்திபிச்மிகுந்தபேரைப் பகுத்தன்னம்படைக்கின்றரை
இத்திரவடியார்தம்மை யென்பதம்போற்றுவோரை
சுத்தியேவருவாருலுல்-ஞானதைபொருக்கேன்கண்டீர்
சத்தியமாகச்சொன்னேன் சகலருமறியத்தானே.

வசனம்.

அகோகேளும் தேவர்களே அதிபக்தியாய் சிவபூசைசெய்யப்ப ட்டபேரையும் எனதுபக்தர்களென்று வரப்பட்டவர்களுக்கன்னம் படைக்கிறவர்களையும் இதோ இச்தமார்க்கண்டனைப்போல் என்னை க்குறித்து ஒருவில்வஸ்தலமாவது பூசிக்கப்பட்டவர்களையும் என்னு ளும் என்னுடைய காமதேயமான சிவார்ச்சனை பண்ணப்பட்டவர்க ளையும் என்னுடைய சரித்திரங்களை யெழுதுவோர்களையும் வாசிப் போர்களையும் அதிபக்திபூர்வகமாய் கேட்கிறபேர்களையும் இப்படிப் பட்டவர்களை அண்டிவருவோரையும் இத்தயேமன்போய் இம்சிப்பா னையாருல் மனம்பொறுக்கேன் தேவர்களே நீங்கள் இத்தனைபேரு ம் அறியச்சொல்லுகிறேன்.

தேவர்கள்சொல்-விருத்தம்.

அப்பணிசடையிறரே அண்ணலேயமர்வாழ்வே
செப்பமாம்பெரியோரேனும் சிவனடியார்களேனும்
தப்பிதமாகதீண்டில் தண்டனைசெய்வீரையா
ஒப்பியேயேமன்றன்னை உயிருடனெழுப்புவீரே

வசனம்.

அகோவாரும் கெங்காதரனே தேவர்களுடையவாழ்வே கல்ல தவத்தினரையாகிலும் உமதடியார்களையாகிலும் கைபிழையாய் தீ ண்டிவிட்டபோதிலும் தெண்டித்துவிடுவீர் இப்போது எங்களுடை யபோற்றுதலுக்காகமனமிரங்கி யேமனுயிர்கொடுத்து எழுப்பிவிட வேண்டுங் திரிநேத்திரரே.

அமுர்தலிங்கேஸ்வரர்சொல்-விருத்தம்.

மருவிலாதொண்டனை மார்க்கண்டன்றனையெதிர்த்துப்
பெருவினைவினைத்தாயுந்தன்பிழையெலாம்பொறுத்துக்கொண்
டிருவினையகற்றினோர்பால் என்றுமேனுகிடாதே (டேன்
திருவளமிழந்தேன்காலா திறமுடனெழுந்திடாயே.

வசனம்.

அகோவாருமேமா குற்றமற்றதொண்டனென மார்க்கண்டனி டம்யுத்தம்செய்யத்துணிந்து பொல்லாங்கானசெய்கைக்குட்பட்ட உன்னுடைய பிழைகளைப்பொறுத்துக்கொண்டேன் இனிமேல் ஜன னமரணங்கடந்த அருந்தவத்தினர்முன் செல்லாதே சந்தோஷமாய் எழுந்திரும்பிள்ளாய் எமதர்மராசனே.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அண்டர்களெவரும்போற்ற அயன்றிருமாலும்போற்ற
கண்டதோரமூர்தலிங்கா கங்கையுமலரும்வீசி
விண்டலம்புகழும்யேமா விசைவினிலெழுந்திசென்னத்
தொண்டனென்றெழுப்பவந்து தொழுதுரற்றுதிசெய்வாயே.

வசனம்.

அகோகேளுங்கள் புண்ணியவான்களே இந்தப்பிரகாரமாய்தே வர்கள் துதிக்க பிரமதேவன் வணங்க திருமால்போற்ற முனிவர்கள் பூசிக்க சந்தோஷத்தையடைந்து ஸ்ரீமிருத்தியஞ்செயானவர் அன் புகூர்ந்து தன்னுடைய சடாபாரத்திலேயிருக்கிற கங்கையை இறை த்து புஷ்பந்தூவி பிரம்பிணலடித்து எழுந்திரும்யேமாவென்ன தே வாதிகள்யாவரும் கண்களிக்கத்தூங்கி யெழுந்த அரசனைப்போலெ ழுந்து தொண்டனைப்போல் பூசிக்கத்தொடங்கியது காண்க.

எமதர்மராஜன்சொல்-தரு.

இ-ம்-சாப்பு-ஆதிதாளம்.

பல்லவி.

அரகரா-அரகர-சிவசிவா போற்றி.

அநுபல்லவி

அமுர்தலிங்கேசா உன்னடியினைபோற்றி

சரணங்கள்.

அன்பர்கள்கொண்டாடிய வருளேபோற்றி
தொண்டர்தமக்குயர் துணைவனேபோற்றி- அமுர்
கரியுரிதனைப்போர்த்த கடவுளேபோற்றி
காதலுமையுட நாதனேபோற்றி

பூசிக்கவருள் தரும்
பொருப்புச்சிலையாய்

பூதநாதனேபோற்றி
புனிதனேபோற்றி-அரகரா

தேவாரம்.

அத்தனேபோற்றிபோற்றி ஆதியேஅரனேபோற்றி
நித்தனேபோற்றிபோற்றி நீரணிதேவாபோற்றி
மூத்தனேபோற்றிபோற்றி மூவர்க்குமுதல்வாபோற்றி
சித்தனேபோற்றிபோற்றி சோதியின்சுடரேபோற்றி.

எமதருமராஜா-ஈசனுர்க்குச்சொல்-விருத்தம்.

கங்கையுமதியுங்கொன்றை கடுக்கையுஞ்சடையிற்சூடி
அங்கையில்மழுமானேந்தும் அண்ணலேஅரனேபோற்றி
மங்கையோர்பாகம்வைத்த வள்ளலேஅடியார்வாழ்வே
பங்கயப்பாதமென்றும் பாங்குடன்போற்றிபோற்றி.

அமுர்தலிங்கேசுர்சொல்-விருத்தம்.

துதித்தடிதொழுதுநிற்கும் தொண்டனேயேமாகேளாய்
விதித்தவனுருமென்னை வெல்வதிங்கரிதுகண்டாய்
உதித்ததோர்வேந்தர்க்காக உனக்குருவான்தன்தேனுவி
கதித்தவெந்தண்டர்க்குந்தன் கட்டளையகற்றுவாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் எமதர்மராஜனே பூலோகத்திலே அர சாட்சிசெய்யும் மன்னர்களைப்போலே தேவலோகத்திலும் அரசுசெ லுத்திவரும்படியாய் ஒவ்வொருவரும் பிரகிருதிரூபங்களை ஆக்கல்அ ழித்தலென்னும் தொழிலாளிகளை ஏற்படுத்தினதுபோலேபூலோகத் தாரும் அவ்விதமாக நடந்துக்கொண்டு பாவகர்மங்களில்அதிகமாய் வியாபிக்காமலிருக்கும்பொருட்டு காலதண்டம் என்பதாம் உன்னை ஏற்படுத்தி அந்ததண்டனைசெய்யும்படியான வல்லதாரணைபண்ணத் தோம் நீ அதையறியாமல் என்னை நெருங்கிவந்துபிடிக்கும்தொண்டர்களைத் தொடர்ந்துவந்ததினாலே கோபங்கொண்டு உன்னைவிழுங்கினோம்இ னிமேல் இப்படிப்பட்டதொண்டரிடத்தில் உன்னுடையதுஷ்டத் தனத்தைச்செய்யாமல் பயபக்தியுடனே எமபுரத்தையாண்டு கேஷ மமாயிரும்பிள்ளாய் யேமா.

கட்டியக்காரன்சொல்லிருத்தம்.

ஏமனும்எழுந்திருந்து யேகவேஷிடைகொடுத்து
நாதத்தைவில்லாவேந்தி நகைத்துமுப்புரமெரித்த
ஏகநாயகனேபோற்றி யேமனுந்தூதர்சூழ
வேகமாய்திக்குநோக்கு விரைவினில்நடந்திட்டானே.

வசனம்.

அகோகேளும் சபையோர்களே இந்தப்பிரகாரம்அமர்தலிங்க ானமிருத்தியஞ்செயருட்ட அருள்பெற்று பலவாறுபோற்றிசெய்த ஏமனுக்குபுத்திமதிசொல்லி அனுப்பிவைத்தார் எமனுந்தன்னேசூழ்ந்துவந்த தூதர்களோடு எமபுரம்வந்து அசசாட்சிசெய்கிற விதங்காண்க.

எமதர்மராஜன சபைக்குவருகிற விருத்தம்.

அவனியாம்பாக்கியசாலி ஆனதோருயிருக்கெல்லாம்
பவமறுமென்றேகூறிப் படைத்திடுநிலத்தில்வேந்தன்
குவலயத்திட்டம்பார்க்க கொலுவினிலிறவிமைத்தன
நவமணிமாலைமார்பன் நமனுமேவருகின்றாரே.

எமன்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

ஓரடியெடுத்துமெள்ள வொதுங்கியேகொக்கரிக்கும்
ஆரடாகட்டியரோகம் அரசுக்குவந்தோமென்று
வீருடனேடியந்த வீரபாகுவுக்குச்சொல்லி
சீருடன்மோளத்தோடு சிக்கிரமழைத்துவாரீர்.

வ-ம். ஆரடா அடாகரவல்கட்டியரே நாம் எப்போதும்போல அரசுக்கு வந்தோமென்று இந்த அண்டரண்டமும் அறியும்படி பறை யறைவிக்கவேணும் வீரபாகுவை அழைத்துவாருங்கள் கட்டியரே.

வீரபாகு-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தோட்டிஞணண்டே-காசிவாழ்-தோட்டிஞணண்டே

அநுபல்லவி.

மூட்டியபுகைசூடு காட்டினில்பிணமதை
கீட்டியேதடியினல் மாட்டியேவாட்டிடும் (தோட்டி.)

சரணங்கள்.

செத்ததோர்மாடெடுப்பேன்-மனஞ்
சிவத்தினிலநாட்டியேதினமிருப்பேன்
சுத்தமாய்நானிருப்பேன்-கேஞஞ்
சுழுத்தியில்மெத்தசூக்கத்தினிலிருப்பேன்
சத்தியந்தன்னையேசற்றுமறந்திடேன்
கத்தனேமனதினிற்கண்டேமகிழ்ந்திடும் (தோட்டி)

இருகலியிணைத்திடுவேன்-மேல்
ஏகிடாமல்வாய்மூடிடுவேன்
கருவியையொடுக்கிடுவேன்-உந்தி
கமலத்தின்பாலியுங்குடித்திடுவேன்
வரும்வினைகளேயேவகையாரத்தெரிவேன்
அறுத்திடப்பிறவியை அட்சரமறிந்திடும் (தோட்டி)

வேதத்திறணியறியேன்-அந்த
வித்தகன்தங்கிடும்விடமறிவேன்
நாதத்தின்மூதலறிவேன்-விந்து
நாடித்திரண்டிடும்விதமறிவேன்
ஜோதியொளிவையுஞ்சூட்சத்திலறிவேன்
ஆதிகடமுடியையறிந்தவனுகிய (தோட்டி)

பணமிதைமிகத்தேடி-வலகில்
படித்தோரைமதியாமல்-வாயாடி

குணமதிலோர்மோடிஜாதி
கொள்கையிடத்திடபதம்பாடி
மனதாயிவர்கள்மடிந்திடிற்கட்டு
அனலிலுல்வாட்டியேஅடிமேலடியடிக்கும் (தோட்டி)
கட்டியக்காரன்-வீரபாகுவுக்குச்சொல்-கவி.

சரியாகச்சென்றமன்றுனேவந்தாரசுக்கு
வீரபாகுவேதான்மேளத்தோடுவருவாய்ய

வ-ம். கேளடா ஆண்டே நான் மின்னேபோறேன் நீ கூடவே வா டா ஆண்டே.

வீரபாகு-சிங்காரப்பாட்டு.

பல்லவி.

நாநாகன்னேனே-நன்னன்னன்னேனே-நாநாகன்னேனே

அநுபல்லவி.

நாரிசொன்னவாக்குபோலே சாரிவரக்காணேனே (நா)

சரணங்கள்.

திருமால்பதியோராம் இருபிரிவாம்நீரோடை
கருமணியேலூத்திரைக்க உருருண்டிபெண்ணேனே (நா)

ஊருவாள்செல்லியென்று வழிபார்த்துநானிருந்தேன்
தேருவாவொன்றுசுகம் சாராயம்நான்குடித்தேன்
இருவிழிசிறுத்தவள் எவனோடோபோனாளோதான்
நாநாநன்னானே-நன்னன்னநன்னானே
நாரிகுட்டியெனவிட்டு நானும்வேறே-னானேனே
நாநாநன்னானே-நன்னன்னநன்னானே

சேரிப்பையன் சின்னன்னையில் சிக்கியவள்சொக்கினாளோ
காப்பும்கொலுசும் கைநிறைத்தமோதிரமும்
கோப்பியமாய்பூணுமெந்தன் குடும்பிவரக்காணேணே
வேப்பம்பூ வாசனையாள் வீசுமவள்மேனி
பாப்பாரக்குட்டிகள்-பத்திப்பிடித்தாரோ
ஆப்பக்கடைதனிலே-அலுத்துப்படுத்தாளோ
கண்டதிம்பான்நத்தைதிம்பான்-நரைகொக்குபூச்சிதிம்பாள்
தொண்டுகாரனருக்கென்-தோகைவரக்காணேணே
வண்டுகள்சோரா-வன்னத்தலைக்காரி
குண்டுபோல்நாசியும்-கோரைபல்லுக்காரி
தண்டுதனைப்பிடித்தே-தானோடோபோனாளோதான்

பொது-வசனம்.

அடாதோட்டி-நீயாரைக்கூப்பிடுகிறாயடா

வீரவாகு-வசனம்

என்பெஞ்சாரியைகூவுரண்டே வவுத்தியாரே

வீரவாகு-சுந்தரக்கண்ணி.

புதுமையுடன் ஆத்தங்கரை புன்னைமரச்சோலை
புளியம்பூநிறத்தையொத்த பூவைவரக்காணேன்
வாசமலர்தோட்டத்திலே வந்திருக்கச்சொன்னேன்
வாறேனென்று வார்த்தைசொன்ன வஞ்சிவரக்காணேன்
அந்திப்படசந்திப்படஅலைந்துதவிப்பேனே
அன்னமும் வாராவிட்டால் ஆவிவிடுவேனே

பொது-வசனம்.

அடாதோட்டி என்னடா யிப்படிகத்துகிறாய் உன்மனவிலையே வரும்போது கூடஎண்டா கூட்டிக்கொண்டு வாராமற்போய்விட்டாய் இங்குவந்துகத்துவதில் பயனென்னடா தோட்டி.

வீரபாகு-வசனம்.

டேஎம்மவனே கன்னுசொன்னியே உங்கசாதியிலே புருஷன் வேலைக்குப் போனுக்காபெஞ்சாதியுங் கூடவே இஸ்துக்குனு போறதாசொல்லுனுண்டே நல்லசாதி னுண்டே.

வீரவாகு-ஒய்யாரக்கண்ணி.

கருங்குயிலொலியே பெருங்கிளிமொழியே
வருகயேதுதடைவந்தேதா அடிசெல்லியே வருக

கண்டுவெகுநேரமாச்சே வண்டுகளுங்கூவலாச்சே
கொண்டுமயிலெங்கின்றாளோ அடிசெல்லியே வருக

வரும்வழிபார்த்ததுமே இருவிழிபூத்ததே
கருங்குழலிவரக்காணேனே அடிசெல்லியே வருக

மாரும்வழியில்லையே கூறுசொல்லவல்லையே
யாருகூடஆடப்போனாளோ அடிசெல்லியே வருக

பொது-வசனம்.

அடாதோட்டி இன்னேரம்நீகத்தியும் உன்மனவிலைக்காணேம்நீவந்தவேலையைப் பார்த்துக்கொண்டுபோடா தோட்டி.

வீரவாகு-வசனம்.

அடாயெங்கூத்தியாரே பார்த்தா சளுக்குமளுக்கெனு யிக்கிறியேநெத்தியிலென்ன பூச்சியீத்துயிக்கிறையே சாமியைப்பார்த்துயிக்கிறியா ஜம்பம்பண்றியே இதோபார் நானுகாசிவிஸ்வேசனைகூப்பிட்டுஎன்பெஞ்சாரியையிட்டுக்கினுவரச்செல்கிறன்.

வீரவாகு-தங்கச்சிக்கு.

ஆதிசிவமே அறியாப் பரம்பொருளே
சோதிச்சுடரே சுழித்தின் மூன்றே
அனுதிருவே அருமறையோனே
திருக்கடையூரிலாதாளன்பெஞ்சாரி
காணுமே யென்னசெய்வேன்

வசனம்.

அகோகேளும்ஆண்டே நான்திருக்கடையூரானை தோத்திரஞ் செய்தமாத்திரத்திலே இதோகோடி சூரியப்பிரகாசம்போல் எம்பெ ஞ்சாதிவந்தான் பார்த்திகினியா ஆண்டே.

தோட்டிச்சி-வசனம்.

அடாயெங்கருத்தசாமி ஏண்டா என்னை செம்மா செம்மாகூப் பிட்டே இதோவந்தேன் செல்லு.

வீரவாகு-வல்லாசை-கண்ணி.

கொத்தவாணும் கூட்டவாணும் தங்காச்சிக்கண்ணே எனை
கூடிருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
மாடு-மெய்க்கவாணும் தேய்க்கவாணும் செல்லாத்தக்கண்ணே
என்-மின்னிருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
கூய்-கார்ச்சவாணும்கறைக்கவாணும் தங்காச்சிக்கண்ணே
என்-கால்பிடித்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
கண்ணு-வெட்டவாணும்விரிக்கவாணும் செல்லாத்தாக்கண்ணே
என்-கிட்டிருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
கோல்வாங்கவாணும் வைக்கவாணும் தங்காச்சிக்கண்ணே
எனைத்-தாங்கிருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
நாத்து-நடவாணும் தொடவாணும் செல்லாத்தாக்கண்ணே
கிட்டப்படுத்திருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
நெல்-அறிக்கவாணும் அடிக்கவாணும் தங்காச்சிக்கண்ணே
நீ-பெத்திருந்தாபோதுமடி பெஞ்சாரிக்கண்ணே
அடி-சுந்திருந்தாபோதுமடி செல்லாத்தாக்கண்ணே
கொஞ்சங்-கொப்பிபாட்டுசெல்றி கேக்கணும்பெஞ்சாரிக்கண்ணே

தோட்டிச்சி கொப்பிப்பாட்டு.

கொப்பியள்ளோ-கொப்பியள்ளோ-கொப்பியள்ளோ

கொ-முன்னேமுன்னே விநாயகனே முருகாசரஸ்வதியே கொ
கொ-வேலவனுக்குமுன் பிறந்த வேள்முருகனென்மவனே கொ
கொ-கணபதிக்கிபின் பிறந்த கந்தவேளேனென்மவனே கொ
கொ-ஆதியிலேமாயனவன் அரியாக்குலத்தின்வந்தேன் கொ
கொ-ஜாதியெனும் சண்மதத்தை ஜாதிமேலர்யாரேனின்றேன்
கொ-பறையரல்ல நாங்கள்குல பண்பையிகழ்ந்தோன் பறையன்
கொ-சின்னசாதி யல்லதெய்வம் சிறிநடப்போர்சிறியர் கொ
கொ-பெரியசாதி ஆண்டேங்கள் பிறந்தகுலமேதுசொல்வீர் கொ
கொ-மாடிதிம்போம் பறையாங்கள் மாட்டுதிரமார்குடித்தார்
கொ-ஆதியிலேமாடுரித்த ஆண்டவன்பேரென்னசொல்வீர் கொ
கொ-ஆறுவரைவேறுசெய்த அண்ணல்பேரை கொஞ்சம்சொல்வீர்
கொ-மாறிமாறிநீபிறக்க மண்ணில்வருமுறைதேடோ கொ
கொ-பாப்பறையன்தொடுநூலைபடைத்தவன்பேரைச்சொல்லும்
கொ-இன்னமற்றசேதியெல்லாம் எம்புருஷாரீசொல்லடா கொ

தோட்டி-வசனம்.

அப்படியேசொல்கிறேன் கண்ணுகேள்றிளம்மவளே ஆண்டமாரை கிண்டமாரை பார்த்துக்குலுயிருந்திரு கணுக்காலே வெட்டிடுவேன் எம்மவளே.

வீரவாகு-தெம்மாங்கு.

தெந்திரனே தெண்ணனே தெந்தி
நாதாந்தி நாதாந்தி நாரனே
தெந்திரனே தெண்ணனே தெந்தி
நாதந்தி நாதந்தி நாரனே

நானேபெரிய வண்டிகுட்டி-காடோறுக்கெல்லாம்-எஜமாண்டிதானே, பிறந்தவண்டி வீர சாம்பவனென்பெயராமாண்டி தெ

பூநூல்என்னுதடி பலர் பூசிக்கொள்வெண்ணீறு மென்னுதடி
வேணுகாதும்என்னுதடி நாலு வேதந்துதிப்பதுமென்னையடி தெ

வேதமறிந்தவனென்தாண்டி லோகந்தெரியச்செய்தவ ராசாண்டி
தவமுறியாதவன்தாண்டி என்னை தாழ்ந்தவரென்பார் நீகேளே
நாடுபடைத்தவர்மாண்டுவந்தாற்தக்கநலஞ்சொடுப்பவனென்தாண்டி
கோவையறுத்தடைனென்தாண்டி கரி குட்டியுரித்தவனென்தாண்டி
தாயைக்கண்டோனென்தாண்டி எந்தனுக்குவந்தவள்நீதாண்டி

தோடிடிச்சி வசனம்.

அடா என்சாமி ஆண்டமார்ஜாதியிக்குதே அதுக்குமேல் நம் மூதேயிக்குதடா எனக்குநீயேசரி உனக்குநானேசரி.

தோட்டி முத்துவீராய் மெட்டு.

மதனவில்லடிநீயெனக்குகுட்டி மாரன்கணையடிநானுனக்கு
மதனவில்லுக்கும்மாரன்கணைக்குமேமாற்றலுண்டோடிசெல்லாயி

தோட்டிச்சி.

தாழைப்பூவடா நானுனக்குசாமி தழைக்கும்வித்தடா நீயெனக்கு
தாழைப்பூவுக்கும் தழைக்கும்வித்துக்கும் தாழ்மையுமேதடா வெ
[ட்டியானே.

தோட்டி.

மட்டிப்பாலடிநானுனக்குகுட்டி மதனபூவடி நீயெனக்கு
மட்டிப்பாலுக்கும்மதனப்பூவுக்கும் மாறுதலேதடிசெல்லாயி

தோட்டிடப்பா.

தோம்தர தோம்தரானா கேள்ரா அண்ணே தோம்தர தோம்தரானா.

வாறுகண்ணிமாறிவயறி கேள்ரா அண்ணே
வந்திருப்பாளெந்தனன்பாஞ் சுந்தரக்கண்ணுள் தோ

ஆட்டிறைச்சிமாட்டுக்கரியும் கேள்ரா அண்ணே
ஆசையுடனேபுசிக்கும் நேசியாம்பெண்ணுள் தோ

கொள்ளுதண்ணிகள்ளுத்தண்ணியும்கேள்ரா அண்ணே
கொண்டுவரிலண்டிடாத சண்டாம்பெண்ணுள் தோ

சிற்றிடையுமுற்றகுணம் கேள்ரா அண்ணே
சேர்ந்திருக்குமெந்தனுடன் சார்ந்திடுங்கண்ணுள் தோ

தண்ணீயறியுந்தக்கதையுங் கேள்ரா அண்ணே
தாயிருக்குமிடந்தெரியு நேரிழைகண்ணுள் தோ

தோட்டிச்சி வசனம்.

அடா எம்புருசா நீசொன்னதெல்லா நண்ணுதா இக்குது அ தெல்லாம் அப்படியிருக்கட்டும் நாணுகூடப்போயி எம்மாண்டே ஆ டயே பாக்கணும் கொஞ்சங்காசுகொடடா எம்மவனே.

தோட்டிச்சி ஆனந்தக்கண்ணி.

காசிருந்தா கொண்டுவாடா-கறுத்தழுடையா
காசிருந்தா கொண்டுவாடா

சல்லாவாங்கிகட்டவேணும் சாத்துபொட்டுதீட்டவேணும்
மல்லிகைப்பூவாங்கவேணும் மாறுமேலேவைக்கவேணும்
கள்ளுவாங்கிகுடிக்கவேணும் கைகலந்து ஆடவேணும்
கடைத்தெருவேபோகவேணும் கடலவெல்லம்வாங்கவேணும்
விட்ப்பயலேபாக்கவேணும் வெள்ளைக்கொடிபோடவேணும்
படுத்துக்குணுஆடவேணும் பக்கத்திலேநீயிருடா ஓ
சேரிவிட்டுஓடவேணும் சீமைசுத்திபார்க்கவேணும்
வாரிவாரிகுடிக்கவேணும் வந்தவனேவய்க்கவேணும்
காரிமேலேறவேணும கண்சிமிட்டிபாடாடீ

தோட்டி-வசனம்:

அடி யிவளே அவந்தாயிருக்கிறானே கெடாமேலே யேறிக்கினு காலேகிளப்பினானே அவன் கூப்பிட்டானெண்ணு இதோ ஆண்டே வந்து கூப்பிடுகிறானாண்போய் பாரே னீபத்திரமாயிரடி என்பெஞ் சாதி.

வீரபாகுசொல்-விருத்தம்,

தும்புறேனடியென்னண்டே தாதுரைக்கதியா ஆண்டே
தும்புறேனடியன்வீரத்தாளத்தின்மேளத்தோடு
தும்புரேனெனையழைத்த தேனையாயேமராசே
தும்புறேன்சொல்லுஞ்சுவாமி சொற்படிசெய்குவேனே.

சாமிசரணம்புரிகிறேன் என்னையழைத்தகாரியம்அடியேனுக்கு சொல்லவேணுஞ்சுவாமி பரமேஸ்வரா.

கட்டியக்காரன் எமனுக்குச்சொல் பரணி.

சண்டாசரணம்தேவிருரைத்தபடியேமேளமாட்டிக்
கொண்டேவீரபாகுத்தகொலமுன்வந்தான்மன்னனே.

எமன்கட்டியக்காரனுக்குச்சொல் விருத்தம்.

கொலவினிலெச்சரித்துக்கொண்டுநில்கட்டியரேகேள்
வலுமையாய்பாசன்சூழமசானம்தனிலிருக்கும்
தலைமையாம்வீரபாகுதனக்குகாலன்வந்தேனென்று
சொலையெங்கும்பறையறைந்துதரிதமாய்வரச்சொல்லீரே.

வசனம்.

ஆரடா அடாகொலமுன்னே யெச்சரிக்குங்கட்டியக்காரரேவ
ந்தவீரபாகுவுக்கு காலனெப்போதும்போல அரசுக்குவந்தேனென்று
சொல்லி யித்த அண்டரண்டகவகண்டங்களிலு முண்டாகிய எண்
பத்துகாண்கு நூருயிரஞ்சீவராசிகளும் அறியத்தக்கதாகபறையறை
வித்து வாச்சொல்லுங்களப்பா.

கட்டியக்காரன்வீரபாகுவுக்குச்சொல்விருத்தம்.

கொண்டுமேளத்தைமாட்டிக்கொண்டுவந்தவீரபாகு
கட்டளைசொல்வேனந்தக்காலறக்கேளடாநீ

கட்டியக்காரன் இராஜனுக்குச்சொல் கவி.

திட்டமாய்காலனே தென்றிசையரசன்வந்தாரென்று
பட்டணமெங்குமோடிப் பறையரைவித்துவாராய்.

வசனம்.

ஆரடா அடா வீரபாகு எப்போதும்போலே முன்னுண்டேயே
மன் தென்றிசையாளவந்தானென்று அண்டரண்ட நவகண்டங்களி
லுண்டான எறும்புகடை எண்பத்துகாங்கு நூருயிரம் சீவராசிகளு
ங்கேட்டு அதிசயப்படும்படியாய் பறையறைவித்து அதிசீக்கிரத்தில்
வாடா வீரபாகுவே.

வீரபாகுகட்டியக்காரனுக்குச் சொல்கவி.

அண்டமுங்கேட்க அவனியுங்கேட்க
தண்டகடலொலிபோற் சாற்றுவேன்பறையை

தேர்ட்டிபறைகொட்டுகிறதரு தெம்மாங்கு.

கேட்டீரோகேட்டீரோ கேளுங்கள்
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கிடுசில்லாம்
மூன்ஞண்டி ருந்தயெமன்முத்திபெற்றுவந்தானென்று
மூட்டுபூச்சியறியப்பறைபோட்டுவரச்சொன்ஞனே
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்
இல்லாதிருந்தயேமனெழுந்தோடிவந்தாரென்று
எறும்புமறியப்பறைவிரும்பிடச்சொன்ஞனே
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கிடிசில்லாம்
ஓப்பாதபிழைசெய்து உறைபட்டுவந்தானென்று
ஊராரறிப்பறைகூறிவரச்சொன்ஞனே
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்.

தோட்டிசொல் கவி.

மகராஜராஜனே மட்டில்லாப்பறையைச்
சகலருமறியச்சாற்றிவந்தேனே

வசனம்.

சாமி அப்படிக்கே சகலருமறிய பறையறைவித்து வந்தேன்சுவாமி.

கட்டியக்காரன் இராஜனுக்குச்சொல்கவி.

தூறைமகப்பதியே சொன்னசொற்படியே
பறையறைவித்துப் உறையனும்வந்தான்

சரணஞ்சரணம் தென்றிசைக்கதிபனை எமதர்மராஜனே அப்படியே தோட்டி பறையறைவித்து வந்தானையா மகாராஜனே.

இராசன் கட்டியக்காரனுக்குச்சொல்கவி.

நிட்டிப்போட்டான் நெடியசேவகரே
தோட்டியைபோகச்சொலலிடுவீரே

கட்டியக்காரன் வீரபாகுவுக்குச்சொல்கவி.

பணிந்திடும்வீரபாகுவேகளரய்
தணிந்திடும்சுடலைதனக்குநீடவாய்

பொது-விருத்தம்.

மற்றையவரேனுமிந்திர மாதவர்முனிவர்கூடக்
குறைவிலாவேமனேடு கூடிதென்புறத்திற்சென்று
நிறைந்தனன்மருடஞ்சூட்டி நெடியரசாள்வாயென்னி
பரையதுமுழங்கியேமன் பண்புடனரசாண்டானே.

வசனம்.

இத்தப்பிரகாரமாய்ப் பிரமதேவன் தேவேந்திரர் மகாவிஷ்ணுமுனிவர்கள் முதலானபேர்களும் அந்தியமனுடனேகூடபோய் எமபுரம் பட்டாபிஷேகஞ்செய்வித்து அழியாதஅரசாள்வாயென்று ஆசீர்வதித்துப்போயினர் அன்றுமுதல் காளதுவரைக்கும் எமன்அரசாட்சிசெய்துக்கொண்டு வருகிறதுகாண்க.

இதுவமது-விருத்தம்.

ஏமனும்வீற்றிருந்து இனியதூதுவரைப்பார்த்து
கோமமேஇடைத்ததென்று சிறுவரேகோளிப்போ
நேமமாய்சிவகாமத்தை நெஞ்சிடைநினைப்போர்தம்பால்
காமனுகொண்ணுதென்று கவின்றுகட்டளையிட்டானே.

வசனம்.

இத்தப்பிரகாரமாய் அரசுபெற்ற எமனுன்வன் தன்னுடையதூர்களைப்பார்த்து உமக்குகன்மைஇடைத்தது இன்றுமுதல்சிவனையாவது விஷ்ணுவையாவது நினைத்து பக்திசெய்பவர்களிடத்திலே கம்முடைய விசாரணைநீங்கி அரசசெலுத்திவருங்களென்றுகட்டளையிட்டபிற்பாடு நடக்கிறவிதங்காண்க.

இதுவமது விருத்தம்.

தூதருங்கேட்டுநின்று துயரங்களைத்தும்நீக்கி
காதகஞ்செய்வோர்பக்கல் கடுகியேசெல்வோமென்று
நீதமாய்தேவர்சொன்ன நெறிதனைமறவோமென்று
வேதமார்க்கண்டன்முன்னே விளக்கியேவீற்றிருந்தார்.

வசனம்.

இத்தப்பிரகாரமாகச்சொன்ன எமதர்மராசனுடைய ஆச்ஞையக்கண்டதூதர்கள் இனிமேல்சிவபத்தர் விஷ்ணுபத்தர் இருக்குமிடத்துக்குச் செல்லுவதில்லையென்றுதேவர்களுடையதிருவாக்கினஅருள் தப்புவதில்லையென்றுஞ்சொல்லி வேதகலாலேசோதப்பட்டஎமதர்மராசன் பக்கத்தில்தானே யிருந்தார்கள்.

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

அன்பருக்கன்பராகி அடியவர்க்கெளியராகி
செம்பொனின்பதங்கள்காட்டி தீவினைதன்னையோட்டி

நம்பினெத்தனுக்காய் நமன்தனையுதைத்தெவர்க்கும்
இன்பமாயருளைத்தந்தீர் யீசனேபோற்றிபோற்றி.

வசனம்.

அகோசரணஞ்சரணமையாசுவாமி அன்பருக்கன்பராயும் அடியார்க்கடியாராயிருந்து பொற்பதந்தஞ்துமுற்பவத்தையோட்டிநம்பிவந்தயெத்தனைக்காத்து நமனையுமுதைத்து தேவர்களுக்கும்சந்தோஷமுண்டாகியருளிய மிருத்தியஞ்செயமூர்த்தியே சரணஞ்சரணஞ்சரணமையா சுவாமி.

அமிர்தலிங்கேசர்சொல்விருத்தம்.

மெத்தவேதவங்கள்செய்ய மேவுமார்க்கண்டாகேளாய்
உத்தமாவுத்தனுலே வும்பர்களெவருமுய்ந்தார்
மெத்தவேசந்தோஷித்தேன் விளங்கவேவலப்பாகத்தில்
சுத்தனேயென்னைப்போற்றிச் சுகத்துடனிருந்திடாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா உன்தனுலே தேவர்களுக்கும் அருந்தவத்தோர்களுக்கும்சிவபூசைதுறந்தவர்களுக்கும் அரியினதுபத்தசிரோண்மணிகளுக்கும் எமவாதைக்குநீங்கியிருக்க அனுக்கிரகித்தோம் சகலரும் சந்தோஷித்துமனங்களிக்க எனதுசிவகணங்களுடனே கூடியிரும்பிள்ளாய் மார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்விருத்தம்.

இருந்திடவருள்செய்தீர் எந்தன்மேல்கிருபைவைத்து
அருந்தவமிகுந்தவெந்த ணன்னையும்பிதாவினுக்கும்
பொருந்தியதவத்தில்மிக்க புனிதர்களாகச்செய்து
திருந்தியகாட்சிகல்கத் திருவுளமிரங்கிடீரே.

வசனம்.

அகோசரணஞ் சரணமையா சுவாமி என்னைச்சிவகணங்களுடனே சேர்ந்திருக்க கிருபைசெய்தீர் அருந்தவத்தில் மிகுந்தோராய் என்தந்தைதாயார் யிருவருக்கும் திருக்காட்சிகொடுத்தருளவேணுமையாசுவாமி.

அமிர்தலிங்கேசர்சொல்விருத்தம்:

அடியவர்தமக்குநாமும்அடக்கமாயிருப்போமிந்த
படிதனிற்பிறந்தபேர்கள்பத்தியாயெனைப்பூசித்தால்
குடியதாயவிடத்தில்கூடிநாமிருப்போங்கண்டாய்
படியிலுன்தந்தைதாய்க்குப்பதவிதந்தருளுவோமே.

வசனம்

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா என்னைப் பூசிக்கப்பட்ட வர்களுக்குள்ளே அடக்கமானவனுகையால் இந்தப்பூலோகத்திலே

என்னைப்பூசிப்பவளிடத்தில் சதாகாலமும்வாழ்ந்திருப்பேன்எனக் குக்தொண்டுசெய்யும் உன்தாய்தந்தையருக்கும் காட்சியருள்செய் கிறேம்.

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

திருந்தவேஅமர்தலிங்கர் செல்வனுக்கீதுரைக்க
பெருந்தவத்தோர்கள்போற்ற பிரிந்திடாதேவர்சூழ
பொருந்திடசிவநாமத்திற் பொதித்தமந்திரஞ்செபித்து
அருந்தவமிருகண்டேயர் அரன்திருச்சபைக்குவந்தார்

வசனம்

இந்தப்பிரகாரம்தேவதேவோத்தமரான அமர்தலிங்கேசுரர்அ ருளிச்செய்த மூப்பத்துமூக்கோடி தேவர்களும் புகழப்பட்டமிருக ண்டேயர் சபைக்கு வருவதுகாண்க.

மிருகண்டேயர் வருகிற ஆகிரி அடதாளம்.

பல்லவி.

முனிவர்வந்தாரே மிருகண்ட
முனிவர்வந்தாரே

அநுபல்லவி

பனிமலர்கொண்டு பதம்போற்றிபூசிக்கும்
பாவைமருத்வதி தேவியுடன் முனிவர்

சரணங்கள்

பண்ணியகவத்தினால் புண்ணியக்தெரியுமென்று
பகர்ந்திடுமுலகோர் பழிமொழிப்பொய்யாமல்
நண்ணியகைலாய நாதரருட்பெற
நன்றெவருங்கொண் டோடியணபுகூற முனிவர்

மக்கள்முகம்பார்த்தோர் துக்கமடையாரென்று
மாதவன்தன்னருள் கொண்டுவரத்தான்கொண்டு
அக்கரையாகச் செய்யதவத்தால்வந்த
அருந்தவமைந்தன்மார்க் கண்டனுடன்கூடி முனிவர்

அஞ்சாமலிருப்போ மினிப்பிறவாமலே
அமலபதமலரை யடைந்தோநாமென்றும்
பஞ்சாட்சரமந் திரங்கள்ஜெபித்துப்
பாங்கானகைலேசன் பாதம்நினைந்த முனிவர்

சட்டியக்காரன் சொல் விருத்தம்

வந்தமாமுனிவர்தாமும் மருத்வபூமாதுங்கூடி
சிந்தையார்களிகூர்வாசன் விமலைபொற்பாதகாடி
செந்தளிர்செய்ததாலே சிருளமகலையின்று
அந்தமாலையில்யாம்வேயடைந்தனனெனப்பணிந்தார்

வசனம்

இத்தப்பிரகாரமாக மாதவத்தில்மிகுந்த மிருகண்டேயரும்மரு த்தவதியம்மாருமுன்னாக்கிரசித்தாய் பக்திமோசனமடைந்தோ ம்இத்தப்பூமியில் இனிபிறந்து துன்பமடையாமல் அரியதவமியற்றி ஞானபுத்திரர்களைகுணசீலனானகுழந்தையைப்பெற்று ஆழகிய யு வபாலகனாயபதவியை அடைந்தோமென்று சுப்பாவே தோத்தரித் திறைஞ்சினார்கள்.

மிருகண்டேயர்சொல்-தரு-இ-ம்-மிலகரி-தாளம்ஆதி

பல்லவி

கண்களிக்கநேரம் — நித்தியானந்த
கடலில்நின்றுகளிக்கநேரம்

அநுபல்லவி

அண்டர்தொழுந்திருக் — கடையூரினில்மேர்ந்து
அமுர்தலிங்கேசனை — அபிராமீசனை கண்டு

சரணங்கள்

முத்திக்குரித்தாய் — முனைத்தெழுங்கடலை
முப்பத்துமூக்கோடி — தேவர்களைதுயரை
பத்தாய்தொழுதும் — பலவினைகளைபோக்கி
பரபதிவைபும — பத்தியுக்கோக்கி கண்டு

வேதாகமங்கள் — புகழும்பிரக்யாதனை
விளைதீர்த்தருள்கர — விறபொற்பாதனை
தோத்தவந்தந்தெமைத் — துடர்த்தபெருமையை
தானபமகற்றிப்பாலன் — றந்தவரிமையைக் கண்டு

திக்கினைத்தும்புகழ் — கொண்டமாதேவனை
தீதரும்பிறவிக — டற்குருநாதனை
எகவல்லியுமெழித் — தருள்தந்தசிலனை
வமனைஉதத்துயெழுப் — பியவனுகூலனை கண்டு

மிருகண்டேயர்சொல் விருத்தம்.

அடியவர்க்கெளியாய்போற்றி ஆதியேபரனேபோற்றி
படிதனிலெமைவீழப் பதைத்திடுமுதத்தாய்போற்றி

கடிதனில்மாரன்றன்னைக் கண்ணினற்காய்ந்தாய்போற்றி
வடிவுளமகனைக்காத்த வள்ளலேபோற்றிபோற்றி.

வசனம்.

அரகர சிவசிவா அடியவர்க்கெளியா திரிபுராந்தனே ஆதிம
த்தியானந்தா உனதுஅடியனுன எனதுதவக்கொழுந்தைக்காத்தசா
ம்பசிவனே அமுர்தலிங்கேசா போற்றிபோற்றி.

அமுர்தலிங்கேஸ்வரர்சொல்-விருத்தம்.

அருந்தவமுனியேகேளர்ய் அடவியில்தவம்பீசெய்து
இருந்திடம்வேளைதன்னில் நிஷபமீதேறிவந்து
பொருந்தவேயுமக்குயாமும் புத்திரனளித்தேன்கண்டாய்
திருந்தவுன்னடியாளோடென் திருப்பதஞ்சேருவாயே

வசனம்.

அகோவாரும் மிருகண்டேயமகாரிஷியேநீங்கள்தம்பதிசமேத
ராய்எனக்குரித்தச் செய்ததவத்திற்குமெய்த்த நிஷபவாகனமே
றிவந்துஉமக்கு-கசு-வயதுள்ளபுத்திரனையருளிச்செய்தோம் அவன்
உனதுபுத்திரனென்று என்பக்தசிரோமணியானமார்க்கண்டன் செ
ய்யத்தொடக்கிய சிவபூசை மகிமையினல் என்றும்-கசு-வயதாகக்
கொடுத்தோம் நீங்கள் அவனுடைய பிரியானவர்களாகையால் உ
ங்களுக்குரும்கைலாயபதவியை யருளிசெய்தோம் இன்றுமுதல் உங்க
ளுக்குப்பாவம்விமோசனமாய்விட்டது என்னுடைய சிவகணங்களு
டனேகூடி வாழ்ந்திரும் மிருகண்டேயமகாமுனியே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

யெண்ணியதவத்திலுமே யிகத்தினிலெவருமிந்த
புண்ணியதவத்திற்சொர்க்கம் யிகத்தினிலெவருமிந்த
மண்ணினையுண்டமாயன் மறையவர்முதலோர்சும்மை
கண்ணினுற்காணப்பெற்றேன் கண்கண்டகாட்சிதானே.

வசனம்.

அரகரா ஆனந்தகடனனனன்ஜயனே எண்ணிறந்ததவமகிமை
யிலுமே இகத்திலேயெவர்களுக்கும் இந்தபுண்ணியதவத்திலே எங்க
ளேத்தவிர சொர்க்கலோகமடைந்தா ரெவருமில்லை இத்தப்பூமியிலே
யிம்மதேவர் மகாவிஷ்ணுமுதலான முப்பத்துமுக்கோடி தேவர்களை
யும்காற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளையும்கண்கெளித்து பதவிஅடைந்
தோம் என்னையனே, அகார.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

சொர்க்கத்துக்கதிபனுஞ் சோதியோர்முதலாமேனோரும்
மூக்கண்ணனருளினாலே முனிமிருகண்டர் சும்மை
ஒக்கவேகட்டிக்கொண்டு உயர்ந்தகற்குதவிசேர்க்க
அக்கணமார்க்கண்டேயர் அன்புடன்வணங்கிச்சொல்வார்.

வசனம்.

அகோகேளும் சுவைபோர்களே முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும் யட்சகின்னரர் கிம்புருடர் காரதர் சகலமானவர்களுடனே மிருகண்டமகாமுனியும் மருத்வதிதேவியும் சுவர்க்கலோக மடைந்தபின்பு மார்க்கண்டேய மகாமுனிவரானவர் லோகாநுக்ரகமாய் அடிவணங்கி அமுர்தலிங்கேஸ்வரரை வரங்கட்பதுகாண்க

தரு-இ-ம்-பூபாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

மார்க்கண்டன்-சொல்.

அத்தாதிருக்கடையூ ரமுர்தலிங்கேசரா
ஆரியவரங்கொடுத்தது அண்ணேதங்தையைக்காத்தீர்
பத்தாம்லயதெண்ணும் பதிஞறெனைக்காதீர்
பரிலேமனவாராப் பரிவெனக்கருள்வீர்

அமுர்தலிங்கேஸ்வரர்-சொல்.

உத்தமமார்க்கண்டா உனதுதாய்தங்தையும்
உம்பர்களுடன்கூடி உறையச்சித்தமகிழ்ந்தேன்
இத்தலத்தணினென்றும் ஏமவ்வாராவரம்
இன்றுதந்தேனினி என்னமார்க்கண்டா

மார்க்கண்டன்-சொல்.

இந்தமகிமையை எழுதிப்படிப்போர்க்கும்
இச்சையுடனவந்து கேட்டுமகிழ்வோருக்கும்
பந்தபாசமகற்றிப் பதவிதந்திடுவாய்
பரிவாகத்தந்தருளும் பசுபதிஞதா

அமுர்தலிங்கேசர்-சொல்.

அவனியிற்சிவத்தை யெழுதிப்படிப்போர்க்கும்
அன்புடனேவந்து தொழுதடிபணிவோர்க்கும்
தவனிலிதன்னில் தவருதிருப்போர்க்கும்
தயவுடனேமோட்சம் தந்தேன்மார்க்கண்டா

கட்டியக்காரன் சொல்-விருத்தம்.

பவக்கடல்கடக்கமுக்கட் பசுபதி யிடையி லேறி
அவனியிலமராதேவ ராவேவருமகிழ்ச்சிகூற
தவமிருகண்டேயருக்குத் தனையனையருளிச்செய்து
சிவபதமவர்க்குயீந்து சிருடன்கைலைசென்றார்

வசனம்.

அகோகேளும் சிவன்முத்தர்களேபிறவியென்னும் சமுசாரத்தின் கரைகடத்தியாளப்பட்ட பரமசிவனுனவர் திருக்கைலையைவிட்டு ரிஷபவாகனரூடராய்ப் பூலோகத்துக்குவந்து மாதவமிருந்த மிருகண்டேயருக்கு நல்லதவத்தையுடைய சிவகணத்திலொருவரை குழந்தையாகத்திருவுளம்புரிந்து அக்குழந்தை யென்றும்பதினெனவயதுகொடித்து ஏமனே தன்னுடைய பக்தர்பாலனுகாமல் ஆக்யாபனஞ்செய்து அந்ததாய்தந்தைமூவரையும் தன்னுடைய திருக்கைலைக்கழைத்து யிருக்கிறபடி சகலபுண்ணியபுருஷருக்கும் உபயோகப்படும்பொருட்டு தமிழிலே நாடகமாக இயற்றப்பட்டது.

விருத்தம்.

திங்களுங்கங்கைதும்பை திவ்யவறுகுகொன்றை
பங்கயமலருஞ்சூடும் பார்வதிபாகனுக்கு
னங்களுநிறைந்தவாழ்வு செவர்க்குசற்றவத்தோருக்கும்
தங்கமார்க்கண்டனுக்கும் தூயமங்களஞ்சொல்வேனே.

மங்களம்-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களமார்க்கண்டனுக்கும் மங்களம்
மங்களமார்க்கண்டனுக்கும் மங்களம்

அநுபல்லவி.

திங்களணிவேணியர்க்கும் திருக்கடையூரனுக்கும்
மங்கையபிராமியற்கும் மாதவத்தோர்களுக்கும்-மங்களம்

சரணங்கள்.

ஐங்கரன்முருகனுக்கும் அம்மைவள்ளிதெய்வானைக்கும்
சங்குசக்கரகோதண்டனுக்கும்சுதர்முகப்பிரமாவுக்குமங்களம்
காலனையுதைத்திருக் கடையூர்தனுக்கும்
சிலம்பிருகண்டனுக்கும் தேவிபருத்வியார்க்கும்-மங்க

மாதவத்தோர்களுக்கும் மன்னரெவர்க்கட்கும்
ஞானபுராணிகர்முதல் சுத்தவியாபகர்கட்கும்மங்க

வாழி விருத்தம்.

திங்கள்முடி செஞ்சடையா னருளாலுற்ற
சேணுலகோ ராதிபுரி யுள்ளோர்கட்கும்
இங்கிதஞ்சேர்செந்தீ ஆச்சாரப்பன்தெருவு
பார்த்தசாதிநாயுடு ஸ்ரீபத்மநாபவிலாசஆச்சியந்திரசாலையி
லமைத்தமார்க்கண்டன் சரிதையாகும்
துங்கமிகுநாடகத்தைக் கண்ணுற்றோர்கள்

நான்காவது ஆறுபிரிவுகளடங்கிய

நூதனப்பதிப்பு.

மார்க்கண்டேயர் நாடகம்.

முற்றிற்று.